
கல்கி
எஸ்.பாலு
KALKI 24.11.1963
30 காசு

கல்கி

பொருளடக்கம்




விளக்கம் 37-ம் பக்கம்

சோபகிருது, கார்த்திகை 8 ★ நவம்பர் 24

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

புகைபிடிக்கும் இங்கிதம்.

பாத்திரமறிந்து சாம்பலிடு



சிகரெட்டுச் சாம்பலைச் சுற்றுமுற்றும் சிந்தாமலிருப்பது உங்கள் ஒழுக்கத்திற்கு உதவும். சாம்பல் படிக்கம் (ஆஷ் ட்ரே) தென்படவில்லையெனில் கேட்டுப் பெறுவதே மேல். அதை விட்டு, புகைத்த துணுக்குகளைத் தீப் பெட்டிக்குள்ளோ வேறு எதனுள்ளோ திணித்து வைப்பது ஆபத்தாக முடியலாம்.

உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனாமா



இழுக்க
இழுக்க
இன்பம்-
இறுதிவரை

விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 444 TAM. Greens' Advtg.



மலர் 23 | இதழ் 17

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

கல்வித் துறைக் குளறுபடிகள்


பழைய ஏற்பாடுகளையே விடாப்பிடியாகக் கொள்ளாமல், புதுமைகளை நாடிச் செல்வது நல்லதுதான். ஆனால் இவ்விதம் மாறுதல்களைத் தேடிப் பரீட்சை பார்க்கும் போது மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். முக்கியமாக, தேச நலன்களைக் குறித்த விஷயங்களில் மாறுபாடுகள் செய்யும்போது நிகழக்கூடிய எதிர் விளைவுகளை முன்கூட்டியே ஆலோசித்து, நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இந்த நாட்டின் எதிர்காலப் பிரஜைகளான குழந்தைகளின் கல்வித் திட்டங்களில் சீர்திருத்தம் செய்ய முற்படும் போது இந்த ஜாக்கிரதை மிகவும் அவசியமாகும். இன்று ஒரு தவறான திட்டத்தைக் கொண்டுவந்து இன்னும் சில ஆண்டுகளுக்குப் பின் தவற்றை உணர்ந்து அதனை ரத்து செய்துவிடுவதால் முழுப் பரிகாரம் கண்டுவிட முடியாது. இடைக்காலத்தில் கல்வி பயின்றவர்கள் புதிய ஏற்பாட்டுக்கும் வர முடியாமல் பழைய ஏற்பாட்டிலும் இருக்க முடியாமல் இரண்டுங்கெட்டானாகத் தத்தளிப்பார்கள்.

துரதிர்ஷ்டவசமாக நம் தேசத்தின் பெரும் மூலதனமான மாணவர் சமுதாயத்தில் இத்தகைய குழப்பத்தைக் கடந்த சில ஆண்டுகளாகக் கண்டு வருகிறோம்.

ஹிந்திக்குப் பாடத் திட்டத்தில் இடம் தருவதா வேண்டாமா என்று புரியாமல் ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒரு காலுமாகச் செய்த ஏற்பாடு, பள்ளியில் வகுப்புக்களை 'ஸ்டாண்டர்ட்' என்ற பெயரில் மாற்றியது, இண்டர்மீடியட்டைப் புகுமுக வகுப்பாக (Pre-University Course) மாற்றியது, பட்டப் படிப்பின் ஆண்டுக் காலத்தை மாற்றி அமைத்தது, போதனை மொழிப் பிரச்னை இவற்றால் நமது மாணவர் சமுதாயத்தைப் பெரும் குழப்பத்துக்கு ஆளாக்கியாயிற்று.

தற்போது இந்தப் பழைய அநுபவத்தால் எவ்விதப் படிப்பினையும் பெறாமல் மந்திரிகள் – உப அத்யட்சகர்கள் மகாநாட்டில் சில புதிய முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். பள்ளிப் படிப்பு எத்தனை ஆண்டுகள், பட்டப் படிப்பு எத்தனை ஆண்டுகள் என்பதில் பெருத்த விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. புகுமுக வகுப்பு என்ற பெயரில் ஓராண்டுக்குள் ஓராயிரம் விஷயங்களை மாணவர்களுக்குப் புகட்டி, ஆண்டுதோறும் 'ரிஸல்ட்' மிகவும் குறைவாக இருப்பதைக் கண்ட பின் வேறு ஏற்பாடு செய்யப்போய் 'அவன் தம்பி அங்கதன்' என்பதாக ஒரு யோசனைக்கு வந்திருக்கிறார்கள். பள்ளிப் படிப்பை ஓராண்டு கூட்டிக் கல்லூரிப் படிப்பை ஓராண்டு குறைக்கவேண்டும் என்ற கருத்து பெரும்பான்மையாக அடிபடுகிறது. இது 'மாடும் கன்றும் பத்து ரூபாய்; கன்றும் மாடும் பத்து ரூபாய்' என்ற கதையாகத்தான் இருக்கிறது. முன்பு பதினோராண்டு பள்ளிப் படிப்பும் இரண்டாண்டு இடைநிலை (Intermediate) படிப்பும் இரண்டாண்டு பட்டப் படிப்பும் இருந்தபோது யாருக்கு எந்தவித சிரமமும் இருந்ததாகத் தெரியவில்லை. இந்த ஏற்பாட்டை மீண்டும் அமுலாக்கிவிடலாம். ஆனால் இந்த இடைக்காலத்தில் பயின்ற மாணவர்களின் கதி என்ன?

கல்லூரி மாணவர்களேனும் வயதில் பெரியவர்கள், சிக்கல்களைச் சமாளித்துக் கொண்டு புதுச் சூழல்களுக்கு ஈடு கொடுப்பார்கள் என்று நம்புவதற்கு இடமுண்டு. புதுத் திட்டங்களை இவர்கள் விஷயத்தில் ஓரளவுக்குப் பரீட்சிக்கலாம். ஆனால் பள்ளியில் பயிலும் இளம் பிள்ளைகளைப் புதிய பரிசோதனைகளுக்கு ஆளாக்குவது அவர்களின் எதிர்கால வளர்ச்சியையே குலைத்துவிடும். இப்படிப்பட்ட ஓர் ஏற்பாட்டை இப்போது காண்கிறோம்.



வருடாந்தரப் பரீட்சையைக் கொண்டு மட்டும் ஒரு மாணவனைப் பிரமோஷன் செய்வதோ, பழைய வகுப்பில் நிறுத்தி வைப்பதோ சரியாகாது என்பது யாரும் ஒத்துக் கொள்ளக் கூடியது. இதைச் சீர்திருத்தக் கால் வருடப் பரீட்சை, அரை வருடப் பரீட்சை இவற்றில் மாணவன் எப்படிச் செய்திருக்கிறான் என்பதையும் கருத்தில் கொண்டு முடிவெடுத்தால், அது நியாயமா யிருக்கும். ஆனால் இதற்கு மாறாகப் பரீட்சைகளே கூடாது என்று சில காலத்துக்கு முன்பு கோஷம் எழுந்தது. இப்போதோ, பெய்தால் பெருவெள்ளம் — காய்ந்தால் கடு வெயில் என்பதுபோல் அதற்கு முற்றிலும் மாறாக இன்னொரு கோடிக்குச் சென்றிருக்கிறார்கள். ஓராண்டில் சுமார் பத்துப் பரீட்சைகள் நடத்தி அவை எல்லாவற்றுக்கும் வருடாந்திரப் பரீட்சையின் முக்கியத்துவத்தைத் தந்து இந்த அடிப்படையில் மாணவர்களுக்குப் பாஸோ, பெயிலோ தருவது என்பதாக யோசனை வந்துள்ளது. இது 'கலப்படமற்ற சித்திரவதை' என்கிறார் ராஜாஜி. 'கருணைக்கு இடமில்லாத சமயங்களைப் போல் வித்தியாப்பியாசம் ஒரே வறட்சியாகிவிடும்' என்று அவர் எச்சரிக்கிறார். குழந்தைகள் பாடங்களையெல்லாம் ஓயாமல் உருப்போட்டுச் சின்னஞ் சிறு மூளையில் திணித்துக் கொள்ள நேரிடும். பரீட்சை என்ற திகிலை நிரந்தரமாகச் சுமந்து குழந்தைகளின் ஆரோக்கியமும் ஆனந்தமும் அடிநாசமாகி விடும். புத்தி விசாலப் படுவதற்குப் பதில் பயத்தினாலும் குருட்டு நெட்டுருப் பழக்கத்தினாலும் குறுகிப் போகும்.

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா

என்று பாரதியார் பாடினார். ஆனால் இனி குழந்தைகள் காலை, பகல், மாலை எப்போதும் புத்தகங்களையே கட்டி அழ வேண்டியிருக்கும்.

பரீட்சை சமயத்தில் மட்டுமின்றி, ஆண்டு முழுவதும் 'டியூஷன்' வைத்து அதற்குச் சம்பளம் தருவதில் ஏழைப் பெற்றோர்கள் அவதியுற நேரிடும். உபாத்தியாயர்கள் எப்போது பார்த்தாலும் பரீட்சை வைப்பதிலும் விடைத்தாள்களைத் திருத்துவதிலும் ஈடுபட்டு உற்சாகமிழந்து விடுவார்கள். இதையெல்லாம் கல்வித்துறை நிர்வாகிகள் நினைவில் கொள்ள வேண்டும். குழந்தைகளைப் பந்துகளாக நினைத்து மனம்போன படி இப்படியும் அப்படியும் வீசி விளையாடாமல், இந்நாட்டின் எதிர்கால வாழ்வுக்காகத் தங்களிடம் 'டிபாஸிட்' செய்த செல்வம் அவர்கள் என்ற உணர்வுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சைத்தான் வேதமோதுகிருன்!

இவ்விதழ் வெளியாகும்போது திரு சி. என். அண்ணுதுரை அவர்கள் அரசியல் சாஸனத்தின் மொழிப் பிரிவை எரித்துச் சிறைபுகுந்திருக்கக் கூடும். அரசாங்கத்தின் குற்றம் குறைகளைக் காரசாரமாகக் கண்டிக்கும் வன்மைபெற்ற ஓர் எதிர்க்கட்சித் தலைவர் அநியாயமாகச் சிறைப்படுத்தப் பட்டால் அது வருந்த வேண்டியதேயாகும். திரு அண்ணுதுரை அரசியல் சாஸனத்திலுள்ள ஆட்சிமொழி ஷரத்தை எரிப்பாரேயாகில் அதற்கு அவரது இதய பூர்வமான ஹிந்தி எதிர்ப்புணர்ச்சி மட்டும் காரணமாகாது. அவர் சட்ட விரோதமாகச் சென்று சிறைப்படவேண்டும் என்று காங்கிரஸ் கட்சிக்காரர்களும் தமிழ் தேசியக் கட்சியினரும் அவரை உசுப்பி வருவதும் காரணமாகும். அரசியல் என்பது அவ்வளவு இழி நிலைக்கு வந்துவிட்டது!

அரசியல் சாஸனத்தை அவமதிப்பது தவறுதான். ஆனுல் திரு அண்ணுதுரையை விடத் தீவிரமாக அரசியல் சாஸனத்தை அவமதிப்பவர்கள் இந்நாட்டில் இருக்கிருர்கள் — அதுவும் ஆட்சி பீடத்திலேயே இருக்கிருர்கள். சாஸனத்தைக் கட்டிக் காப்பதாக வேஷமிடும் காங்கிரஸ்காரர்கள் மூல சாஸன ஷரத்துக்களில் பலவற்றை உருத் தெரியாமல் சிதைத்திருப்பதன் மூலம் அதனை அவமதித்து வருகிருர்கள்!

மக்கள் வாழ்வின் பல அம்சங்களில் ஒன்ருன, மொழி குறித்த பதினேழாவது பிரிவைத் திரு அண்ணுதுரை அவர்கள் வெறுத்து அவமதிக்கிருர் எனில் பிரதமர் நேரு அவர்களோ மக்கள் வாழ்வின் ஜீவாதாரமான உரிமைகளைக் கூறும் மூன்ரும் பிரிவையே சின்னுபின்னப் படுத்தியிருக்கிருர். அரசியல் சாஸனம் முழுவதையுமே உருக் குலைக்கும் காங்கிரஸ் கட்சி பிறருக்கு அதன் புனிதத் தன்மையைக் கூறுவது 'சைத்தான் வேதம் ஓதுவதுபோல்' என்ற ஆங்கிலப் பழமொழியைத்தான் நினைவூட்டுகிறது.




அபிவிருத்தியா, அடிநாசமா?

தேசத்தில் அபிவிருத்தி இருக்கிறதோ இல்லையோ, தேசிய அபிவிருத்திக் குழு என்ற பெயரில் நாள்தோறும் அபிவிருத்தி அடைந்து வரும் ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது. தடுக்கி விழுந்த பின்னும் பாதையைப் பாராமல் கண் மூடிக் கொண்டே நடக்கும் பாணியில் அவ்வப்போது இந்தக் குழு அறிக்கைகள் வெளியிடுவதுண்டு. சமீபத்திலும் அது கூட்டம் போட்டு இப்படிப்பட்ட ஒரு கவைக்குதவாத அறிக்கையை வெளியிட்டுள்ளது.

'நாட்டு மக்களின் சராசரி வருமானம் திட்டக் கணக்குப்படி உயரவில்லை. ஆண்டுக்கு இரண்டு சத விகிதம்தான் உயர்ந்திருக்கிறது. நாட்டின் மக்கள் தொகை எவ்வளவு விகிதம் உயர்கிறதோ அதை விடக் குறைவாகவே தலா வருமானம் உயர்ந்திருக்கிறது. அதாவது வருமான உயர்வை மக்கள் பெருக்கம் விழுங்கி விடுகிறது' என்று அபிவிருத்திக் குழு கண்டுபிடித்திருக்கிறது. மக்கள் பெருக வேண்டிய அவசியம் கூட இல்லை; விலைவாசி ஏற்றமே வருமான உயர்வைப் பயனற்றதாக்கி விடுகிறது. இந்த இரண்டு சதவீத உயர்வைக் கூட நாட்டின் ஏழை மக்கள் பெறுகிறார்களா, பெர்மிட்—லைசென்ஸ்தாரர்களே விழுங்கி விடுகிறார்களா என்பதும் கேள்விக்குரிய விஷயமே!

விவசாய உற்பத்தி பெருகாததுதான் வருமானம் உயராததற்கு முக்கிய காரணம் என்பது குழுவின் கருத்து. உணவு உற்பத்தியைப் பெருக்க அது கைக்கொண்டுள்ள உபாயத்தைப் பார்த்தால் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை. மகா சக்தி வாய்ந்த ஒரு 'ஹை பவர்' கமிட்டியும், மத்திய போர்டும் நிறுவி, உணவு உற்பத்தியைப் பெருக்க உத்தேசித்திருக்கிறார்கள்! நிலச் 'சீர்திருத்த'ச் சட்டங்களை இன்னும் விரைவுபடுத்த வேண்டுமாம்!

சீராக இருந்த நில உரிமைகளை அழிக்கப் புகுந்ததுதான் விவசாய உற்பத்தி குறைந்ததற்கு முக்கிய காரணம். வெள்ளம், மழையின்மை முதலிய இயற்கைச் சக்திகள் மட்டும் காரணமல்ல — இதனை 'ஹிந்து'ப் பத்திரிகை தெளிவுபடுத்தியுள்ளது. விவசாயிகளிடையே பெருத்த கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள பதினேழாவது சாஸன மாற்றம் இவ்வளவு நாள் இயற்றிய அநீதச் சட்டங்களுக்கு முத்தாய்ப்பு வைக்கிறது. ஆனால் தேசிய அபிவிருத்திக் குழு இந்தக் கொந்தளிப்பைக் கவனித்ததாகத் தெரியவில்லை. தற்போது இந்தச் சட்டங்களை வேகமாக முடுக்கிவிட முயல்வது உற்பாதத்தைத் தாம்பூலம் வைத்து அழைப்பதற்குச் சமானமே யாகும்.





33

திருமாலுக்கு இருப்பிடமாகிய திருவேங்கட மலையின் உயரத்தைப் பாடுகிறார் பேயாழ்வார்.

சார்ந்து அகடு தேய்ப்பத்
    தடாவியகோட்டு உச்சிவாய்
ஊர்ந்தியங்கும் வெண்மதியின்
    ஒண்முயலை —

[சார்ந்து அகடு தேய்ப்ப — வானளாவிய மலையானதால் சந்திரனுடைய வயிறு மலை உச்சியிலே தேய்கிறதாம். சார்ந்து — அணைந்து. அகடு — வயிறு. தேய்ப்ப — உராய. தடாவிய கோட்டு உச்சிவாய் — பரந்து நிற்கிற மலைச் சிகரத்தின் உச்சியிலே. ஊர்ந்து இயங்கும் — ஊர்ந்து செல்லுகிற. வெண்மதியின் ஒண்முயலை — சந்திரனுக்குள் இருக்கும் முயற் குட்டியை. ஒண்முயலை — தேஜஸ் கொண்டு விளங்கும் முயற்குட்டியை]

சந்திரனுக்குள் முயலைப் போல் தோற்றம் தரும் காட்சியை வைத்துப் பாடுகிறார்.

—சேர்ந்து
சினவேங்கை பார்க்கும்
    திருமலையே

[சேர்ந்து—அருகிலே சென்று. சினவேங்கை பார்க்கும்—கோபத்தோடு கூடிய புலி பார்க்கிற. திருமலையே — திருமலைதான்.]

ஆயன்
புனவேங்கை நாறும்
    பொருப்பு!

[ஆயன்—கண்ணபெருமானுடைய. புன வேங்கை—காட்டு வேங்கைமலர்கள். நாறும் பொருப்பு—வாசனை வீசுகிற மலையாகும்.]

மலை வானளாவி நிற்கிறது என்பது விஷயம். சந்திரனையும் மலையையும் காட்டி, சந்திரனுக்குள் இருக்கும் முயலை மலையிலிருக்கும் புலி பாய்ந்து தின்னப் பார்ப்பதாகக் காட்டுவது, கவிச் சித்திரம்!

சார்ந்தகடு தேய்ப்பத்
    தடாவியகோட் டுச்சிவாய்
ஊர்ந்தியங்கும் வெண்மதியின்
    ஒண்முயலை — சேர்ந்து
சினவேங்கை பார்க்கும்
    திருமலையே ஆயன்
புனவேங்கை நாறும்
    பொருப்பு.

போகிற போக்கில்...



பாஞ்சாலியைத் துயில் உரியும் கட்டத்தில் துரியோதனனின் அட்டகாசத்தைக் கண்டு சினங் கொண்ட விதுரர் வில்லை முறித்து விட்டுப் போய்விட்டார் என்பது பாரத வரலாறு. அவர் போகும் போது துரியோதனனைக் கண்டு கீழ்வருமாறு கூறினாரென அமரகவி பாடுகிறார்:

" நலங்கூறி இடித்துரைப்பார்
மொழிகள் கேளா
நரபதி! நின் அவைக் களத்தே
அமைச்ச ராக

....

குலங் கெட்ட புலை நீசர்
மூடவர், பித்தர்
கோமகனே! நினக்குரிய
அமைச்சர் கண்டாய்!

இந்தப் பாடலோடு திரு மகாவீர் தியாகி ஜெய்ப்பூரில் மேற்கோள் காட்டி யிருக்கும் உருதுக் கவிதையைப் பார்க்க வேண்டும். அந்த உருதுக் கவியில் :

" தப்புவழி காட்டியோருடன் குலவினாய்
களங்கமின்றி புத்தி கூறியோரை
ஒதுக்கினாய்."

திரு மகாவீர தியாகி இன்னும் பல மேற்கோள்களைக் காட்டியிருக்கிறார். அவை அத்தனையும் பாரதி விதுரர் மூலமாகச் சொன்னது போல இருக்கிறது. கௌரவர் நிலைக்குக் காங்கிரஸார் வந்திருப்பதை அற்புதமாக அது கட்டிக் காட்டுகிறது.

ஃ ஃ ஃ

அடங்காப்பிடாரி மனைவி ஒருத்தியின் கணவன் திடீரெனக் காலமாகி விட்டான். அவன் வாழ்நாளில் ஒரு நாள்கூட மனைவியிடமிருந்து நல்ல வார்த்தைகளைப் பெற்றதில்லை. துர்ப்பாக்கியவான் என்று அவனைப் பார்த்து ஊரே பரிதாபப்படும். அப்பேர்ப்பட்டவனுக்கு மரணம் என்றதும் இனியாவது அவனுக்கு நிம்மதி இருக்கும் என்று ஊரார் பேசினார்கள். ஆனால் மனைவியோ அவன் மறைவுக்காகக் 'குய்யோ முறையோ' என்று அலறிக் குடம் குடமாகக் கண்ணீர் வடித்தாள். இதைக் கண்ட ஒருத்தி, ''இப்போ ஏன் அழுகிறாய்?'' என்றாள். ''இனித் திட்டுவதற்கு ஆள் இல்லையே என்றழுகிறேன்'' என்றாளாம் மனைவி.

தி. மு. க.வின் பிரிவினைக் கொள்கையைக் காங்கிரஸார் திட்டிய திட்டுக்கு எல்லையோ அளவோ கிடையாது. இந்தக் கொள்கையைக் கைவிட வேண்டுமென ஒவ்வொரு மேடையாகக் கேட்டு, பிறகு வசைமாரியில் பேச்சை முடிப்பார்கள். இன்றோ, தி. மு. க. பிரிவினையைக் கைவிட்டு விட்டது! காங்கிரஸார் என்ன செய்கிறார்கள்?

அந்த மனைவி அழுதது போல் அழுகிறார்கள்!

ஃ ஃ ஃ

ஜெய்ப்பூர் திருவிழாவில் ''சீனாக்காரன் துரோகமிழைத்து விட்டான். அவனை விடக் கூடாது. வரிந்து கட்டி நாம் எழ வேண்டும்'' என்று ஒரு பிரமுகர் பேசியிருக்கிறார். அந்தப் பிரமுகர் பேசியிருப்பதைப் பார்த்தால் அவர் கையில் அதிகாரம் இருந்தால் நாளையே பீகிங் வரை முன்னேறிச் சென்று தாக்குவார் போல் தோன்றுகிறது. ஆனால் அந்தப் பிரமுகர் யாரென்று பார்த்தால் அவரது வீரப் பேச்சில் ஏற்பட்ட மகிழ்ச்சி கதிரவனைக் கண்ட பனி மறைவது போல் மறைகிறது. அப்பேர்ப்பட்ட பனிப் பிரமுகர் வேறு யாருமல்ல, உயர்திரு கிருஷ்ண மேனன்தான். இன்று சீனன் துரோகமிழைத்து விட்டான் என்று பேசுகிறாரே, இவர் பதவியிலிருந்த போது துரோகமிழைக்காது துணையா புரிந்து கொண்டிருந்தான்? இவர் பாதுகாப்பு மந்திரியாக இருந்து ஆற்றிய 'தொண்டுகளை' உலகம் மறக்க வில்லை. ஆனால் இவரோ ஜெய்ப்பூர் சந்தையில் உலகத்தை மறந்துவிட்டுப் பேசியிருக்கிறார்.

—சிட்டுக் குருவி

அட்டைப் பட விளக்கம்

மானேர் விழியாள்

'மான் விழியாள்' என்று மங்கையரைப் பாராட்டுவது தமிழ் மரபு.

குறுகுறு என்று பயத்தோடு கலந்த மானின் பார்வையும் கண்களின் அழகிய அமைப்பும் யாரையுமே பரவசப்படுத்தும்.

அத்தகைய பார்வையும் விழியழகும் பெற்ற மங்கை நல்லாள் மானுடன் போட்டியிட்டுக் கொண்டு நிற்கும் காட்சியை ஓவியர் இவ்வாறு அட்டைச் சித்திரமாக வழங்குகிறார்.

இயற்கை வனப்பு மிக்க சூழ்நிலையிலே மானையும் மங்கையையும் அறிமுகப்படுத்தி இறைவன் சிருஷ்டி விநோதத்தை நினைவுபடுத்துகிறார்.

" மானைப் படைத்த பின்னே – பிரமன்
மங்கைய ரைப் படைத்தான் "

என்று நாமும் வியப்படைகிறோம்.


சிறப்பாய்த் தோற்றுவிக்கும்
பின்னியின்
கான்ஸல்
வெள்ளை ஸாடின் டிரில்
கொரோலின்
பாப்ளின் ஷர்ட்டிங்
இவ்விரண்டு துணிகளும் இறக்குமதி யான நீண்ட இழைப் பருத்தியிலிருந்து தயாரானவை. உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு அளிப்பவை.
SANFORIZED
BINNY'S FABRICS
உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணும் அநுமதி பெற்ற விற்பனை யாளரிடமிருந்து கண்ட் ரோல் விலைக்கே வாங்குங்கள்.
பக்கிங்ஹாம் & கர்நாடிக் கம்பெனி லிமிடெட், பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட் ஸ்தாபனத்தின் தயாரிப்பு



திரு ம. பொ. சிவஞானம்

திருச்சித் திருவிழா

**செப்பு மொழி பதினெட்டுடை யாள்—எனில்
சிந்தனை ஒன்றுடையாள்**


என்று பாடினார் மகாகவி பாரதி. ஆனால் அண்மையில் நவம்பர், 9, 10 தேதிகளில், தங்களுடைய சங்கத்தின் எட்டாவது இலக்கிய மகாநாட்டையும், அனைத்திந்திய எழுத்தாளர் பெருமன்றத்தின் இரண்டாவது மகாநாட்டையும் இணைத்துத் திருச்சி தேவர் மன்றத்தில் நடத்திய திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்க நிர்வாகிகளுக்குச் சிந்தனையும் ஒன்றாக இருந்தது, செப்பு மொழியும் ஒன்றாக இருந்தது. பிரதிநிதிகளையும், பார்வையாளர்களையும், வாய் நிறைய மனம்நிறைய, 'வாருங்கள், வாருங்கள்' என்று ஒரே மொழியில் அழைத்தார்கள். அவர்கள் செவிக்கும் உள்ளத்துக்கும் உன்னத விருந்தளிக்கும் ஒரே சிந்தனையில் லயித்தார்கள்.

காவிரிக் கரை புகழ் பாடி வரவேற்புரை நிகழ்த்திய சங்கத் துணைத் தலைவர் திரு ஏ. எஸ். ராகவனைத் தொடர்ந்து பொள்ளாச்சி எம். எல். ஏ. மகாலிங்கம் இன்றையப் பிரச்னைகளில் முக்கியத்துவம் பெற்றிருக்கும் மொழிப் பிரச்னையைப் பற்றி எளிய, உணர்ச்சிநிறைந்த தமது தொடக்கவுரையை நிகழ்த்தினார் தொழில், வியாபாரம், விஞ்ஞானம் நாட்டில் வளர்ந்திருக்கும் அளவுக்கு மொழி வளர்ச்சியடையாததைக் குறிப்பிட்டு அதற்குக் காரணம் ஓரளவு தூய தமிழ் மொழி வெறி என்பதையும் சுட்டிக் காட்டினார். ஸ்புட்னிக் என்று ரஷ்யர்கள் தோற்றுவித்த வார்த்தையை எப்படி மற்ற நாட்டார்களும் கையாள்கிறார்களோ, அப்படியே தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பழக்கத்திலிருக்கும் வேறு மொழிச் சொற்களை அப்படியே எடுத்துக் கொள்வது குற்றமல்ல என்று வாதித்தார்.

''நாவலர்கள் இருந்தது அந்தக் காலம். பேனாவலர்கள் இருப்பது இந்தக் காலம்'' என்ற ரீதியில் தம் தலைமை உரையை நிகழ்த்திய திரு கி. வா. ஜகந்நாதனைத் தொடர்ந்து 'கங்கைக் கரையிலே தங்கு தடையில்லாமல் வளர்ந்து வரும் தமிழ் பற்றிக் கல்கத்தா தமிழன்பர் ப. ந. தியாகராஜனும், கங்கைக் கரைக்குக் கிழக்கே பர்மா, இந்தோனேஷியா வழியாக நடந்து அமெரிக்கா, பிரான்ஸ் ரஷியா வழியாகத் தமிழ் மொழி அபிமானத்தை ஆராய்ந்து அலைகடலுக்கு அப்பாலெல்லாம் போய்த் தம் அன்னை மொழியின் வளர்ச்சியைக் கண்டு வியந்து வந்திருக்கும் சோமலெயும் பேசினார்கள்.

காலை நிகழ்ச்சிகளுக்கு முத்தாய்ப்பு வைக்கும் வகையில் அமைந்திருந்தது தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் சொற்பொழிவு.

வடமொழி ஆதிக்கத்தால் தமிழ் மொழியின் வளர்ச்சி தளர்ச்சி யுற்றது என்று அவர் வழக்கம் போல் ஆரம்பித்தாலும், வெளிராஜ்யங்களிலும் வெளிநாடுகளிலும் வாழ்க்கைக்காகக் குடியேறி யிருக்கும் தமிழர்கள், அந்தப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்குத் தமிழைக் கற்றுக் கொடுக்க வேண்டும், அதே மாதிரி அந்தப் பிரதேச பாஷைகளைத் தாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும், அப்போது தான் நம் மொழியை அங்கு வளரச் செய்ய முடியும்



திரு பாஸ்கரத்தொண்டைமான்







என்று சொன்னார். வரவேற்கப்பட வேண்டிய கருத்து. ஆங்கிலம் கற்ற ஆசிரியர்கள், மாணவர்கள் கேள்வி கேட்டால் பதில் சொல்லமுடியாது என்ற அச்சத்தினால் 'தமிழ் மொழியில் பாடம் சொல்லத்

குன்றக்குடி அடிகளார் உரையாற்றுகிறார்

தயங்குகிறார்கள் என்று அவர் குறிப்பிட்டது ஆதாரமற்ற கருத்து. திருக்குறள் தேசிய இலக்கியமாகத் திகழ வேண்டும் என்று அவர் விரும்பியது பாராட்டவேண்டிய அம்சம்.

சங்கத் தலைவர் பேராசிரியர் சி. எஸ். கமலபதி, இசை வித்தகர் ஸ்வரம் பாடி நிரவல் செய்யும்பாணியில் நிறுத்தி ரசித்து வந்தனம் சொல்லி, திருச்சி எழுத்தாளர் மகாநாட்டின் நிகழ்ச்சியை முடித்துப் பெரு மன்றத்தின் மகாநாட்டுத் தொடக்கத்தை அறிவித்தார்.

சனிக்கிழமை மாலை நிகழ்ச்சிகள் பலவிதத்தில் சுவை மிகுந்ததாக

பேராசிரியர் அ. சீ. ரா., திரு என். மகாலிங்கம் எம். எல். ஏ., திரு கி. வா. ஜ.

அமைந்திருந்தன. திரு பாஸ்கரத் தொண்டைமானின் வரவேற்புரையைத் தொடர்ந்து திரு ம. பொ. சிவஞானம் தம் தொடக்க வுரையை நிகழ்த்தினார். ஆர்வமும் ஆவேசமும் நிறைந்த பேச்சு! 'இலக்கணத்தைச் சிதைக்காமல் எழுதுவது மாத்திரம் தமிழாகாது! மரபை அழிக்காமல் எழுதுவதுதான் தமிழ்' என்று முழங்கிய அவர், தம் அரசியல் ஆடைகளை தேவர்மன்றத்துக்குவெளியே கழற்றி வைத்து விட்டு இந்த எழுத்தாளர் கூட்டத்துக்கு உள்ளே வந்திருப்பதாகக் கூறினார். ஆனாலும், அவர் ஆங்கிலக் கல்வி பற்றியும், சர்வகலாசாலைப் பட்டங்கள் பற்றியும் பேசிய போது, அவருடைய அரசியல் பணியன் அவரை அறியாமலேயே உடம்போடு ஒட்டிக் கொண்டு உள்ளே வந்து விட்டதோ என்று நினைக்கத் தோன்றியது. தலைமையுரை ஆற்றிய பேராசிரியர் திரு அ. சீனிவாச

ப. ந. தியாகராஜன் கை தட்டி மகிழ, வரவேற்பாளர் எ. எஸ். ராகவன் திரு கி. வா. ஜ.வுக்குச் செங்கோல் தருகிறார்.

ராகவன், நகைச் சுவை ததும்ப, திரு சிவஞானத்தின் ஐயப்பாடுகளைப் போக்கும் வகையிலேயே பேசினார்.

கம்ப ராமாயணத்தை மலையாள மொழியில் பெயர்த்திருக்கும் சென்னை சர்வகலாசாலை மலையாளத் துறை திரு எஸ். கே. நாயரைப் பாராட்டும் வகையில் பேசிய கம்பன் கழகம் திரு எஸ். நல்லபெருமான் சுவையான ஒரு சொல் விருந்து அளித்தார். தமிழின் இனிமையை, அப்படியே மாற்றுக் குறையாமல் திரு எஸ். கே. நாயர் எப்படி மலையாளத்துக்கு மாற்றியிருக்கிறார் என்பதை இரு மொழிகளும் அறிந்த அவர் உதாரணத்துடன் விளக்கினார். பல தமிழ் அன்பர்கள் மலையாள மொழி அன்பர்களாக மாறியிருந்தால்கூட அதில் சிறிதும் ஆச்சரியமில்லை.

'தெருவெல்லாம் தமிழ் முழக்கம்' என்ற தலைப்பில் திரு அ. ச. ஞானசம்பந்தம் ஆற்றிய முழக்கம் தேவர் மண்டபத்திலெல்லாம் எதிரொலிக்க முதல் நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

ஞாயிற்றுக்கிழமைக் காலை கவியரங்கம் அபாரமாக வெற்றியடைந்து விட்டது. குமரி முனையிலிருந்து கிளம்பிய கவிதா வாகனம் ஒன்பது மாவட்டங்களைத்தாண்டிச் செங்கல்பட்டில் வந்துநின்றது. 'குமரர் முதல் கிழவர் வரை' என்று வேடிக்கையாக ஒரு ரசிகர் குறிப்பிட்டது போல, ''தமிழழகன்' குமரி மாவட்டத்தின் புகழில் ஆரம்பிக்க நாரண துரைக்கண்ணன் செங்கல்பட்டு மாவட்டப் புகழ் பாடி முடித்தார். இடையே திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம்,— திருச்சி, தஞ்சை சேலம், கோவை, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்கள். கவியரங்கத்தின் 'பொருள்' எங்கள் மாவட்டம். 'இனிச்சுக் கிடக்கும் எங்க ஊருக்கு எப்பூ வருவீங்க அண்ணாச்சி?' என்ற பாணியில் முடித்த துறைவன் திருநெல்வேலிச் சீமை

யின் மண் வாடையை அப்படியே திருச்சியில் இறக்குமதி செய்தார். கோடைக்கானலைப் பற்றிக் குளிர்ந்த சொல்லாலும், பழனியைப் பற்றி ஆவேச வார்த்தையாலும் பாடிய மதுரை மாவட்டக் கவிஞர் பீஷ்மனும், இராமநாதபுரத்தில் இருக்கும் சிறப்பெல்லாம் பற்றிப் பாடிய ஜகந்நாதனும், காவிரியின் சலசலப்பைவிட அதிகச் சலசலப்பை ஏற்படுத்திய திருச்சிக் கவிஞர் துரைசாமியும், தஞ்சையின் நெல்மணத்தையும், மண் வளத்தையும் பரப்பிய தஞ்சைக் கவிஞர் வரதராஜனும், சேலத்து மாம்பழத்தின் சிறந்த புகழ் பாடிய குமாரசாமியும், கோவைக் குரல் எழுப்பிய அருணாசலமும், வடஆர்க்காடு மாவட்டத்தின் வழியாகக் கைப்பிடித்து அடியெடுத்து அழைத்துச் சென்ற முத்து கிருஷ்ணனும், வள்ளலார் புகழை வாய் நிறையப் பாடிய தென்னார்க்காட்டுப் பிரதிநிதி கிருஷ்ணமூர்த்தியும், காலை வேளைகளில் காப்பிக் கடைகளெல்லாம் மூடிய பிறகு செங்கல்பட்டு ஜங்ஷனுக்கு வந்து நின்று பிரயாணிகளின் பசியைத் தூண்டும் வண்டி போல் வந்து நின்று செங்கல்பட்டுப் புகழ் பாடிய நாரண துரைக் கண்ணனும், கவியரங்கத்துக்குக் களை கட்டினார்கள். திருச்சி ரசிகர்கள் அமர்ந்திருந்து கவிதை வெள்ளத்தில் மூழ்கியிருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சி.

சென்னை மாவட்டத்துக்கென்று தனிப்பிரதிநிதி இல்லையே என்ற குறையைக் கவியரங்கத்துக்குத் தலைமை வகித்த திரு கி. வா. ஜகந்நாதன் தம் முடிவுரையை அற்புதமான கவிதையிலேயே பாடி அமர்ந்திருந்தவர்களைப் பிரமிப்பில் ஆழ்த்தி விட்டார்.

கவியரங்கத்தைப் போல ரசிகர்களை மகிழ்ச்சியில் மூழ்கடிக்கச் செய்த மற்றொரு நிகழ்ச்சி அன்று மாலையில், திரு பாஸ்கரத் தொண்டைமான் நடுவராக வீற்றிருக்க, நடந்த சொற்போர்தான்.

'இலக்கியத்துக்கு ஆக்கம் தருவது காதலா? வீரமா?' என்பது பொருள். காதல் காட்சி ஒரு பக்கம். வீரக் காட்சி ஒரு பக்கம். ஆறடி உயரம் உள்ள பேராசிரியர் கமலபதி தம் கட்சிக்குப் பலம் தேடக் காதலியாகக் குழைந்து பேசியதும், நாலரை அடி உயரமேயுள்ள திருலோக சீதாராம் தம் வீரக் கட்சிக்கு விசுவரூபம் எடுத்து நிமிர்ந்து நிற்க முயற்சி செய்ததும் வெகுரசமாக இருந்தன. இந்தக் கட்சிக்கு ஐந்துபேர். அந்தக் கட்சிக்கு ஐந்து பேர். சந்தர்ப்பத்துக்குக் தகுந்த மேற்கோள் கணைச் சரமாரியாக வீசி வாதாடினார்கள்.

ஒருவர் மாத்திரம், காதலையும் வீரத்தையும் கட்டி வைத்து விட்டு நகைச் சுவைக் கடலில் மூழ்கி மண்டபம் முழுவதும் ஜவ்வாது மணம் பரப்பினார்.

தீர்ப்பு வழங்கிய தொண்டைமான், பூவா, தலையா போட்டுப் பார்க்க வில்லை. 'இலக்கிய வாதி தன்னிடம், தன் வாழ்க்கையில் இல்லாத ஒன்றைக் கற்பனையில் பெரிதாக்கிப் பூசித்துக் கூத்தாடும் பண்புள்ளவன். உதாரணம் காதல்! அரசியல்வாதி தன்னிடம், தன் வாழ்க்கையில் இல்லாத ஒன்றை ஒரேயடியாக ஒழிக்கக் கூத்தாடும் பண்புள்ளவன் — உதாரணம் பிற மொழி ஆர்வம்!' என்று ஒரு பேச்சாளர் கூறியதை ஏற்கவில்லை. பாரதியை மேற்கோள் காட்டிக் காதல் கட்சிக்குச் சாதகமாகத் தீர்ப்பை அளித்து விட்டார்!

தமிழ், தெலுங்கு, மலையாளம், 'சிந்தனை ஒன்றுடையாள்' என்ற தலைப்பில் இலக்கிய ஒருமைப்பாட்டைப் பற்றி ஆறு அன்பர்கள் பேசி முடிக்க, திரு அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் விடையாத்த விழா, இரண்டு நாள் விழா இரண்டு நிமிடங்களில் முடிந்து விட்டது போன்ற உணர்ச்சியைத் தோற்றுவித்து விட்டு முடிந்தது.

இவ்வளவு சிறப்பாக இலக்கிய விழாவை நடத்திக் கொடுத்த திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்க நிர்வாகிகளான திரு ரெட்டியாரும், திரு அகிலனும், திரு நீலமேகமும் அவர்களுடைய தோழர்களும் எவ்வளவு தூரம் பாராட்டப் பட வேண்டியவர்களோ, அதை விடப் பன்மடங்கு திருச்சி இலக்கிய ரசிகர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அப்படி ரசிகர்கள் இருந்தால்தானே, பேசுபவர்களுக்கும் உற்சாகம் இருக்கும்! பேசியவர்களுக்கும், பேசாதவர்களுக்கும் அன்பு பொங்க, 'காஸ்' பொங்க, சோடா பாட்டில்களை உடைத்துக் கொடுத்துக் கொண்டேயிருந்த அன்பர் திரு ரா. நீலமேகத்தின் கரங்கள் இன்னும் பல தினங்கள் வரை யாரைப் பார்த்தாலும், அவரையறியாமலேயே சோடா பாட்டில் உடைக்கும் அபிநயம் பிடித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை!

— கோமதி ஸ்வாமிநாதன்



நாடாண்ட நங்கையர் :

ஆண் கோலத்தில் ஆண்ட அரசி

நெடுங் கதை :


விஷப் பரீட்சை —தமிலன்

கலை வளர்க்கும் கோயில்கள் :

சென்னை மருத்துவக் கல்லூரி

விசேஷக் கட்டுரை :

அமெரிக்க நோக்கில் கம்பர் —தமிழ் மாறன்


ஆதரவுக்கு ஆதரவான
அன்னைக்கு ஆதரவு: டால்டா
DALDA
டால்டா
பேரீச்ச மர அடையாளமிட்ட
வனஸ்பதி
■ ... தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிப்பு.
■ வளரும் சிறுவர்களுக்கான வைட்டமின்கள் அடங்கியது.
■ மோசடி செய்யமுடியாதவாறு சீல் வைத்த டப்பாக்களில் சுகாதார முறைப்படி அடக்கமானது.
■ மறவாதீர்கள்: திறந்த டப்பாக்களிலிருந்து சில்லறையாக வாங்கக் கூடியதல்ல டால்டா.
தரத்திலும் தூய்மையிலும் சிறந்த சமையல் சாதனம்
DL. 97-140 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு



பரதத்துக்காகவே பிறந்தவர் ஸ்ரீமதி பாலசரஸ்வதி என்று பலர் பாராட்டுகிறார்கள். இந்தப் பாராட்டுதல் எவ்வளவு தவறுதலானது என்பது இம்மாதம் மூன்றும் தேதியன்று தியாகராய நகர் ஸ்ரீ கிருஷ்ண கான சபையில் ஸ்ரீமதி பாலாவின் நடனத்தைப் பார்க்கும்போது நிமிஷத்துக்கு நிமிஷம் புலனாகிக் கொண்டிருந்தது. ஆம், 'ஸ்ரீமதி பாலசரஸ்வதி பரதத்துக்காகப் பிறக்கவில்லை; பரத நாட்டியக் கலையே ஸ்ரீமதி பாலசரஸ்வதிக்காகத்தான் பிறந்திருக்கிறது; பிறந்து இவ்வளவு காலமாகக் காத்துக் கிடந்திருக்கிறது: இன்று பாலாவை அடைந்து தனது பொருளின் நிறைவைப் பெற்றிருக்கிறது' என்ற எண்ணமே அன்று மீண்டும் மீண்டும் தோன்றிக் கொண்டிருந்தது.

சென்ற தலைமுறையிலும், அதற்கு முந்தைய தலைமுறையிலும், அதற்கும் முற்பட்ட தலைமுறையிலும்தான் உண்மையான சங்கீதம் இருந்தது, உண்மையான நடனம் இருந்தது என்று சொல்பவர்கள் தாராளமாக அப்படியே சொல்லிக் கொண்டிருக்கலாம். ஆனால் ஈசுவரனின் நியதியில் ஸித்தி பெற்ற கலைஞர்கள் சகாப்தத்துக்கு ஒருவர்தான் தோன்றுவார்கள் என்பதை நம்பும் ரசிகர்கள் ஸ்ரீமதி பாலாவுக்கு ஈடாக இன்னொருவர் இருந்திருக்க முடியாது என்றுதான் சொல்வார்கள்.

நமது கர்நாடக சங்கீதத்தின் ஜீவநாடி கமகம். நமது பரதக் கலையின் இதயம் அடைவு. ('அடவு' என்பதைத் தமிழ்ப் புலவர்கள் 'அடைவு' என்றுதான் சொல்கிறார்கள்.) 'கமகம்', 'அடைவு' இரண்டும் ஒரே கருத்தைத்தான் தெரிவிக்கின்றன. கமகம் என்றால் செல்வதைக் குறிக்கும். போட்ட இடத்தில் போட்டபடி கிடக்காமல், கொடியானது பந்தலில் மேல் நோக்கித் துழாவிக் கொண்டு செல்வது போல் ஸ்வர ஸ்தானங்கள் அடுத்த ஸ்தானங்களை நோக்கிச் செல்வதுதான் கமகம். இதே போல் கலையின் சூட்சமத்தைத் தேடிச் சென்று அடைய உதவுபவைதான் அடைவுகள். பரத நாட்டியப் 'பிடி'கள் என்று சொல்லும்போது, கலா ரகசியங்களை அடைந்து அவற்றைக் கைப்பிடியாக எடுத்து வந்து தருவதைத்தான் குறிப்பிடுகிறோம். 'அபிநயம்' என்றாலே கொண்டு வந்து கொடுப்பதைத்தான் குறிக்கிறது. எழுத்துக்கு இனிக்கும் இந்த இன்பங்களை நடைமுறையில் எங்கே காண முடிகிறது? கமகபூர்வமான தூய இசையை எங்கே கேட்க முடிகிறது? அந்த இசையின் இன்னொரு தோற்றமான உண்மையான பரதம் — 'கானமுதம் படைத்த **காட்சி**' என்று பாரதி பாடினாரே, அது போல இசையே கண்ணுக்குத் தெரிகின்ற பரதக் காட்சியாகும் அதிசயம்—இன்று எங்கேயிருக்கிறது? அழகுகளைத் தேடித் தேடிப் பெறும் அதன் அடைவுகளும், பிடிகளும், அபிநயங்களும் எங்கேயிருக்கின்றன?

இந்த 'எங்கே'க்களுக்கு எல்லாம் ஒரே 'இங்கே'யாகத் திகழுபவர் ஸ்ரீமதி பாலா. கமக சங்கீதம் ஸ்ரீமதி வீணை தனம் இந்தக் குடும்பத்துக்கு அளித்த தனம். அதையே காட்சியாக்கித் தருபவர் பால சரஸ்வதி. அடைவுகளும், பிடிகளும் இங்கு உண்மையிலேயே கலா சூட்சமங்களை அடைந்து, பிடித்து எடுத்துத் தருவதாக அமைந்துள்ளன. அடைவு, அபிநயங்களின் மூலம் பரதக் கலையின் எல்லையையே அடைந்து விட்டவர் பாலா. இதைத்தான் ஸித்தி என்று சொல்வது.

பாவம், ராகம், தாளம் என்ற மூன்றின் முதல் எழுத்துக்களுமே சேர்ந்து பரதமாயிற்று எனலாம். மென்மையும், மணமும், வண்ணமும் ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்க மாட்டாமல் எப்படி ஒன்றாகி மலராகிறதோ, அதே போல் பாவமும், ராகமும், தாளமும் இயல்பாக இசைவதுதான் பரதம். இந்தப் பரத மலரைப் பூத்துச் சொரியும் அநுபவத் தருவாக இன்று நம்மிடையே நிற்கிறார் ஸ்ரீமதி பாலா அவர்கள். இந்தப் புஷ்பங்களை நம் நாட்டில் மட்டுமின்றி ஜப்பானிலும் அமெரிக்காவிலும் முன்பே தெளித்து வந்திருக்கிறார். சமீபத்தில் எடின்பரோவில் இந்த மலரின் எழிலில் மேநாட்டவர் எல்லாம் அப்படியே மயங்கிக் கிறங்கிக் கிடந்தார்கள். இப்படிப் பாரதத்தின் பெருமையைப் பாரெங்கும் பரப்பிய பரத ராணியாகத் தமது முதல்

கச்சேரியை ஸ்ரீ கிருஷ்ணகான சபையில் ஓர் அமர அநுபவமாக அளித்தார் ஸ்ரீமதி பால சரஸ்வதி அவர்கள்.

ஸ்ரீமதி பாலசரஸ்வதியை மேடையில் கண்டதும் நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஒருவர், இவ்வளவு நெடிதுயர்ந்த தோற்ற முடைய ஒருவர் பரதம் ஆடவாவது என்ற எண்ணம் சிலருக்கு ஏற்பட்டதாகத் தெரிந்தது. போகப் போக அவர்கள் புரிந்து கொண்டார்கள்: நாற்பது அல்ல, நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பரதக் கலையே ஆடுகிறது: ஆறடி அல்ல, விண்ணுக்கும் மண்ணுக்குமாக நிற்கும் நடனக் கலையே ஆடுகிறது என்று. ஆடுபவர் மறைந்து ஆட்டம் மட்டும் நிற்கும் அதிசயம் அல்லவா ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் கலை?

அலாரிப்பு தொடங்கும் போதே பரத புஷ்பமானது அலர்ந்து விட்டது. லயத்தை மட்டும் கொண்டு எழுப்பிய கலையின் ஆலயமாக அது அமைந்தது. அடுத்து தாளத்துடன் ராகமும் கூடிய வஸந்த ராக ஜதிஸ்வரம். இதிலும் சரி, சங்கராபரண வர்ணத்திலும் சரி, எப்படி ஸ்வர ஸ்தானங்களும் அடைவுகளும் பின்னிப் பிணைந்திருந்துள்ளன என்பதைக் கவனிக்கும் போது ஆச்சரியமாக இருந்தது. பின்னணி இசை இல்லாவிட்டாலும் கூட இது வஸந்தா, இது சங்கராபரணம் என்று சொல்லி விடலாம் போல் தோன்றியது. பாவம் அற்றதாகக் கருதப்படும் நிருத்தப் பகுதிகளில் ஸ்ரீமதி பாலா ஆடுவதைக் காணும் போது திருவாரூர் ரதமே பரதம் கற்று ஆடினால், அல்லது பிருஹதீசுவரக் கோபுரம் நடனம் கற்று ஆடினால் இருக்கக் கூடிய கம்பீரத்தைக் காண்கிறோம்.

பால சரஸ்வதியின் பாவங்களைப் பற்றி நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை. கோபிகளின் வஸ்திரங்களை அபகரிக்கும் கிருஷ்ணனது லீலைகளைச் சித்திரிக்கும் 'ஸைஸி ஜாக்ஷ்ஷு' சப்தத்திலிருந்து துரௌபதிக்கு வஸ்திரமளித்துக் காத்த கிருஷ்ணனது லீலைகளைச் சித்திரிக்கும் 'கிருஷ்ணா நீ பேகனே பாரோ' என்ற இறுதி உருப்படி வரையில் கிருஷ்ணகான சபையில் நவரஸங்களும் நவ நவமான சௌந்தரியங்களைப் பெற்றுப் பெருக்கெடுத்தன.'

கையோடு இசைந்த கண் :
கண்ணோடு இசைந்த மனம் ;
மனத்தோடு இசைந்த பாவம் ;
பாவத்தோடு இசைந்த ரஸம்

என்ற சுலோகத்துக்கு அப்படியே பொருளாக விளங்கும் பரதத்தைக் கண்டோம்.


சங்கராபரண வர்ணத்துக்குப் பின் பதறி வருகுது (காம்போதி). இதில் ஸ்ரீமதி பாலா எப்படிக் கலையின் புனிதத்தைக் காத்து வருகிறார் என்பதைக் கண்டோம். 'தளுக்கு, குலுக்கு, மினுக்கு' என்று அபிநயம் பிடித்த போது உடலைத் துளிக்கூட அசைக்காமல் ஆடிய தூய்மை பாலாவின் கலைக்கே உரியது. சுந்தன் செய்த மையல்களிலும் பௌதிகம் கலவாமல் அற்புதமாக அமைந்தது அபிநயம். வேத மந்திரத்தை அளித்த ரிஷி பரம்பரையைச் சேர்ந்த பரத முனிவர் அளித்த கலை அல்லவா இது என்பதை அவர் உணர்ந்திருக்கிறார். பார்ப்போருக்கும் உணர்த்திவிட்டார்.

வராளி பதம், 'யாருக்காகிலும் பயமா' (பேகடா) இவற்றில் பெருகி வந்த நவ ரஸங்கள் 'நீல மயில் வாகனனே' என்ற நீலாம்பரி உருப்படியில் இறுகிப் பக்தி மயமாகப் பரிணமித்தது. குமரன் பரமனுக்குப் பிரணவம் உபதேசித்ததாக அபிநயம் செய்த போது பரதத்துக்கும், பர தத்துவத்துக்கும் எவ்வளவு நெருக்கம் என்பதை நினைந்து மெய்சிலிர்க்க முடிந்தது. எல்லாவற்றுக்கும் சிகரமாக அமைந்தது 'கிருஷ்ணா நீ பேகனே'. முதலில் யமுனா கல்யாணியை பாலசரஸ்வதி தமது மதுர கண்டத்தால் யமுனையாகப் பொழிய விட்டு, அதன்பின் அபிநயத்தைத் தொடர்ந்தார். அப்புறம், அங்கே பாகவத, பாரத சம்பவங்களெல்லாம் நிகழ்ந்தன. மாயாவியான கண்ணனின்பாலிய லீலா விநோதங்கள் எல்லாம் பாலாவின் கலா விநோதங்களாக மலர்ந்தன. கிருஷ்ணனைச் சாதாரணமான ஒரு நடி அழைப்பதாக இல்லாமல், துகிலுரியும்போது துரௌபதி தவித்துத் துடித்து அழைத்த அழைப்பாகச் செய்து சபையோரைக் கண்கலங்க வைத்து விட்டார் ஸ்ரீமதி பாலசரஸ்வதி. அது துரௌபதியின் வேஷமாகத் தோன்றவில்லை; ஆவேசமாகவே ஆகிவிட்டது. நம் கலைகளின் நிறைவு கடவுளில்தான் என்பதற்கு ஒரு நிரூபணமாகக் கச்சேரி இனிது முடிந்தது.

முடிகிற கச்சேரிதானா அது? மேடையிலே முடிந்தாலும் மனத்திலே என்றும் நிற்கும் அது. 'மிருதுவான குரல் முடிந்தபின் பிறந்த இசை' என்று ஆங்கிலக் கவி பாடியது போல இந்த நிகழ்ச்சியும் முடிந்தபின்தான் மனத்தில் புதுப் புதுப் பொருள்கள் ஊறிக் கொண்டிருக்கின்றன. மேடையிலுள்ள தூசி ஆடுபவரின் அடி வைப்பில் பறந்தது போல் அந்தப் பொருள்கள் உள்ளத்தில் படியும் தூசிகளைப் பறக்கடிக்கின்றன. இந்த அற்புத அநுபவத்தைத் தரும் பாலாவுக்கு மனமார்ந்த பாராட்டுக்களை வழங்க வேண்டியதுதானே? அவருக்கு மட்டுமல்ல. அவரது குழுவில் மகா வித்துவான்களுடன் வைத்து மதிக்கத் தக்க கலைஞர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். வேணுகான விசுவநாதன் அவர்களும் (வேணு கானம் மட்டும் என்ன? வாய்ப்பாட்டு மூலம் கடைசி உருப்படிகளில் நாத சமுத்திரமாய் விளங்கும் தமது தாய் ஸ்ரீமதி ஜயம்மாள் அவர்களையும் நினைவு படுத்தி விட்டாரே!) கிளாரினெட் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் அவர்களும், நட்டுவனார் ஸ்ரீ கணேசன் அவர்களும், பாடல்களைப் பாடிய ஸ்ரீ நரசிம்முலு, ஞானசுந்தரம் ஆகியோரும் பாராட்டுக்குரியவர்கள்.

ஸ்ரீமதி பாலசரஸ்வதி பாராட்டுக்களை விரும்புவதில்லை. அவர் எந்தக் காரணத்துக்காக அப்படிச் செய்தாலும், ரசிகர்களுக்கு அதில் ஒரு நியாயம் தெரியும். பாலசரஸ்வதியின் கலையை முழுவதும் புரிந்து கொண்டு பாராட்ட யாருக்கு முடியும்? கரையோரத்தில் நின்று கொண்டு கடலைப் பார்ப்பவர்கள் அதன் அகலத்தையும், ஆழத்தையும், அந்த ஆழத்தில் உள்ள முத்துக்களையும் பவளங்களையும் பற்றி என்ன அறிய முடியும்?

—கன்யா



நெசவுத் தொழிலின் அற்புதம்

கைதேர்ந்த நெசவாளி தன் தறியைக் கண்ணைபோல்பாது காத்துக் கொள்ளுகிறான். அவனுடைய கனிந்து கூர்ந்த கண்கள் நுட்பமாக ஒவ்வொன்றையும் கவனிக்கின்றன....ஒவ்வொரு இழையையும் கண்காணிக்கின்றன...இந்திய நெசவாளியின் தொழில் நுட்பத் திறன் அவனது பரம்பரைச் சொத்து—அவனது தொழில் நுட்பம் முழுமை பெற்ற ஒன்று.

கைத்தறி நெசவாளி இல்லாத இந்தியாவை யாரும் கற்பனை செய்யவும் முடியாது....ஏனெனில் கைத்தறி நம் வாழ்வின் ஓர் அங்கம். அதுபோலவே இந்தியாவின் முன்னோடியான பாங்கும் இன்றியமையாத ஒன்று. நாடு நெடுகிலும் உள்ள கிராமங்கள், ஊர்கள், நகரங்களில் எல்லாம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா அதன் வாடிக்கைக்காரர்களுக்கு உடனடியான, பணிவான சேவை புரிகிறது.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா



இந்தியாவின் முன்னோடியான பாங்க்.



புகையிலே டப்பாவில் பதிந்த விரல் ரேகை ஆராய்ச்சியாளருக்குப் படிப்படியாகத் தெரிய வருவது இப்படித்தான்.

நீதிக்கு ஒரு விஞ்ஞானம்

துமிலன்



திரு மகாதேவன்



திரு நடராஜன்

போலீஸ் விஞ்ஞான மகாநாடு! இந்தப் பெயருடன் சென்னையில் சமீபத்தில் ஒரு மகாநாடு நடைபெற்றது. இதில் பல ராஜ்ய போலீஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மகாநாட்டின் பெயரைக் கேட்டவர்கள், 'போலீஸாவது, விஞ்ஞானமாவது! குரு ஷேவும், கோகுலாஷ்டமியும் என்பதுபோல் இருக்கிறதே' என்று ஆச்சரியப்பட்டனர். ஏனென்றால், பொது மக்கள் பலருக்கு இதைப் பற்றி ஒன்றும் தெரியாது.

விஞ்ஞானத்தின் பல அம்சங்கள் நீதிபதிகள் நீதி வழங்குவதற்கான சாட்சியங்களை (மனித சாட்சியத்தைத் தவிர மற்றவை) கொடுத்து உதவுகின்றன. போலீஸ்காரர்கள் குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடிக்கவும் விஞ்ஞானம் பல விதங்களில் உதவுகிறது.

போலீஸ் விஞ்ஞானம் மிகச் சிறிய அளவில் ஆரம்பித்து இன்று அது ஒரு கலை என்று மதிக்கக் கூடிய அந்தஸ்தையும் முக்கியத்துவத்தையும் பெற்று விட்டிருக்கிறது. அது போலீஸ் இலாகாவோடு கூடவே வளர்ந்து கொண்டு வந்திருக்கிறது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தில் போலீஸ் இலாகா ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கான்ஸ்டபிள்களை எப்படித் தேர்ந்தெடுப்பார்கள் தெரியுமா? உயரம் ஆறடிக்கு மேல் எத்தனை இருந்தாலும் சரி தான். உடல் எடை நூற்று எண்பது பவுண்டுகளுக்குக் குறையக் கூடாது. நரம்புகள் வைரம் பாய்ந்து இரும்பைப் போல் இருக்க வேண்டும். இந்த யோக்கியதாம்சமுள்ள அவருக்குத் தாம் கைது செய்யும் குற்றவாளியின் பெயரைத் தமது நோட்டில் எழுதத் தெரிந்திருந்தால் போதுமானது. 'ஷேக்ஸ்பியர் என்றால் நரைமயிர்களுக்குத் தைலம்' என்று சொன்னால் கூடப் பாதகமில்லையாம்;

கொலை செய்பவர்கள், வழிப்பறிக்காரர்கள், திருடர்கள், முரடர்கள் இவர்கள் சம்பந்தப்பட்ட வேலை பார்ப்பதற்கு அந்தக் குற்றவாளிகளைப் போன்றே முரட்டுத்தனமும், பலமும் தான் அவசியம் என்று கருதினார்கள். அறிவைப் பற்றிக் கவலைப்படவே யில்லை. ஏன், இருபது வருடங்களுக்கு முன்னர்கூட லாகூரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாயிருந்த ஓர் ஐரோப்பியர் ''கான்ஸ்டபிள்கள் கூடிய வரையில்படிக்காதவர்களாயிருப்பது நல்லது'' என்றார்.

குற்றம் செய்தவனைக் கண்டுபிடிப்பதற்கு முன் காலத்தில் மை போட்டுப் பார்த்தார்கள். சந்தேகப்பட்ட ஆளைக் கொதிக்கும் எண்ணெயில் கையை விட்டுச் சத்தியம் செய்யச் சொன்னார்கள். மற்றும் பலவிதக் கொடுமைகளுக்குள்ளாக்கினார்கள். போலீஸ் இலாகா என்று ஏற்பட்டதும் அவர்களும் இந்தப் பழைய சித்திரவதை முறைகளைத் தான் கையாண்டார்கள். ''மயிலே, மயிலே என்றால் இறகு போடுமா?'' என்ற பழமொழியை அவர்கள் நூற்றுக்கு ஆயிரம் பங்கு நம்பினார்கள். குற்றவாளியைக் குற்றத்தை ஒப்புக் கொள்ளச் செய்யப் போலீஸாரிடம் கையாளும் முறைக்கு 'மூன்றாவதுடிகிரி' முறைகள் என்று சொல்லுகிறோம். மேல் நாட்டில் இந்தப் பேர் எப்படியோ ஏற்பட்டது. இதற்கு என்ன அர்த்தம் என்று சென்னை 'போரென்ஸிக் லாபரேட்டரி' தலைவரான டாக்டர் நடராஜன் அவர்களை விசாரித்தேன். அவர் சமயோசிதமாகக் கூறிய விவரம் மிகவும் பொருத்தமாக இருந்தது. ''அதற்கு மூன்றாவது முறை என்று அர்த்தம். முதல் முறை ஸாமம். நயமாகக் கேட்டுப் பார்ப்பது; அதற்குச் சரியான பதில் கிடைக்காவிட்டால் இரண்டாவது 'தானம்' முறையை உபயோகிப்பது. குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டால் குறைந்த தண்டனை கிடைக்கும், விடுதலை கூடப் பெற்று விடலாம் என்று ஆசை காட்டுவது. அதற்கும் சரிப்பட்டு வராவிட்டால் மூன்றாவதான 'தண்டம்' முறையை உபயோகப்படுத்துவது'' - என்றார்;

பழைய காலத்தில் போலீஸ்காரர்கள் தாங்கள் சந்தேகப் பட்டவர்கள் விஷயத்தில் கைக்கொண்ட முறை இது ஒன்றே ஒன்றுதான் என்று சொல்லலாம். குற்றம் செய்ததை நிரூபிக்க சாஸ்திரீய முறையில் முயற்சிகள் செய்யப்படவில்லை.

சுமார் எண்பது வருடங்களுக்கு முன்னர் தான் முதன் முதலாக லாம்புரோஸோ என்ற இத்தாலிய மனோதத்துவ நூல் பேராசிரியர் குற்றம் செய்பவர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து ஒரு புத்தகம் வெளியிட்டார். அதில் ஒவ்வொரு விதமான குற்றம் செய்பவரின் 'சாமுத்திரிகா லட்சணங்களை' வர்ணித்திருக்கிறார்:

''திருடர்களுடைய முகமும், கண்களும் அமைதியற்றுஇயங்கிக்கொண்டே இருக்கும். அவர்கள் கண்கள் சிறியவையாய்ச் சற்றுக் கோணலாய் அமைந்து பார்வை ஒரு பொருளிலிருந்து மற்




< அல்ட்ரா வயலெட் விளக்கு வெளிச்சத்தில் சந்தேகாஸ்பதமான தஸ்தாவேஜு'களைக் காட்டிப் பரிசோதிக்கிறார் இந்த நிபுணர்.





'டிஸெப்டோகிராப்' பற்றி திரு பரமேஷ் விவரிப்பதைக் கேட்டறிந்து கொள்ளும் கட்டுரை ஆசிரியர்......



......துப்பாக்கித் தோட்டாக்களில் ஏற்பட்டுள்ள கீறல்களை ஒப்பிட்டு நோக்கும் கருவியையும் ஆராய்கிறார்.

றொரு பொருளுக்குப் பாய்ந்து கொண்டிருக்கும். கண் இமைகள் ஒன்றோடொன்று மிகவும் நெருங்கியவையாகவும் ரோமம் அடர்ந்தவையாகவும் இருக்கும். மூக்கு வளைந்தோ, சப்பையாகவோ இருக்கும். காதுகள் தலைக்கப்பால் தொன்னைக் காதுகள்போல் நீட்டிக் கொண்டிருக்கும்....''


இதே மாதிரி அவர் கொலைகாரர்கள், பொய்க் கையெழுத்திடுவோர், மோசக்காரர்கள் போன்ற பல குற்றமிழைப்பவர்களைப் பற்றி வர்ணித்துக் கொண்டே போகிறார்.


ஹாவ்லக் எல்லிஸ், மர்ரோ, லாம்புரோஸோ முதலியவர்கள் இடது கைக்காரர்கள்தான் அதிகமாகக் குற்றம் செய்பவர்கள் என்று கூறி அதை நிரூபிக்கும் புள்ளி விவரங்களையும் தந்திருக்கிறார்கள்.


உடல் அமைப்புகளைப் பற்றிய இந்த ஆராய்ச்சியெல்லாம் படிக்க ருசிகரமாயிருக்கிறது. ஆனால் இவற்றை மட்டுமே வைத்துக் கொண்டு ஒருவனைக் குற்றவாளி என்று நிர்மாணித்து விட முடியுமா? இடது கையை உபயோகிப்பவர்களையெல்லாம் குற்றவாளிகள் என்று சொல்லிவிட முடியுமா? புள்ளி விவரங்கள் கொடுத்த அந்தப் பிரபல ஹாவ்லக் எல்லிஸே இடது கையை உபயோகித்துக் காரியங்கள் செய்பவர்தானே!

குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக நடைமுறையில் செயல்படக் கூடிய ஒரு விஞ்ஞான முறையைப் பிரெஞ்சுக்காரரான பெர்ட்லான் என்பவர் முதன் முதலாகக் கண்டுபிடித்தார். இதன்படி குற்றவாளி என்று கைதாக்கப்பட்டவர்களின் பல விதமான அளவுகளை எடுத்துக் கொள்வார்கள். உட்கார்ந்திருக்கும்போது இடுப்பிலிருந்து கழுத்து வரையில் உள்ள முதுகெலும்பின் நீளம், தலையின் நீளமும் அகலமும், இடது கால், இடது மோதிர விரல், சுண்டு விரல் முதலியவற்றின் நீளங்கள்—இப்படிப் பல அளவுகள். ஒருவன் வளர்ச்சியடைந்த பிறகு அவனுடைய எலும்பு

'ஸ்பெக்ட்ரோகிராப்.'







குட்டு வெளிப்பட்டது: (இடது) கள்ளக் கடத்தலில் தலையணைக்குள் ஒளித்துக் கொண்டுவரப்படும் வைரங்கள் (வலது) எக்ஸ்ரேயில் இப்படித் தெளிவாகத் தெரிந்து விடுகின்றன.

களின் அமைப்பில் மாறுதல்கள் ஏற்படுவதில்லை என்ற முடிவை அடிப்படையாகக் கொண்டு இந்த முறையைப் பின்பற்றுகிறார்கள். கூடவே போட்டோ படத்தையும் வைத்துக் கொள்வார்கள். குறிப்பிட்ட ஓர் ஆசாமி முன்னமேயே ஒரு முறை குற்றம் செய்து போலீஸாரிடம் அகப்பட்டுக்கொண்டிருந்தவன்தான் என்று நிரூபிக்கப் பல வருஷங்கள்வரை மேல்நாட்டுப் போலீஸ்காரர்கள் இந்த முறையை பின்பற்றி வந்தார்கள்.

இந்த நிலைமையில் விஞ்ஞான ரீதியில் அமைந்த. முழுதும் நம்பத் தகுந்த ஒரு துப்பறியும் முறை கண்டுபிடிக்கப்பட்டு அது போலீஸ் இலாகாவின் உபயோகத்துக்கு வந்தது. அதுதான் 'கை விரல் அடையாளம்' முறை. இது முதன் முதல் நமது தேசத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு மனிதனது விரல் ரேகையைப் போல் இன்னொரு மனிதனது விரல் ரேகை அமைந்திருக்கவில்லை என்ற உண்மையை ஆதாரமாகக் கொண்டு இந்த விரல் ரேகை அடையாளத்தை முக்கியமான சாட்சியாகக் கருதுகிறார்கள். அப்படித் தப்பித் தவறி ஒரே விதமான ரேகை இருக்கக் கூடுமானால் அது 64000 கோடி மனிதர்களுள் ஒருவரது இன்னொருவரதைப் போல் இருக்கலாமாம். நீதிஸ்தலங்களில் விரல் ரேகை அடையாளத்தைச் சரியான நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

வெகு காலம்வரை பத்து விரல்களின் ரேகை அடையாளங்களையும் பதிவு செய்து வந்தார்கள்; பிறகுதான் ஒரு வங்காள ரேகை நிபுணர், துப்புத் துலக்குவதற்கு ஒரே ஒரு விரலின் ரேகை அடையாளம் போதுமானது என்று நிரூபித்துக் காட்டினார்.

கைது செய்யப்பட்டவர்கள், தண்டனை யடைந்தவர்கள் இவர்களின் ரேகை அடையாளங்களைப் போலீஸார் எடுத்துக் கொள்ள முடியும். இவற்றை ஒவ்வொரு தேசப் போலீஸாரும் பல லட்சக் கணக்கில் சேகரித்து வைத்திருக்கிறார்கள். ஒரு குற்றவாளி ஏற்கனவே குற்றம் செய்தவனாயிருந்தால் அவனது பழைய ரேகை அடையாளத்தை வைத்துக் கொண்டு, அவனைக் கண்டுபிடித்து விடுவார்கள். புதிதாகக் குற்றம் புரிந்தவனாயினும் அவன் கை விரல் ரேகைகள், குற்றம் நடந்த இடத்தில் உள்ள சாமான் எதன் மீதாவது அநேகமாகப் பட்டிருக்கும். அவற்றை எடுத்துச் சந்தேகத்துக்குரியவனான நபரின் விரல் அடையாளத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். வேலூரில் சென்னை மாநில விரல் ரேகைச் சாலையின் தலைமைப்பீடம் இயங்கி வருகிறது. விஞ்ஞான வசதிகள் அபிவிருத்தியடைந்திருப்பதற்கு ஏற்ப கொலை, கொள்ளை முறைகளும் முன்னேற்றமடைந்திருக்கின்றன.

குற்றங்கள் நவீன சாதனங்களுடன், நவீன முறையில் இழைக்கப்படுவதைச் சமாளிக்கப் போலீஸ்காரர்கள் தாங்களும் மிக நவீன சாதனங்களை உபயோகிக்க வேண்டும். இதற்காகவே முன்னேற்றமடைந்த எல்லாத் தேசங்களிலும் 'போரென்ஸிக் லெபரேட்டரி' **(Forensic Laboratory)** என்ற ஆராய்ச்சிச் சாலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.


இந்தியாவில் இத்தகைய சோதனைச் சாலைகள் நான்கு இருக்கின்றன. ஒன்று கல்கத்தாவில் உள்ள மத்திய அரசாங்கச் சோதனைச் சாலை. மற்று வங்காளம், மகாராஷ்டிரம், சென்னை ஆகிய ராஜ்யங்களில் ஒவ்வொன்று இருக்கிறது; எல்லாம் சில வருஷங்களுக்குள்ளாகத்தான் ஏற்பட்டவை.

சென்னையில் உள்ள சோதனைச் சாலையின் பல பிரிவுகளும் ஒரே இடத்தில் இல்லை. சென்னை வைத்தியக் கல்லூரியில் ஒரு பகுதியும், போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் (ஸி. ஐ. டி.) காரியாலயத்தில் ஒரு பகுதியும், ரெவின்யூ இலாகாவில்ஒரு பகுதியுமாகத் தற்சமயம் இருந்து வருகின்றன. இவற்றையெல்லாம் ஒரே இடத்தில் வைப்பதற்காக இன்ஸ்பெக்டர் ஜெனரல் காரியாலயத்துக்குப் பக்கத்தில் தனிக் கட்டடம் கட்டி வருகிறார்கள்.

இந்த மூன்று பகுதிகளுக்கும் டாக்டர் நடராஜன் அவர்கள் தலைவர்.

ரெவின்யூ போர்டு காரியாலயத்தின் அடித்தளத்தில் உள்ள சோதனைச்சாலைக்குள் புகுந்தால், முதன் முதலாகச் சில ஆயிரக் கணக்கில்

(இடது) கைக்குட்டையில் உள்ள லாண்டரி எழுத்துக்களை ஒருவன் வேண்டுமென்றே அழித்து விட்டாலும் (வலது) போட்டோக்கலை நிபுணர் 'இன்பிரா ரெட் பிலிம்' உபயோகித்து அதைத் தெளிவாகக் காட்டி விடுவார்.



தலைவலியால் மாலை முழுவதுமே வீணாகியிருக்கும்...



ஸாரிடான் 'ரோஷ்'


வலியைப் போக்குகிறது, ஆசுவாசப் படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது

ஸாரிடான் துரிதமாக, நிச்சயமாக கெடுதல் எதுவுமின்றி, நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, உடல்வலி, பல்வலி, ஜுரம் வரும்போலிருப்பது, சாதாரண உடல் கோளாறுகள் இவற்றிலிருந்து நிவாரணம்பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். பெரியவர்களுக்கு 1 வில்லை; குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை.



ஸாரிடான் ஒரே வில்லை போதும்
ஒரு வில்லை 13 நயா பைசா

'ரோஷ்' தயாரிப்பு   ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்   (WT-VT-4739)



முகத் தோற்றத்தை மட்டும் பார்த்து 'இவன் குற்றவாளி' என்று சொல்வது சாத்தியமில்லை என்று நிரூபிக்கும் சாதனம் இது.

விதம் விதமான கண்ணாடி பாட்டில்களைத் தரிசிக்க நேரும். ஆனால் அவையெல்லாம் காலிபுட்டிகள். பறிமுதல் செய்யப்பட்ட மதுபான வகைகள் அடங்கியிருந்த புட்டிகள். உள்ளே அந்தக் காரியாலய அதிகாரி திரு தாமோதரன் அவர்கள் இருக்கும் பக்கம் சென்றால், பீரோக்களில் முதல் தரமான விஸ்கி பாட்டில்கள் இருக்கின்றன. ஒரு பக்கத்தில் கஞ்சாவும், அபினியும், பெட்டி பெட்டியாக நிறைந்து கிடக்கின்றன. இவை யெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டவை. லாகிரி வஸ்துக்களுக்கு அடிமையான ஒருவன் இந்த இடத்தைப் பார்த்தானால் 'ஆ! சொர்க்கம் என்று ஒன்று உண்டானால் அது இதுவே அது இதுவே' என்று பாடுவான். அநுமதியின்றி மதுபானம் செய்ததற்காகக் கைதுசெய்யப்பட்டவர்களின் இரத்தத்தை இங்கே பரிசீலனை செய்து, அதில் சாராயக் கலப்பு இருப்பதை நிரூபிக்கிறார்கள்.

சென்னை இரகசிய போலீஸ் காரியாலயத்தைப் பார்த்தால் அங்கே இரகசியமாக எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை. அது போலீஸ் இலாகா மாதிரியும் தோன்றவில்லை. அப்படி யிருப்பதுதானே இரகசியப் போலீசுக்கு அழகு!

தங்கள் ஊர், ஜில்லா என்று குறுகிய நோக்குடன் நிறுத்திக் கொள்ளாமல் பரந்த மனப்பான்மையுடன் அகில இந்தியாவுக்கும் தங்கள் 'கலைத் திறனை' வாரி வழங்கும் சில கேடிகளைப் பற்றிய சரித்திரக் குறிப்புக்களைச் சேகரித்து ஒழுங்குபடுத்தி வைத்திருக்கிறார்கள் இங்கே. இவைதான் குற்றங்களைக் கண்டு பிடிக்கப் போலீஸின் ஜீவநாடியாக அமைந்திருக்கின்றன.

இந்தக் கட்டிடத்தில் பொய்க் கையெழுத்துக்கள், பொய் நோட்டுக்கள், பொய் நாணயங்கள் இவற்றைப் போட்டோப் பிடிப்பின் உதவி கொண்டும். கிரணங்களின் உதவி கொண்டும் கண்டுபிடிக்கிறார்கள். திருடர்களைப் பிடிக்க விஞ்ஞானம் உதவுகிற இன்னொரு முறை விசித்திரமானது. அதாவது அடிக்கடி திருட்டுப்போகும் பணப் பை, பேனா முதலிய சாமான்கள் மீது ஒருவிதமான பவுடரைத் தடவி விட்டால் அந்தப் பொருள்களைத் தொடுபவர் விரல்களில் அது ஒட்டிக் கொள்ளும். வெறும் கண்களுக்கு ஒன்றுமே தெரியாது. 'அல்டிரா வயலெட்' கிரணங்களில் பார்த்தால் அந்தப் பௌடர் கையில் பளிச்சென்று தெரிகிறது. இந்தச் சோதனையை இங்கே பார்க்க முடிந்தது. இதே அல்ட்ரா வயலெட் விளக்குக் கிரணங்கள் அழிக்கப்பட்ட எழுத்துக்களைக் கூடப் பளிச்சென்று காட்டிவிடும். சாதாரணமாகக் குசலம் விசாரித்து எழுதப்பட்ட கடிதத்தில் கையெழுத்தைமட்டும் வைத்துக்கொண்டு மற்றவற்றை அழித்து வேறு ஏதோ தனக்குத் தேவையானபடி டைப் அடித்து ஒரு போக்கிரி மோசடி செய்ய நினைத்தால் அவன் ஜம்பம் இந்த அல்ட்ரா வயலெட் விளக்கினிடம் செல்லாது! துப்பாக்கியால் கட்டுக் கொலை செய்ததாகத் தொடரப்படும் வழக்குகளில் சம்பந்தப்பட்ட ரவை குண்டுகளை இங்கே சோதிக்கிறார்கள். அவை எந்தத் துப்பாக்கியிலிருந்து வெளிவந்தவை என்று துப்பாக்கிக் குழாயிலிருந்து வெளியேறும் போது அவற்றின் மீது ஏற்படும் கீறல்களிலிருந்து சொல்லிவிட முடியும். இன்னும் பாதச் சுவடுகள், மோட்டார் டயர் சுவடுகள் இவற்றை ஆராய்ந்து துப்புத் துலக்கவும் கற்றறிந்தவர்கள் இங்கு உண்டு. நல்ல அநுபவம் வாய்ந்த திரு பிச்சாண்டி அவர்கள் இந்தப் பிரிவின் மேலதிகாரி.

சென்னை வைத்தியக் கல்லூரியில் டாக்டர் நடராஜன் அவர்கள் 'போரன்ஸிக் லாபரேட்டரி'யைப் பற்றிக் கரைகடந்த உற்சாகத்துடன் பேசினார். மாணவர்களுக்குச் சொல்வது போல் விஷயங்களை எடுத்துச் சொன்னார். நீதியை நிலைநாட்ட உதவும் வகையில் பல சோதனைகளைச் செய்வதுடன் 'பாரின்ஸிக் மெடிஸ'னில் விசேஷப் பயிற்சி பெற விரும்பும் பட்டதாரிகளுக்குப் பாடபோதனையும் நடக்கிறது இங்கே. பிற ராஜ்யங்களிலிருந்தும் அதிகாரிகள் வந்து இங்கு நடப்பனவற்றைக் கவனித்துப் பயனடைகிறார்கள் என்பதைக் கேட்டபோது, பெருமையாகத்தான் இருந்தது.

நீதி நிலைக்கவும், உண்மை வெளிப்படவும் இங்கு நடக்கும் சோதனைகள் பலப் பல. சிலவற்றை மட்டும் பார்ப்போம். ரத்தக் கறைகளைச் சோதனை செய்து ஒப்பிட்டுப் பார்த்துத் தங்கள் முடிவைச் சொல்கிறார்கள். சந்தேகாஸ்பதமான சில மரணங்களில் பிரேதத்தின் வயிற்றை மட்டும் பிரித்தெடுத்து அதில் விஷப் பொருள்கள் ஏதேனும் உள்ளனவா என ஆராய்வார்கள்.

திருடிவிட்டுக் கம்பி நீட்டினான் என்று கூறுவதுண்டு. கம்பியையே திருடுவோர் உள்ளனர். மின்சாரக் கம்பிகளை அங்கங்கே வெட்டி எடுத்துப் போய் உருக்கி விற்றுவிடுவார்கள். இதைத் தடுக்க எடுக்கப்படும் முயற்சிகளுக்கு இச் சோதனைச் சாலை உதவுகிறது. ஒருவனிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட கம்பியின் முனையையும் கம்பத்திலிருந்து அறுந்து தொங்கும் கம்பியின் முனையையும் பரிசோதித்து ஒப்பிட்டுப் பார்த்து இது இன்ன

> மனைவி: பட்டாக கடுகிறீர்களா?
>
> புது மாப்பிள்ளை: பட்டாக என்றாலே எனக்குக் கட்டோடு பிடிக்காது.
>
> மனைவி: அதனால் என்ன? உதிரியாக வைத்துக் கொண்டு ஒவ்வொன்றாகக் கடுங்களேன்!

இடத்திலிருந்து திருடப்பட்டது எனத் தீர்மானமாய்ச் சொல்லலாம்!

மோட்டாரோட்டி ஒருவன் காரை யார் மீதோ இடித்துவிட்டுப் பயந்து ஓடிவிடுகிறான். ஸ்தலத்தில் கண்ணாடித் துண்டுகள் சிதறிக் கிடக்கின்றன. அவற்றைப் போலீஸார் எடுத்துச் செல்கிறார்கள். பின்னால் எங்கோ ஓர் ஒர்க்ஷாப்பில் ரிப்பேராகிக் கொண்டிருக்கும் காரில் முன்னால் கண்ணாடி உடைந்திருப்பதைக் காண்கிறார்கள். அதை அப்படியே பிரேமுடன் பரிசோதனைச்சாலைக்கு அனுப்பினால் இரு பகுதிகளாகக் கிடைத்த துகள்களை இணைத்துப் பார்த்து அதன்மூலம் இந்த வண்டிதான் அந்த ஆள் மீது மோதியது என்று உறுதியாகச் சொல்லலாம். இதேபோல் குற்றம் நடந்த இடத்தில் கிடக்கக்கூடிய (பெயின்ட்) வர்ணத் துகள்களைக் கூட ஒப்பிட்டுப் பார்த்து ஆராயலாம். வர்ணத் துகள்களை ஆராய 'ஸ்பெக்ட்ராஸ்கோப்' என்ற கருவி பயன்படுகிறது.

மர்மமான விதத்தில் ஒருவன் திடீரெனக் காணாமல் போய் விடுகிறான். இறந்துவிட்டான் என்று கருத இடமிருக்கிறது. ரொம்ப நாளைக்குப் பிறகு ஒரு மண்டை ஓடு கிடைக்கிறது. மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கு முன்னால், தங்களுக்குக் கிடைத்திருப்பது இறந்துவிட்டதாகத் தாங்கள் கருதுபவனுடைய மண்டை ஓடுதானா என்று போலீஸார் நிர்ணயிக்கவேண்டும். இதற்காக அந்த மண்டை ஓட்டையும் குறிப்பிட்ட அந்த நபரின் வீட்டில் கிடைக்கக் கூடிய அவனது புகைப்படம் ஒன்றினையும் 'பாரின்ஸிக் லாபரேடரி'க்கு அனுப்புகிறார்கள். இவ்விரண்டையும் ஒரே அளவினதாய்ப் படமெடுத்துப் பொருந்தச் செய்து பார்த்து அது அவன் மண்டையோடா இல்லையா என்பதை நிபுணர்கள் கூறுகிறார்கள். இது ஓர் அரிய சாதனை. இந்த இலாகாவில் செய்யப்படும் சோதனைகள் பெரும்பாலும் நீதிபதிகளின் கோரிக்கைக்கிணங்கச் செய்யப்படுபவை என அறிந்தேன்.

இவ்விதமாக விஞ்ஞானம் போலீஸாரின் சிக்கல்களை விடுவித்துத் துப்புத் துலக்கவும், நீதிபதிகள் நீதி வழங்கவும் பயன்பட்டு வருகிறது.

ஒரு புதிய துப்பறியும் சாதனத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். அது பொய் சொல்வதைக் கண்டு பிடித்துவிடுகிற 'லை டிடெக்டர்' என்ற இயந்திரம். இதை 'டிஸைப்போகிராப்' என்றும் சொல்வதுண்டு. குற்றம் செய்ததாகச் சந்தேகிக்கப்பட்ட மனிதனை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து அவனது 'இரத்த அழுத்தத்தையும்', 'நாடித் துடிப்பை'யும் அளப்பதற்காகக் கையிலும், முன் கையிலும் கட்டுக்கள் போடுகிறார்கள். மார்பின் மீது மூச்சு விடுவதைத் தெரிவிக்கும் குழாயைப் பொருத்துகிறார்கள். உள்ளங்கைகளில் மின்சாரத் தொடர்புகளிருக்கும்படி செய்கிறார்கள்.

நாற்காலியில் இருக்கும் மனிதனைப் பத்துப் பன்னிரண்டு கேள்விகள் கேட்கிறார்கள்.

'என்ன டிபன் சாப்பிட்டாய்?' என்பது போன்ற பொதுவான கேள்விகளுடன் குற்றம் சம்பந்தப்பட்ட கேள்விகளும் கேட்பார்கள். அவன் உண்மை சொல்லும்போது இரத்த அழுத்தம் சரியான அளவுடனிருக்கும். பொய் சொல்லும்போது அதிகமாகும். இதே போன்று, நாடித் துடிப்பு, மூச்சு விடுதல் இவையும் பாதிக்கப்படும். டிஸைப்போகிராப் இயந்திரம் பரிசோதனைக்குட்படுபவனுடைய சரீரத்தில் ஏற்படும் இந்த மாறுதல்களுக்கு ஏற்ப 'கிராப்' வரைந்து கொண்டு வருகிறது. அதை ஆராய்ந்து எந்தக் கேள்விகளுக்கு உண்மை பதில் கிடைத்தது, எதற்குப் பொய் சொன்னான் என்பதைக் கண்டுபிடிக்கலாம். இந்த இயந்திரம் சென்னை மாநிலக் கல்லூரியில் இருக்கிறது. மனோ தத்துவப் பேராசிரியரான திரு பரமேஷ் அவர்கள் இது வேலை செய்யும் விதத்தை விளக்கிக் கூறினார். இதனால் கிடைக்கும் சாட்சியத்தை அமெரிக்காவில் சில ராஜ்ய நீதி ஸ்தலங்கள் மட்டுமே அங்கீகரிக்கின்றன. இந்தியாவிலும், பிரிட்டனிலும் இந்த இயந்திரச் சாட்சியத்தை ஏற்றுக் கொள்வதில்லை. ஆகவே ஒருவனைக் குற்றவாளி என்று இந்த இயந்திரத்தைக் கொண்டு மட்டும் நிரூபிக்க முடியாது. அதற்கு வேறு பல சாட்சியங்களும் பொருந்தி வரவேண்டும். ஆனால் இதன் துணை கொண்டு 'இவன் குற்றமற்றவன்' என்று ஒருவனைப் பற்றி முடிவாகச் சொல்லலாம். ஒரு வழக்கு விஷயமாக நாலைந்து பேர் மீது ஒரே தருணத்தில் சந்தேகமேற்பட்டால் அனாவசியச் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க இது ஒரு வரப்பிரசாதமாகும். சென்னை போலீஸார் இதில் இப்போது பரிசோதனைகள் பல நடத்தி வருகிறார்கள்.

ஃ ஃ ஃ

இந்த விஷயங்களை யெல்லாம் தெரிந்து கொள்வதற்காக இன்ஸ்பெக்டர் ஜெனரல் காரியாலயத்துக்குச் சென்றிருந்தேன். டெப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் (இரகசியப் போலீஸ் இலாகா) திரு ஆர். எம். மகாதேவன் அவர்கள் போலீஸ் விஞ்ஞான சம்பந்தமாகச் சென்னையில் இன்னின்ன வசதிகள் இருக்கின்றன என்று விவரங்களைக் கூறி அவற்றைப் பார்ப்பதற்கான அனுமதி தந்ததோடு தமது உதவியாளரான திரு சுப்பிரமண்யத்தையும் கூட அனுப்பி வைத்தார். அதற்கு இந்தக் கட்டுரையைப் படித்து முடிக்கின்ற வாசகர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.


புடவை
புதிதா?
இல்லையே-
லக்ஸ்
சலவை
LUX
For gentle washing
of lovely clothes

இளவேனில் வந்தது எதிர்

மகாகவி காளிதாஸன் எழுதிய சிறந்த நாடகம் 'அபிஞ்ஞான சாகுந்தலம்'. இது வடமொழி இலக்கியங்களில் மிக உயர்ந்த இடம் வகிக்கிறது. உலக இலக்கியத்திலே உன்னத ஸ்தானம் பெற்றுப் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இந்த நாடகத்தை முன்னர் மறைமலை அடிகளும் பின்னர் திரு க. சந்தானம் அவர்களும் தமிழில் வசன ரூபத்தில் மொர்ழிபெயர்த்துத் தந்திருக்கின்றனர். இந்த நாடகத்தை ஒரு காவியமாகவே தமிழ் அறிஞர் திரு நடேச பிள்ளை அவர்கள் எழுதி இன்றையத் தமிழ் இலக்கிய உலகை வளப் படுத்தியிருக்கிறார்.

பெயரைப் பார்த்த உடனேயே இந்நூல் முழுவதும் வெண்பாக்களால் ஆன காப்பியம் என்று தெரிய வரும். பண்டைக் காலத்தில் புகழேந்திப் புலவர் நளனது சரிதையை நள வெண்பா என்று காப்பியமாக எழுதினார். இந்த நூற்றாண்டிலோ மகா வித்துவான் ரா. ராகவ அய்யங்கார் பாரி வெண்பாவையும், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார் அகலிகை வெண்பாவையும் நல்ல காப்பியங்களாகப் பாடிக் கொடுத்திருக்கின்றனர். இவர்களது அடிச்சுவட்டிலேதான் இந்தச் சகுந்தலை வெண்பாவும் உருவாகியிருக்கிறது.

நல்ல காதல் காவியமாக எழுந்த சகுந்தலை கதையில் சோகம், வீரம் முதலிய பல சுவைகளும் இடம் பெற்றிருப்பதை நாம் அறிவோம். அதோடு விதியின் விளையாட்டும், பெண்ணின் பெருமையும் இடையிடையே விரவி வருகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாகப் பாரத நாடு என்று நமது நாடு அழைக்கப்படுவதற்கே காரணமாக இருந்த பரதனைப் பெற்றெடுத்த காதலர்களே துஷ்யந்தனும் சகுந்தலையும் என்பதும் இக் காவியத்திற்கே ஒரு பெருமை தருகிறது.

இக் காவியத்தில் கதைப் போக்கு சிறந்திருக்கிறது. 'மின்னற் கொடியாள் மேனகை' விண்ணிருந்து மண்ணுக்கு இறங்குவதும், கோசிக முனிவர் அவளைக் கண்டு காமுறுவதும், அவர்களது திருமகளாய்ச் சகுந்தலை பிறப்பதும், அக்குழந்தையைப் பின்னர் கண்வ முனிவர் எடுத்து வளர்ப்பதும் மிக்க சுவையோடு சொல்லப்பட்டிருக்கிறது.

மழலை மொழி பேசி
மான் கன்றினோடு
தழுவி விளையாடித்
தத்தும் — கிளியுடனே
கொஞ்சிக் குலாவி
கிளர் வண்டுடன் பாடி
விஞ்சை மகள் வளர்த்த
வாறு

என்று கவிஞர் சகுந்தலை வளர்ந்ததைச் சொல்லும்போது சகுந்தலை மட்டுமா மான்




களுடனும், கிளிகளுடனும்' கொஞ்சுகிறான்; தமிழ் அல்லவா கொஞ்சி விளையாடுகிறது என்று எண்ணத் தோன்றுகிறது எனக்கு. அந்தளவு சுவையாகப் பாடல் அமைந்திருக்கிறது.

'வானுலகும் காணு வனப்புடைய இந்த வனிதையை அயோத்தி மன்னன் துஷ்யந்தன் காண்கிறான்; காதல் கொள்ளுகிறான் நல்ல இளவேனிற் பருவத்தே. ஆம், அந்த இளவேனில் இருவர் உள்ளத்தும் ஓர் உவகையை ஊட்டுகிறது. கவிஞர் பாடுகிறார்.

தேமா தளிரேந்தத்
தென்றல் மலர் தூவக்
காமா நு ராகம்
குயில் எழுப்பப் — பூமா
நுளம் பூத்து உயிர்கட்கு
உவகை அளிக்க
இளவேனில் வந்தது எதிர்

சகுந்தலை வெண்பாவில் ஒவ்வொரு பாடலுமே இளவேனில் எதிர் வந்தது போல் எவ்வளவு ரஸமாக இருக்கிறது. காளிதாஸனின் சாகுந்தலத்தைப் படித்து மகிழ்ந்த அந்த ஜெர்மானியக் கவிஞனை கத்தே 'வீக தென்றலின் குளிர்ச்சியும் விஙகு இளவேனிலின் மென்மையும் கலந்து இனிக்கும் காவியம் இது' என்று பாராட்டியிருக்கிறானே!

சகுந்தலையும் துஷ்யந்தனும் கந்தருவ மணம் புரிந்து கொள்வதும் பின்னர் பிரிவதும் ஊழ்வினை வசத்தால் துருவாசனது சாபம் பெறுவதும் அதனால் சகுந்தலையைத் துஷ்யந்தன் ஏற்க மறுப்பதும் கடைசியில் இவர்களது மகன் பரதன் மூலமாக இவர்கள்



இணைவதும், 'சுவைதேர் கலையறிஞர்' எல்லாம் சுவைக்கும் வண்ணம் 343 பாடல்களில் வளர்கிறது. கடைசியில்,

இமயத்தோடு குமரி
எல்லை ஒளிர் நாடு
இமையோரும் பாரதம்
என்று ஏத்த

பரதன் மகுடம் சூடுகிறான். இந்த மகுடாபிஷேகக் கோலத்தைக் கண்டு 'மண்ணகத்து மாந்தர் மனம் களிக்கின்றனர். விண்ணகத்து வேந்தர்களும் வியந்துரைக்கின்றனர். நாமோ இந்த விந்தைச் சரிதம் கண்டு வியக்கிறோம்.

நளவெண்பாப் பாடிய புகழேந்தி தன்னை ஆதரித்த சந்திரன் சுவர்க்கியையும், கவிச் சக்கரவர்த்தி கம்பன் தன்னை ஆதரித்த வள்ளல் சடையப்பரையும் எப்படி அவரவர் எழுதிய காலத்தில் பாராட்டினார்களோ அப்படியே கவிஞர் பிள்ளையவர்களும் 'திரையோதம் சூழ்ந்தொலிக்கும் தென்னிலங்கை காக்கும், துரைராமநாதன் தன் கீர்த்தியை இடையே பாடிப் பெரு மகிழ்வு எய்துகிறார்.

இக் காவியம் முழுதும் வெண்பாக்கள் மிகவும் செம்பாகமாக அமைந்திருக்கிறது. தங்கு தடை இல்லாமல் மேலும் மேலும் எளிய இனிய கதியோடு நடக்கிறது. பல பாடல்கள் நளவெண்பாப் பாடல்களை ஞாபகப்படுத்துகின்றன. வெள்ளக்கால் முதலியார் அகலிகை வெண்பாப் பாடல்களைப் படித்த டாக்டர் சாமிநாதய்யர் அவர்கள் அக்காவியத்தை ஒரு ரச புஞ்சம்' என்று பாராட்டியிருக்கிறார்கள். அவர்கள் இன்று ஜீவியவந்தராக இருந்தால் அதே பாராட்டை இச் சகுந்தலை வெண்பாவுக்கும் தந்திருப்பார்கள். ஏதோ சேக்கிழார் போன்ற ஒரே ஓர் அமைச்சர்தான் பெரிய புராணம் என்ற காவியத்தைப் பாடும் ஆற்றல் பெற்றிருந்தார் என்றில்லை. இன்றைய அரசியல் சூழ்நிலையில் பல சிக்கல்களுக்கிடையே மந்திரி பதவி ஏற்றிருந்த நடேசபிள்ளையவர்களும் இப்படி ஒரு காவியம் பாடும் ஆற்றல்பெற்றிருக்கிறார்என்றால் தமிழன்னை இத்தகைய பிள்ளைகளைப்பெறுவதில் எவ்வளவு மகிழ்ச்சி அடைவாள்.

— தொ. மு. பாஸ்கரன்

சகுந்தலை வெண்பா: ஆசிரியர்: இலங்கை முன்னாள் அமைச்சர் திரு சு. நடேச பிள்ளை; வெளியீடுபவர்: இராமநாதன் கழகம், சுன்னாகம்; இலங்கை; விலை: ரூ. 2.50.



வீராங்கனைக்கு வரவேற்பு

அனுசூயா

கல்யாண அழைப்புப் பத்திரிகைகளில் மணமகன், மணமகள் இவர்கள் சர்வகலா சாலைப் பட்டம் பெற்றிருந்தால் 'பி. ஏ., பி. எஸ்ஸி., என்றெல்லாம் அதைப் பற்றித் தெரிவித்துக் கொள்ளத் தவறுவதில்லை. படிப்பில்லாமல் வேறு பெரிய யோக்கியதாம்சங்களிருந்தால் அவற்றைப் பற்றித் தெரிவித்துக் கொள்ள வேண்டாமோ? சமீபத்தில் பிரபல ரஷியப் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் திருமணம் நடந்தது. அவர்கள் விவாக அழைப்புக் கடிதம் பின்வருமாறு இருந்திருக்கும்:

திருநிறைச் செல்வன் அண்டிரியன் நிக்கோலேவாவுக்கும்
(விண்வெளியில் பூமியை 64 முறை சுற்றி வந்து 1,612,000 மைல்கள் பிரயாணம் செய்தவர்.)

திருநிறைச் செல்வி வாலெண்டினா டெரெஷ்கோவாவுக்கும்
(விண்வெளியில் பூமியை 48 முறை சுற்றி வந்து 1,240,000 மைல்கள் பிரயாணம் செய்தவர்)

நவம்பர் 3-ந் தேதியன்று பதிவுத் திருமணம் நடைபெறும்.

இருபத்தாறு வயதான டெரெஷ்கோவா விண்வெளியில் முதன் முதல் பிரயாணம் செய்த பெண்மணி. ஆனால் 'நான்தான் முதன் முதல் போன பெண்' என்று லெய்கா சொல்லிக் கொண்டிருக்கிறதாம். உலகத்தில் முதல் முதல் விண்வெளியிலே சென்றது லெய்கா என்ற பெண் நாய்தான். அது இப்போது குட்டிகள் போட்டுக் கொண்டு சௌக்கியமாயிருந்து வருகிறது.

ஸ்ரீமதி டெரெஷ்கோவா இம்மாதம் பதினைந்தாந் தேதி சென்னைக்கு வருகிறார். கூட அவர் விண்வெளிக் கப்பலில் சென்ற அதே சமயத்தில் இன்னொரு கப்பலில் சென்று கொண்டிருந்தாரே அந்தப் பிக்கோவ்ஸ்கி என்பவரும் வருகிறார். இவர்கள் சென்னையில் மூன்று தினங்கள் தங்கியிருப்பார்கள். சென்னை கார்ப்பரேஷன் இவர்களுக்கு வரவேற்பு அளிக்கப் போகிறது. டில்லியில் ஏற்கனவே இவர்களுக்குப் பிரமாதமான வரவேற்பு கிடைத்திருக்கிறது. ராம்லீலா மைதானத்தில் 40,000 பேர் கூடியிருந்தார்கள். பாலம் விமான நிலையத்தில் ஆண்களைவிடப் பெண்களே அதிகமாகக் கூடியிருந்தார்கள், வானவெளிப் பிரயாணிகளை வரவேற்க. பெண்குலமே ரொம்பப் பெருமைப்பட வேண்டிய காரியம்தானே வாலெண்டினாவின் சாதனை!

சத்துள்ள உணவு

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு சுகாதார அதிகாரி இருந்தார். ஒரு நாள் சமையற்காரனுக்குப் பதிலாக அவரது மனைவியே அவருக்குப் பரிமாறினாள். "இன்றைக்கு நானே சாதம் வடிக்கிறேன்" என்று பெருமையுடன் கூறினாள். "அப்படியா?" என்று கணவன் கேட்டு முன்கூட்டியே நாக்கைச் சப்பிட்டுக் கொண்டார். வழக்கம் போல் நெய் கலந்த சாதம் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டார்; விழுங்கியும் விட்டார். அப்போது அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

"ஏன், நன்றாயில்லையா? கொஞ்சம் இரும்புத் தூள், கொஞ்சம் செப்புத் தூள், கொஞ்சம் துத்தநாகத் தூள், கொஞ்சம் கந்தகம் எல்லாம் போட்டுக் கொதிக்க விட்டிருக்கிறேன்" என்றாள் மனைவி.

"என்னது?" என்று கணவன் கேட்டுத் திகைத்தார்.

"இரும்புத் தூளும், செப்புத் தூளும் சோகைக்கு நல்லதாயிற்றே. துத்தநாகம் உடம்புக்குப் புஷ்டி கொடுக்கும். கந்தகத்தில் புரோட்டீன் சத்திருக்கிறது. ஒரு பெரிய சுகாதார அதிகாரிக்கு வாழ்க்கைப்பட்டு அவரோடு இத்தனை வருஷங்களாகக் குடித்தனம் நடத்தி வரும் எனக்கு இது கூடத் தெரியாதா? நீங்கள்கூட சுண்ணாம்பு சேர்த்துச் சாதம் வடித்தால் உடம்பில் கால்ஷியம் சத்து சேருமென்று சொல்லி யிருக்கிறீர்களே.... புது சுண்ணாம்பு தாளித்து ஓர் எலுமிச்சங்காய் அத்தனை போட்டிருக்கிறேன். சாதம் வெள்ளை வெளேரென்று மல்லிகைப் பூ மாதிரி தனித் தனியாக இருக்கும், பாருங்கள்" என்றாள் சுகாதார அதிகாரியின் மனைவி. இது கதை என்றாலும் ஹோட்டல்களில் சாதத்தில் சுண்ணாம்பைப் போட்டு விடுகிறார்கள் என்று

நிக்கோலேவா




வாலெண்டினா



பிக்கோவ்ஸ்கி





மாதர் உலகம்

சிலர் புகார் செய்து கொண்ட போது சென்னைக் கார்ப்பொரேஷன் சுகாதார அதிகாரி "கண்ணாம்பில் கால்ஷியம் சத்து இருக்கிறது. அது உடம்புக்கு நல்லதுதானே!" என்று மிக அலட்சியமாகச் சொன்னாரல்லவா? அந்த அதிகாரியின் மனைவி மேற்கூறியபடி சாதத்தில் கண்ணாம்பு, கந்தகம் முதலியவற்றைக் கலந்திருந்தால் அவள் கணவர் இல்லானைக் கோபிப்பதற்கில்லையல்லவா?

தண்ணீர் இல்லாத சலவை

துணிகளை வெளுக்கும் தொழில் இராமாயண காலத்திலேயே ஏற்பட்டிருந்திருக்கிறது. ஒரு வண்ணான், தன் மனைவியுடன் சீதாதேவியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததாகச் சொல்லப்படும் அந்தப் பழைய கதைதான் உங்களுக்குத் தெரியுமே.


அந்தக் காலத்தில் துணிகளையும், மரவுரிகளையும் சலவை செய்ய என்னதான் உபயோகித்தார்களோ? தோய்க்கும் கல்லில், அந்தக் கல் உடையும்படி பலமாக அறைந்து தோய்த்திருப்பார்கள் என்பது மட்டும் நிச்சயம். நாளடைவில் உவர் மண்ணை உபயோகித்தார்கள். வெள்ளாவியில் வைத்துத் துணிகளைச் சுத்தப்படுத்தினார்கள். பிறகு துணி மொட மொடப்பாவதற்காகக் கஞ்சியை உபயோகித்தார்கள். அரிசிநொய் இவற்றின் கஞ்சிதான். பிறகு முகலாய மன்னர்கள் காலத்தில் இஸ்திரி போடுவது என்பது ஏற்பட்டது. சென்னையில் இதைப் பொட்டி போடுகிறது என்று சொல்வது வழக்கம். சலவை செய்வதற்கு அநேகமாக இந்த முறைகள்தான் இன்னும் பின்பற்றப்பட்டு வருகின்றன. துணி வெளுப்பதற்கென்றே சலவைப் பௌடர்களும், கஞ்சிப் பௌடர்களும் இருக்கின்றன. அவற்றைப் பல சலவைத் தொழிலாளர்கள் இப்பொழுது உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

பெரிய நகரங்களில் இயந்திரங்களை உபயோகித்துச் சலவை செய்யும் ஸ்தாபனங்கள் ஏற்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. இயந்திரங்களின் முக்கியமான, அவசியமான — பகுதிகள் இரண்டு. ஒன்று துணிகளைப் போடுவதற்கான பீப்பாய் போன்ற பகுதி. இன்னொன்று துணிகளைப் பிழிவதற்கான பகுதி. அதுவும் பீப்பாய் மாதிரிதான் இருக்கும்.

சலவை இயந்திரம்

ஒவ்வொன்றின் நடுவிலும் கம்பம் போன்ற பாகம் பொருத்தப்பட்டிருக்கிறது. இயந்திரம் எவர்ஸில்வர் உலோகத்தினால் ஆனது. மின்சார விசையினால் இயங்கும்படி வசதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

'டிரை கிளீனிங்' என்று சொல்கிறார்களே, அந்தச் சலவையை இத்தகைய இயந்திரங்களில்தான் செய்கிறார்கள். அந்த முறையைத் 'தண்ணீரில்லாத சலவை' முறை என்று சொல்லலாம். ஒரு துளித் தண்ணீரைக்கூடத் துணியின் கண்ணில் காட்டுவதில்லை. ஆனால் அதற்குப் பதிலாக வேறு திரவங்களை உபயோகிக்கிறார்கள்.




துணிகளைப் பிழியும் இயந்திரம்

முதல் தர சலவை ஸ்தாபனங்களில் பெட்ரோலை உபயோகிப்பார்கள். மோட்டார் வண்டிக்குப் போடும் பெட்ரோல் அல்ல. விமானங்களுக்கு உபயோகிக்கும் 'ஏவியேஷன் பெட்ரோல்.' இது விலை அதிகம். ஓடைத் தண்ணீர் போன்று தெள்ளத் தெளிவாக இருக்கும்.

சலவை இயந்திரத்தில் பெட்ரோலை நிரப்பித் துணிகளை அதில் போட்டு மூடியால் மூடி விடுவார்கள். மின்சார விசையைத் திருப்பியதும் பீப்பாயினுள் மிக வேகமாக, அதில் உள்ள பெட்ரோலும், துணிகளும் சுற்றி வரும். ஒரு நிமிஷத்துக்குச் சுமார்

இஸ்திரி போடும் இயந்திரம்



1100 முறை வீதம் சுற்றி வரும். பெட்ரோல் துணியிலுள்ள அழுக்கை யெல்லாம் கரைத்து வெளியிலிருத்தி விடும். பிறகு துணிகளை எடுத்து 'எக்ஸ்டிராக்டர்' என்ற இயந்திரத்தில் உள்ள ஒரு பீப்பாயில் போடுவார்கள். அங்கேயும் துணி பீப்பாயினுள் மிக வேகமாகச் சுற்றி வரும். அப்போது துணியில் உள்ள திரவம் பிழிந்தெடுக்கப்பட்டு விடும்.

துணி இப்போது முக்காலே மூன்று வீசம் காய்ந்து போயிருக்கும். பனிவாடை அடித்து 'நமுத்தது' போல் இருக்கும். அதைப் பிறகு காற்றோட உலர்த்துவார்கள். அறை ஜில்லென்று இருப்பதற்காக ஏர் கண்டிஷன் செய்கிறோமே, அது மாதிரி ஓர் அறையில் உஷ்ணக் காற்று வீசும்படி செய்து அங்கே உலர்த்துவார்கள்.

துணியைச் சுத்தப்படுத்துவதற்கும், அதிலுள்ள திரவத்தைப் பிழிந்தெடுத்துக் காயச் செய்வதற்கும் அதிகமானால் பத்து நிமிஷங்களுக்கு மேல் பிடிப்பதில்லை. ஒரே ஒரு சமயத்தில் இருபது துணிகள் முதல் ஐம்பது வரையில் சுத்தம் செய்ய முடியும். அது இயந்திரத்தின் அளவைப் பொறுத்தது.

இது வரை துணி என்று கூறி வந்தது ட்வீட் போன்ற கம்பளத் துணிகளையே குறிக்கும். இவற்றை மட்டும்தான் பெட்ரோலினால் சுத்தம் செய்ய முடியும். சிலர் பெட்ரோலுக்குப் பதிலாக 'மினரல் டர்பன்டைன்' என்ற மலிவான திரவத்தை உபயோகிக்கிறார்கள்.

பட்டுப்புடவைகளைச் சுத்தம் செய்யப் பெட்ரோல் பயன்படுத்துகிறார்கள் என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ''பெட்ரோல் வாஷ்' செய்தேன்'' என்று பலர் பெருமையாகச் சொல்லிக் கொள்வார்கள். அது தவறு. அவற்றைச் சலவை செய்யப் பிரத்தியேகமான சவுக்காரத் தூள்கள் கலந்த தண்ணீரைத்தான் உபயோகிக்கிறார்கள்; இயந்திரத்தில் போட்டுச் சுற்றுகிறார்கள். ஆனால் அவற்றைச் சுத்தமான தண்ணீர்விட்டுப் பின்னும் இரண்டொரு முறை இயந்திரத்திலேயே அலசுவதுண்டு. பட்டுப் புடவைகளில் மடிப்பு சுருக்கம் முதலியன இல்லாதிருக்க அதைப் பிரத்தியேகமான ஓர் இயந்திரத்தின் வழியாகச் செலுத்துகிறார்கள். பட்டுத் துணிகளில் உள்ள கறைகளை அகற்றப் பிரத்தியேகமான ரசாயனத் திரவங்களைக் கறை பட்ட இடத்தின் மீது தேய்க்கிறார்கள்.

பருத்தி நூல் துணிக்கும் அதற்கேற்ற சவுக்காரத் தூளைப் போட்டுச் சலவை செய்கிறார்கள்.

மேல்நாடுகளில் கோட்டு, ஷர்ட்டு, காலர், பாண்ட்ஸ், டிராயர் ஒவ்வொன்றையும் இஸ்திரி போடத் தனித் தனி இயந்திரங்கள் உள்ளன.

இங்கே காண்பித்திருக்கும் படங்களில் உள்ள இயந்திரங்கள் டென்மார்க்கில் தயாரிக்கப்பட்டவை. முதல்தர டிரை க்ளீனிங் ஸ்தாபனங்களுள் ஒன்று என்று இந்தியாவில் புகழ்பெற்ற 'பாண்டு பாக்ஸ் கம்பெனியார்' இவற்றை வாங்கி வைத்துள்ளனர்.

தண்ணீரில் நனைக்காத துணியைப் பெரியவர்கள் 'மடி' என்று கருதுவார்களா? ❖

குடும்ப அகராதி

திருமாங்கல்யதாரணம் :

ஒரு கன்னிப் பெண் சுமங்கலி என்ற பட்டமடையவும், ஒரு பிரம்மச்சாரி கிருஹஸ்தன் என்ற பட்டம் பெறவும் அவன் அவள் கழுத்தில் 14 காரட்டில் செய்யப்பட்ட திருமாங்கல்யம் என்ற ஓர் ஆபரணத்தைக் கழுத்தில் கட்டுவதற்குப் பெயர். அவன் ஒரு பாய் ஸ்கௌட்டாயிருந்தாலும் சரியானபடி முடிச்சுப் போடத் தெரியாததாகையால் அவளது சொந்த சகோதரியோ, அல்லது சொந்தமில்லாத சகோதரியோதான் மாங்கல்யக் கயிற்றை முடிச்சுப் போட வேண்டும். அப்படிச் செய்வதற்குக் கூலி உண்டு.

மணப் பெண், மணமகன் இவர்களது இஷ்டமித்திர, பந்து வாலிபர்களிடம் — போட்டோ பிடிக்கும் கருவி இருப்பதற்காகவும் திருமாங்கல்யதாரணம் நடப்பதுண்டு என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அந்தப் புதுத் தம்பதிகள் போட்டோவில் சரியாக விழா விட்டாலும், அல்லது போட்டோக் கருவியைக் 'கிளிக்' செய்யும் போது ஒரு வைதிகரோ அல்லது பாட்டியம்மாளோ புகுக்கென்று தலையை நீட்டினாலும் 'ஒன்ஸ்மோர்' என்று கூறி இரண்டாவது முறை திருமாங்கல்யதாரணம் செய்யச் சொல்லும் உரிமை அவர்களுக்கு உண்டு !

பேய் :

இதில் ஆண் பெண் என்று இரண்டு வகை உண்டு. ஆனால் கல்யாண சம்பந்தமாக உபயோகிக்கும் போது மிஸ்டர் பேயைத்தான் குறிக்கும். 'பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் பெண் புளிய மரத்தில் ஏற வேண்டும்' என்று ஒரு பழமொழி சொல்கிறார்கள். இது பாதிப் பழமொழிதான். ''பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் பெண்மட்டுமேயன்றி அவளுடைய பெற்றோர்களும் புளிய மரத்தில் ஏறியாக வேண்டும்'' என்பதுதான் முழுப்பழமொழியாகும்.

குட்டிக் கதை

குருவாயூர் குட்டியம்மாளுக்கும் கும்பகோணம் குப்புசாமிக்கும் திருமணம் நடந்தேறியது. அவர்கள் சம்பாஷணை அபிவிருத்தி வருமாறு :

முதல் வாரத்தில் :

குப்புசாமி: இன்றைக்கு என்ன சமையல் ?

குட்டி: கீரை உண்டாக்கி ரசம் வைச்சேன்.

இரண்டாவது வாரம் :

குப்புசாமி: பால் வாங்கி வந்தது நன்றாயிருக்கிறதா?

குட்டி: ஒரே வெள்ளம்.

மூன்றாவது வாரம் :

குட்டி: இன்றைக்கு என்ன சமையல் பண்ணட்டும்?

குப்புசாமி: கீரை உண்டாக்கு. ஆனால் வெள்ளமாயிருக்கட்டும்.

சூடான செய்தி...நவ நவீன

நேஷனல் எக்கோ டிரான்ஸிஸ்டர் ரேடியோ!



இதோ மேஜை மீது வைப்பதற்கான நேஷனல்-எக்கோ அளிக்கும் முற்றிலும் டிரான்ஸிஸ்டர்கள் கொண்ட முதன் முதலாவது ரேடியோ! இது மெயின்ஸ் கரண்டிலுல் இயங்கும் ரேடியோக்களின் எல்லா சிறப்பம்சங்களையும் ஒருங்கே கொண்டது. தொலைவிலுள்ள ஸ்டேஷன்களையும் வியக்கத்தக்க தெளிவுடன் கேட்கலாம்.

இன்றே உங்களருகில் உள்ள நேஷனல்-எக்கோ டீலரிடம் சென்று இதை இலவசமாக இயக்கிக்காட்டச் சொல்லுங்கள்!

மாடல் BT-757 :

கண்ணைக்கவரும் பெட்டியுள்ள டேபில் மாடல்.
7 டிரான்ஸிஸ்டர்கள் மற்றும் 2 டயோடுகள்.
பாண்டுகள் தேர்வுக்கு பியானோ-கீ அமைப்பு. பிரிண்ட்ட் ஸர்கீட். 9 வோல்ட் பாட்டரி. குறைந்த பாட்டரி செலவு. கிராமபோன் பிக்-அப் மற்றும் வெளி ஏரியலுக்கு ஸாக்கெட்டுகள்

ரூ. 415.00

எக்ஸைஸ் டியூடி உள்பட வரிகள் தனி

ஜெனரல் ரேடியோ & அப்ளையன்ஸஸ் லிமிடெட்
பம்பாய் . கல்கத்தா . மதராஸ் . டில்லி
பெங்களூர் . ஸெகந்திராபாத் . பாட்னா

நேஷனல் - எக்கோ ரேடியோக்கள் தரத்தில் சிறந்தவை—

அவை மான்ஸூனைஸ் செய்யப்பட்டவை

JWT-GRA.1396

அத்தியாயம் இருபது

பந்த பாசம்

டாக்டர் ஜகந்நாதனையே குழப்பத்துடன் பார்த்தபடி கட்டிலில் படுத்திருந்த உமா தன் வலது கையை அவர் பற்றியதும் திடுக்கிட்டு, ''டாக்டர்!'' என்று கூவியவாறு துள்ளியெழுந்திருக்க முயன்றாள். ஆனால் காலில் கட்டுப் போட்டிருந்ததால் அவளால் கட்டிலை விட்டு எழுந்திருக்கவே முடியவில்லை.

''ஒன்றுமில்லை, உமா!'' என்று டாக்டர் ஜகந்நாதன் சிரித்துக் கொண்டே, ''உன் கையில் நாடித் துடிப்புப் பார்த்தேன். ஜுரம் ஏதாவது



வந்திருந்தால் அதற்கு மருந்து கொடுக்க வேண்டுமல்லவா? அதற்காகத்தான்!'' என்றார்.

''ஓ! நீங்கள் நாவலாசிரியர் அல்லவா? பிறரைத் திடுக்கிட வைத்து வேடிக்கை பார்ப்பதில் உங்களுக்குச் சுவாரசியம் போலிருக்கிறது!''

''ஆமாம், உமா! எவ்வளவோ அமைதியாகப் படுத்திருந்த நீ ஒரு விநாடிக்குள் எப்படி அதிர்ந்து போய் விட்டாய், பார்! அப்போது உன் முகத்தில் ஏற்பட்ட உணர்ச்சிகளையெல்லாம் ஏதாவது ஒரு நாவலில் வர்ணித்தால் தத்ரூபமாக இருக்கும்!'' என்று சிரித்த ஜகந்நாதன், ''உமா! கற்பனையின் எந்த சிருஷ்டிக்கும் ஏதாவது ஒரு மூலப் பொருள் தேவைப்படும். சிற்பிக்குப் பாறைக் கற்கள்! ஓவியனுக்கு வர்ணக் குழம்புகள்! எழுத்தாளனுக்குத் தன் எதிரே தென்படுகிறவர்களின் உணர்ச்சிகள்! ஆனால் அவன் அவ்வுணர்ச்சிகளை வைத்து விளையாடலாமே தவிர அவனே அவ்வுணர்ச்சிகளுக்கு இரையாகி விடக் கூடாது! தாமரை இலைத் தண்ணீர் போல் எதிலும் ஒட்டாமல் தங்கியிருக்கும் ஒருவித மனோபாவத்தைத் தன்னுள் வளர்த்துக் கொள்ள வேண்டும்! அப்போதுதான் வாழ்க்கையோ, தொழிலோ பாரமற்றதாகப் 'பஞ்சு மெத்தை போல் இருக்கும்! இது டாக்டர்களுக்கு மட்டுமல்ல, எழுத்தாளர்களுக்கும் அவசியமென்று நான் கைக் கொண்டிருக்கிறேன்!'' என்று கூறி விட்டு உமாவின் தாமரை முகத்தைத் தம் பெரிய விழிகளால் ஊடுருவிப் பார்த்தார்.

உமா குழம்பியபடி தலை குனிந்து கொண்டாள்.

''உமா! என் பார்வை, பேச்சு, செயல் எதையும் அர்த்தப்படுத்திக்

கொள்ளாதே என்று ஏற்கனவே உன்னிடம் சொல்லி யிருக்கிறேன். வாழ்க்கையே அர்த்தமற்றது, சூனியமானது, மாயையின் விளையாட்டு என்றெல்லாம் ஞானிகள் சொல்கிறார்களே, அதைப் போன்றதுதான் என் போக்கும்!'' என்ற ஜகந்நாதன் ஏதோ ஒன்றைத் தீவிரமாக யோசித்து விட்டு, ''நீ பகவத்கீதை படித்திருக்கிறாயா உமா?'' என்று கேட்டார்.

''ஓரளவு படித்திருக்கிறேன். கீதைக்குப் பாரதியாரின் மொழிபெயர்ப்புப் புத்தகம் ஒன்று என் தாத்தாவின் பெட்டியில் இருந்தது. கீதைக்குக் காந்தியடிகள் எழுதிய விளக்கங்களையும், வினோபாவின் விளக்கங்களையும் கூடச் சமீபத்தில் படித்தேன்!'' என்றாள் உமா.

''அப்படியானால் பற்றற்ற மனப்பான்மை என்பது என்னவென்று உனக்குத் தெரியுமா?''

''அது ஒருவித தன்னடக்கம்!''

''இல்லை, உமா! தன்னடக்கம் என்பது ஒரு வித சித்திரவதை! ஒருவித கோழைத்தனம்!''

''என்ன, அது சித்திரவதையா? கோழைத்தனமா?''

''ஆமாம்! தன்னடக்கம் என்பது தான் விரும்பியதைச் செய்யாமல் தன்னை அடக்கிக்கொள்வது; ஐம்புலன்களையும் ஒடுக்குவது. அது மகாப் பிராணவஸ்தை என்பதோடு சில சமயங்களில் கோழைத்தனமாகவும், சில சமயங்களில் முட்டாள்தனமாகவும் கூட ஆகி விடும். அதீத சக்தி பெறுவதற்காக யோகப் பயிற்சி செய்கிறவர்களில் சிலர் தங்கள் உடம்பையோ, உயிரையோ ஒடித்துக் கொள்கிறார்களே, அது மாதிரித்தான்!'' என்று ஜகந்நாதன் கேலியாகச் சொல்லிச் சிரித்து விட்டு எப்படியோ ஒரு நீண்ட பெருமூச்சைக் கிளப்பிக் கொண்டு, ''உமா! பற்றறுத்தல் என்றால் எதன் மீதும், பற்று வையாமை. நான் என்ற எண்ணத்தை நீத்துப் பற்றற்ற மனப்பான்மையை மனிதன் வளர்த்துக் கொண்டால் அப்புறம் அவனுக்குத் துக்கமோ, துயரமோ, கவலையோ, ஏமாற்றமோ எதுவும் இல்லை என்று பகவத்கீதை உணர்த்துகிறது. 'ஆசைகளை அழித்து விடு. அதுவே ஆனந்தம்' என்று புத்தரும் கூறியிருக்கிறார். இதையே பேரின்பம் என்றும் வீட்டுப் பேறு என்றும் நம் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. உமா! இந்தக் காலத்தில் மேல்நாடுகளில் விஞ்ஞான சாதனையோடு வளர்ந்து வரும் அரசியல் சமுதாய லட்சியங்கள் கூட, 'உணர்ச்சிகளைக் கொன்று விடு. அறிவினால் எதையும் வென்று விடு' என்றே முழங்குகின்றன'' என்றார்.

''ஆனால், டாக்டர்! பகவத்கீதை உபதேசிப்பது ஆத்ம தத்துவம்! உங்கள் மேல்நாட்டுப் புரட்சி லட்சியங்கள் கைக்கொள்வதோ ஆத்மாவை அடியோடு



குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

தள்ளி விட்டு மனிதர்களை வெறும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் யந்திரங்களாகப் பாவிக்கும் ஜடத் தத்துவம்! இந்தப் புதிய கொள்கையைக் கைப்பற்றுவதால்தான் இந்த உலகில் கொடுமைகளும், கூச்சல்களும், எல்லை ஆக்கிரமிப்புகளும், போராட்டங்களும் கிளம்புகின்றன!''

''பேஷ், பேஷ், உமா! புத்திசாலித்தனமாகப் பேசுகிறாயே! பெண்களிடம் இது மாதிரிப் பேச்சுத்தான் எனக்குப் பிடிக்கும். நாவடக்கம் என்பது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்காது!'' என்றார் ஜகந்நாதன்.

''நீங்கள் டாக்டரல்லவா? எல்லோரையும் நாக்கை நீட்டச் சொல்வீர்கள்!'' என்று உமா தன்னையும் மறந்து தமாஷாக ஒரு வார்த்தை சொல்லி விட்டாள். ஆனால் அடுத்த கணமே அப்படிச் சொன்னது தன் பண்புக்குத் தகுதியல்ல என்று நினைத்துத் தன் மனத்தைக் கடிந்துகொண்டாள்.

பிறகு அவள் துணுக்குற்று, ''டாக்டர்! நீங்கள் பேச்சை எதிலோ ஆரம்பித்து ஏதேதோ தத்துவங்களில் கொண்டு போய் முடிக்கிறீர்கள்!'' என்றாள் பொறுமை யிழந்தவளாய்.

''ஆமாம், உமா! ஆனால் அது என் பொழுது போக்கே தவிர, நான் ஒரு பெரிய மேதை யென்று நீ நினைப்பதற்காக அல்ல!''

''டாக்டர்! உங்களை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை!'' என்றாள் உமா மெல்ல.

''நான் புரியாத புதிராக இருப்பதில்தான் மற்றவர்களுக்கும் சுவாரஸ்யம்! எனக்கும் சுவாரஸ்யம்!'' என்று டாக்டர் ஜகந்நாதன் சிரித்தார்.

உமா யோசனையில் ஆழ்ந்தாள்.

அவளை ஜகந்நாதன் புன்முறுவலுடன் நோக்கியபடி, ''உமா! கீதோபதேசத்தைப் பற்றி இப்பொழுது நான் ஏன் பேச்செடுத்தேன், தெரியுமா? நான் யார் என்பதைக் கொஞ்சம் உனக்குச் சுட்டிக் காட்டுவதற்குத்தான்! 'நான் என்ற எண்ணத்தையே நீத்துப் பற்றற்ற மனப்பான்மையை வளர்த்துக் கொள்' என்ற ஆத்ம போதனை ஞானிகளுக்கு மட்டுமல்ல, சாதாரண மனிதர்களுக்கும் அன்றாட வாழ்க்கையில் பயன்படக் கூடிய மகா மந்திரமாகும். அத்தகைய பற்றற்ற மனப்பான்மையை வளர்த்துக் கொண்டால் வியாபாரிகளுக்கு லாப நஷ்டங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் குடை சாயாமல் தொழிலை வெற்றிகரமாக நடத்த முடியும்! காதலர்களுக்குக் காதல் முறிவினால் தற்கொலை போன்ற முட்டாள்தனங்கள் ஏற்படாது! குடும்பத்தினருக்கோ சண்டை சச்சரவுகளும், ஆத்திரம் அழுகைகளும் குறையும்!'' என்று பொதுப்படையாகக் கூறி விட்டு, ''உமா! நான் அத்தகைய பற்றற்ற மனப்பான்மையை என்னுள் வளர்த்துக் கொண்டிருக்கிறேன்! அதனால் நான் எதற்குமே கவலைப்படுவதில்லை. அடுத்த நிமிஷமே எமதர்மன் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான் என்றாலும் சாவதற்கு 'ரெடியாக' இருப்பேன். நான் என்ற எண்ணத்தை இழந்துவிட்டால் சாவு என்பதே இல்லையல்லவா?..... இத்தகைய மனப் பக்குவத்தை நான் அடைந்திருப்பதால்தான் எதையும் தமாஷாகப் பாவித்துச் சிரிக்கவோ, மற்றவர்களின் உணர்ச்சிகளை வைத்து விளையாடவோ, அவற்றைக் கையாளவோ என்னால் முடிகிறது!'' என்று பெருமையாகக் கூறிச் சிரித்தார்.

பிறகு அவர் தம் அநுபவங்களையே ஒரு புது சித்தாந்தமாக்க முயன்றவராய், ''நாம் உணர்ச்சிக்கு ஆளாகாமல் மற்றவர்களின் உணர்ச்சிகளை நமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டால் எவ்வளவோ லாபமுண்டு. இதை அரசியல்வாதிகள் ராஜதந்திரம் என்பார்கள். உதாரணமாக இங்கே என் ஆஸ்பத்திரியில் அழகான நர்ஸ்கள் என்னைச் சுற்றி நடமாடுகிறார்கள். அவர்களை நான் எப்போதோ பார்த்துச் செய்த ஒரு சிறு புன்முறுவல் அவர்கள் என்னைப் பார்க்கும்போதெல்லாம் அவர்களின் விழிகளில் புதுப் புது அரும்புகளாக மின்னலிடுகின்றன. அந்த மின்னல் பார்வைகளின் விதம் விதமான உணர்ச்சி பாவங்களையெல்லாம் வைத்துக் கொண்டு எத்தனையோ பெரிய நாவல்கள் எல்லாம் நான் எழுதலாம். அது மட்டுமல்ல! ஒரு சிறு புன்முறுவலை முன்விட்டு அவர்கள் எனக்காக அரும்பாடு பட்டு ஆஸ்பத்திரி வேலைகளை மனப்பூர்வமாகக் கவனிப்பார்கள்!'' என்றார்.

''உணர்ச்சிகளை வைத்து நீங்கள் விளையாடலாம்! ஆனால் அதற்கு ஆளாகும் உள்ளங்களை அது எவ்வளவு வேதனைப்படுத்தும்? அதை நீங்கள் சிந்தித்துக் கூடப் பார்ப்பதில்லையா?''

''பிறரை வேதனைப்படுத்துவதிலும், தன்னைத் தானே வேதனைப்படுத்திக் கொள்வதிலும்கூட அலாதியான ஒரு சுவாரசியம் இருக்கிறது, உமா! ஆனந்தத்திலும் சிரிப்பிலும்தான் சுவையுண்டு என்பதல்ல! அழுகைக் கண்ணீரிலும் துக்கத்திலும்தான் வாழ்க்கையின் சத்துப் பிடியான சுவை அதிகமுண்டு! இல்லா விட்டால் சோக நாடகங்களையும், கண்ணீர் விட்டு அழ வைக்கும் சினிமாப் படங்களையும் ஜனங்கள் விழுந்து விழுந்து பார்க்க முன்வர மாட்டார்கள்!''

உமா வியப்புடன் ஜகந்நாதனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''நான் சொல்வது உனக்குப் புரியவில்லையா, உமா? கன்னங் குழியச் சிரிக்கும் குழந்தைகளைச் சிலர் கிள்ளி விட்டு அழவைத்து வேடிக்கை பார்ப்பார்கள். அதில் அவர்களுக்கு ஆனந்தம்! சுதந்திரமாகப் பறக்கும் வண்ணத்துப் பூச்சிகளைச்

ரிகரிங் டிபாசிட் திட்டம்

இந்த சிறு சேமிப்பு திட்டத்தின் மூலம் மாதா மாதம் ரூ. 5 முதல் ரூ. 250 வரை செலுத்தி, 12, — 24, — 36, — 80 மாதங்களில் கீழ்க்கண்ட விகிதப்படி பெரிய துகைகளைப் பெறலாம்! இது தவிர நீங்கள் செலுத்தும் துகைகளுக்குக் கவர்ச்சிகரமான வட்டி கிடைப்பதுடன் உங்களுக்குத் தேவையான போது — கடன் வசதிகளும் உண்டு!

கிளைகள் :-


செகந்திராபாத், பாலக்காடு, கோயமுத்தூர், ஹைதராபாத், பம்பாய், தி.நகர் (சென்னை)

மாதா மாதம் செலுத்தும் தொகை	முடிவில் கொடுக்கப்படும் தொகை			
மாதங்கள்	12	24	36	80
Rs. 5/-	62-00	127-50	* 197-50	500-00
Rs. 10/-	124-00	255-00	395-00	1,000-00
Rs. 20/-	248-00	510-00	790-00	2,000-00
Rs. 50/-	620-00	1,275-00	1,975-00	5,000-00
Rs. 100/-	1,240-00	2,550-00	3,950-00	10,000-00
Rs. 250/-	3,100-00	6,375-00	9,875-00	25,000-00

தி பாலக்காடு சிட்பண்ட்ஸ் [பி] லிட்.,

REGD. OFFICE.
331/333, தம்பு செட்டித் தெரு,
சென்னை-1.

PARAMOUNT/PCF-1.



கருங்கல்பாளையம் டாக்டர் என். ராமச்சந்திரன் அவர்கள் புதல்வி குமாரி கலாவதிக்கும், டாக்டர் V. சுகுமார் G. C. I. M. அவர்களுக்கும் சமீபத்தில் குருவாயூர் கோவிலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள்!

ப்ரத்தியேக

கேமல்

இங்க்



காம்லின் ப்ரைவேட் லிமிடெட்
பம்பாய்-16 : கல்கத்தா-1.

சிறுவர்கள் பிடித்து அவற்றின் கழுத்தில் நூலைக் கட்டி இழுத்து வேதனைப்படுத்திச் சிரிப்பார்கள். அதில் அவர்களுக்குச் சுவாரஸ்யம்! ஆனால் தன்னைத் தானே வேதனைப்படுத்திக் கொள்வதிலோ, — தான் துன்புறுவதிலோ என்ன இன்பம் இருக்க முடியும் என்று நீ நினைக்கலாம். கர்ப்பவதி ஒருத்தி பிரசவ வேதனைப்படுகிறாள்; புழுவெனத் துடிக்கிறாள். ஆனால் அவள் தாயாகப் போகிறாள், அவளால் ஒரு குழந்தை சிருஷ்டியாகப் போகிறது என்று எண்ணும் போது அந்தப் பிரசவ வேதனையும், சுமையுமே அவளுக்குப் பெரும் சுவையாகி விடுகின்றன. கவிஞன் ஒருவன் தன் மூளையை உருக்கி, தன் நெஞ்சைப் பிழிந்து இரவும் பகலும் அயராமல் தன்னைச் சித்திரவதைப்படுத்திக் கொண்டே எழுதுகிறான். ஆனால் அந்த வேதனையில்தான் ஒரு மகா காவியம் சிருஷ்டியாகிறது! துன்பத்தை மோகிப்பவர்களில் சில விசித்திரமான ரகங்களும் உண்டு. உதாரணமாக என்னிடம் வந்த ஒரு பெண் நோயாளியைப் பற்றிச் சொல்லுகிறேன், கேள்! அவள் ஒல்லியாகப் பூங்கொடி மாதிரி இருப்பாள். நன்றாகப் படித்தவள். நளினமான சுபாவங்களும் படைத்தவள். ஆனால் அவளுடைய ஆசைக் காதலன் மகா முரடன். அவளை எப்போதும் அடித்து உதைப்பானும். ஆனால் அவனிடம் அப்படி வேதனைப்படுவதில்தான் தனக்கு ஏதோ ஓர் இன்பம் உண்டாகிறதென்றும், அத்தகைய முரடனை விட்டு விட்டு நிம்மதியாய் இருக்கலாம் என்று ஓடி வரும்போதெல்லாம், தனக்கு வாழ்க்கையே சாரமற்றதாகவும், மந்தமாகவும் தோன்றுகிறது என்றும் அந்தப் பெண்மணி சொன்னாள். இத்தகைய மனப் போக்கை எங்கள் பரிபாஷையில் 'மசோக்கிஸம்' என்றும், அது ஒருவித நோய்க் கூறு என்றும் நாங்கள் சொல்வோம். அந்த நோய்க் கூறு எல்லோரிடமும் ஏதாவது ஒரு விதத்தில் எந்தக் காலத்திலுமே இருந்து வருகிறது. உதாரணமாக யுத்தங்களை எடுத்துக் கொள். உலகத்தில் அமைதி நிலைக்க வேண்டும் என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் உலகத்தில் மனிதர்கள் தோன்றிய காலம் முதலாக யுத்தங்கள் தொடர்ந்து இருந்துதான் வருகின்றன. அதற்குக் காரணம் துன்புறுத்துவதிலும் துன்பப்படுவதிலும் சுவை காணும் மனித சுபாவம்தான்! பகுத்தறிவின் வளர்ச்சியோ, நவீன நாகரிக முன்னேற்றமோ கூட அந்த அடிப்படை மனித சுபாவத்தை மாற்ற முடியவில்லை. அதனால்தான் அரும் பெரும் விஞ்ஞான சாதனைகளைப் புரிந்த மனிதன் கூடவே யுத்தக் கருவிகளைக் குவிப்பதிலும் முனைந்திருக்கிறான்!'' என்றார்.

உமா தன் எதிரே ஏதோ ஓர் அதிசயத்தைப் பார்ப்பது போல் ஜகந்நாதனை ஏறிட்டு நோக்கினாள்.





மேற்கு பெர்லினையும் மேற்கு ஜெர்மனியையும், இணைக்கும் நெடுஞ்சாலையில் மேற்கு பெர்லினை நோக்கிச் சென்று கொண்டிருந்த அமெரிக்க ராணுவப் படையினரை ரஷ்யர்கள் சமீபத்தில் 43 மணி நேரம் தடுத்து நிறுத்தித் தொல்லை கொடுத்தனர். இது சர்வதேச உடன்படிக்கையின்படி நேச நாடுகள் அனுபவிக்கும் உரிமையைத் தடை செய்வதாகும்.

ஒரு ருஷ்ய அதிகாரி எல்லா அமெரிக்கர்களும் வண்டியை விட்டு இறங்க வேண்டும், அப்போதுதான் அவர்களை எண்ணுவது சாத்தியம் என்றார்.

வாஷிங்டனுக்கும், மாஸ்கோவுக்கும் இடையில் ஏற்பட்ட இந்த 'லடாய்' முற்றி விடுமோ என்று உலகம் முழுதுமே கவலைப்பட்டது. இப்படித் தடுத்து நிறுத்தப்பட்ட அமெரிக்கச் சிப்பாய்களின் அமைதி காரணமாகவே இச்சம்பவம் விபரீதமாக மாறாமல் போயிற்று. இவர்களை 'ஸிவிலியன்' மக்கள் அனுதாபத்துடனும் அதிசயத்துடனும் பார்த்தார்கள்.



அமெரிக்க விமானப் படையினரில் பலர் இந்திய விமானிகளுக்குப் பயிற்சியளிக்கப் பாரதநாடு வந்துள்ளனர். அவர்களை அமெரிக்க தூதர் செஸ்டர் பௌல்ஸ் விமான நிலையத்தில் சந்தித்து அளவளாவினார். 2. பாரதிய வித்யாபவனில் உதவி ஜனாதிபதி பவனின் ஒரு ரூபாய்ப் பதிப்பை ஆரம்பித்து வைக்கிறார். 3. கேதார்நாத்தில் தருமபுர ஆதீனகர்த்தர். 4. புலவர் அன்பு கணபதி தலைமையில் ராஜாஜி ஹாலில் நடைபெற்ற சென்னை மாநகரத் தமிழாசிரியர் மகாநாட்டைச் சென்னை முதன் மந்திரி ஆரம்பித்து வைக்கிறார். 5.மந்தவெளிப்பாக்கம் லேடிஸ் கிளப்பினர் ஆரம்பித்துள்ள டேபிள்டென்னிஸ் விளையாட்டை ஸ்ரீமதி பத்மினி தொடங்கி வைத்தார்.

''நான் விசித்திரமான கதாபாத்திரமாகத் தோன்றுகிறேனா உமா? அது உண்மைதான்! ஆனால் அதற்குக் காரணம் என்ன, தெரியுமா?'' என்ற டாக்டர் ஜகந்நாதன் தம் விசாலமான மார்பில் ரசனையான தம் பார்வையைப் படர விட்டபடி, ''நான் எத்தனையோ நபர்களுக்கு இருதய வியாதிகளைக் குணப்படுத்தி யிருக்கிறேன். ஆனால்.....'' என்று கூறி நிறுத்தியபடி ஒரு பெருமூச்சு விட்டார்.

''ஆனால் என்ன டாக்டர்? உங்களுக்கு இருதய வியாதி இருக்கிறதா?''

''இல்லை! எனக்கு இருதயமே இல்லை!'' என்று கூறி ஜகந்நாதன் கலகலவென்று சிரித்தார்.

உமாவும் ஒப்புக்காக இலேசாகச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு ஜகந்நாதனை என்னவோ செய்தது.

அவர் கரகரத்த குரலில், ''உமா! என் இருதயத்தைப் பாலைவனமாக்கிக் கொண்டு விட்டதால் எதன் மீதும் என்னால் பற்றோ பாசமோ வைக்க முடிவதில்லை. என் உள்ளம் எதிலும் ஒட்டுவதில்லை. எதையும் தமாஷாக நினைத்து என்னால் சிரிக்க முடிகிறதே தவிர, எதையும் 'சீரியஸாக' நினைக்க முடிவதில்லை. அத்தகைய சுபாவம் எனக்குப் பெருமையாகவும், அதனால் வாழ்க்கை பாரமற்றதாகவும் இருந்தாலும், சில சமயங்களில் அதுவே ஒரு குறையாகவும், சாரமற்றதாகவும்தோன்றுகிறது!'' என்றார்.

''உங்கள் பெற்றோர் மீதாவது உங்களுக்குப் பந்தபாசம் ஏற்பட்டிருக்குமே...?''

''இல்லை! என் தாய் என் மீது எவ்வளவோ அன்பு வைத்து என்னை அருமை பெருமையாக வளர்த்தாள் என்றாலும், என் தகப்பனார் எனக்காக அரும்பாடுபட்டுப் பெரும் சொத்து சேகரித்து என்னைப் பெரிய மனிதனாக ஆக்கினார் என்றாலும், அவர்கள் இறந்த போது நான் ஒரு துளிக் கண்ணீர்கூட விடவில்லை. இப்போதோ என் கண்ணில் 'கிளிஸரின்' போட்டால் கூடக் கண்ணீர் வராது! எனக்கு இருதயம் என்று ஒன்று இருந்து அது உருகினால் அல்லவோ கண்களில் நீர் பெருகும்?''

அதைக் கேட்டதும் உமாவுக்குக் கண்கள் கலங்கின. ''நீங்கள் எப்போதாவது ஒரு ஜீவன் மீது கூட அன்பு வைத்ததில்லையா?'' என்று தழுதழுக்கும் குரலில் கேட்டாள்.

''இந்த உலகத்தில் ஒரே ஒரு ஜீவன் மீது மட்டும்தான் நான் உண்மையான அன்பு வைத்தேன். அந்த ஜீவன்தான் என் உயிர் என்றுகூட நினைத்தேன்!'' என்றார் ஜகந்நாதன் ஆழ்ந்த பெருமூச்சோடு.

''அது யார்?'' என்று உமா பரபரப்புடன் கேட்டாள்.

''அது ஒரு நாய்க் குட்டி!'' என்றார் ஜகந்நாதன்.

உமாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது. ''என்ன? நாய்க் குட்டியா?'' என்றாள்.

''வேடிக்கையாகச் சொல்லவில்லை, உமா! உண்மையாகத்தான் சொல்லுகிறேன்! நான் ஹைஸ்கூலில் படிக்கும் பையனாக இருந்த போது ஒரு நாய்க் குட்டியை ஆசையோடு வளர்த்தேன். என் அன்பையெல்லாம் அதன் மீது தான் வைத்திருந்தேன். பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் அந்த நாயோடு தான் கொஞ்சிக் கொஞ்சி விளையாடிக் கொண்டிருப்பேன். அதை அடித்தாலும் உதைத்தாலும் அது என் மீதே வந்து விழுந்து விழுந்து என்னோடு ஒட்டிக் கொண்டிருக்கும். அதன் விழிகளில் அளவில்லாத வாஞ்சையையும், அலாதியான கற்பனைகளையும் நான் காண்பேன். ஆத்மார்த்த நேசம் என்பார்களே, அத்தகைய உறவு எங்களுக்குள் உண்டாயிற்று. இதெல்லாம் பைத்தியக்காரத்தனம் என்று இப்போது நம் அளவுக்குத் தோன்றலாம். ஆனால் அந்தக் காலத்தில் அந்த நாய்க் குட்டிதான் எனக்கு ஒரே உலகமாகவும் உயிராகவும் இருந்தது. ஒரு நாள் அந்த நாய் மழையில் நனைந்து ஜுரம் கண்டு சோர்ந்து கிடந்தது! பிறகு அது சோகத்துடன் பார்த்துக்கொண்டே செத்துப் போய் விட்டது! என்னால் அதன் பிரிவைத் தாங்கவே முடியவில்லை. சதா அதை நினைத்து அழுது கொண்டேயிருந்தேன். அது ஒன்றிற்காக நான் அழுதேனே தவிர என் வாழ்க்கையில் வேறு எதற்காகவுமே நான் அழுததில்லை. என் தகப்பனார் என்னைப் பார்த்து, 'மடப் பயலே, நாய்க்காக அழுவாருண்டா?' என்று திட்டினார். என் தாயாரோ 'அந்த நாய் போய் விட்டால் இன்னொரு நாய்' என்று அலட்சியமாகக் கூறினாள். எனக்கு அவர்கள் மீது ஆத்திரமும் ஆறாக் கசப்பும் உண்டாயிற்று. அந்த நாய் என்னுடன் விளையாடிய அழகையும் நான் சொன்னதையெல்லாம் புரிந்துகொண்டு அதன்படி அது நடந்து கொண்ட விந்தையையும் அடிக்கடி நினைத்துக்கொள்வேன். அதன் விழிகளையும், அதில் தேங்கி நின்ற பார்வைகளையும் என்னால் வெகு காலம் வரை மறக்கவே முடியவில்லை. அதை நினைக்கும் போதெல்லாம் சாவைப் பற்றிய சிந்தனைகளும் ஆராய்ச்சிகளும் உண்டாகி விரக்தியால் என் இருதயமே வெடித்து விடும் போல் இருக்கும். பிறகு ஒரு நாள் பட்டினத்தாரின் சீடரான பத்திரகிரியாரையும், அவருடைய சட்டியில் சோறுண்ட பெட்டை நாயையும் பற்றி நான் படித்த கதையொன்று என் அறிவில் உறுத்தியது. மணி மகுடம் சுகபோகங்களை வெல்

பெண்: மாப்பிள்ளை ரொம்பக் கோபமாக இருக்கிறாராம். இந்தச் சமயம் பார்த்துக் காப்பியையும் ஆற வைத்துக் கொடுத்திருக்கிறானே, இந்த அம்மா!

தம்பி: நீ கவலைப்படாதே அக்கா! அத்திம்பேருக்கு வந்திருக்கிற கோபத்திலே காப்பி தானே கொதிக்கப் போயிடும்!

ஃ ஃ ஃ

பக்கத்து வீட்டு மாமி: ஏன், மாமி, உங்கள் பிள்ளையின் கலியாணத்தின் போது அவனுக்குக் கையிலே வைர மோதிரம் போடவில்லை என்று ரொம்பக் குறைப்பட்டுக் கொண்டேளே! இப்பொழுது தலை தீபாவளிக்குப் போயிருக்கிறானே! இப்பவாவது அவன் கைக்கு மோதிரம் போட்டு அனுப்புவார்களோ?

பிள்ளையின் தாயார் (ஆத்திரத்துடன்): இனிமேல் அதெல்லாம் ஏது? அவனையேதான் கையிலே போட்டுண்டுட்டாளே!

லாம் துறந்து சந்நியாசியாகி விட்ட பத்திரகிரியார் ஒரு பிச்சைச் சட்டியையும், அதில் மிஞ்சும் சோற்றை உண்ணக் கூடிய ஒரு நாய்க் குட்டியையும் மட்டும் தம் அருகில் வைத்துக் கொண்டிருந்தாராம். அந்நாட்களில் சிவபெருமான் ஒரு சித்தரைப் போல் வேடம் தரித்துக் கிழக்குக் கோபுர வாசலில் வீற்றிருக்கும் பட்டினத்தாரிடம் சென்று, 'ஐயா, என் பசிக்கு அன்னமிடுவீரோ?' என்று கேட்டார். பட்டினத்தாரோ தம் சீடரான பத்திரகிரியார் ஒரு சட்டியும் நாயும் வைத்துக் கொண்டிருப்பதை நினைத்து, 'நானோ உடம்பில் சிற்றுடை தாங்குவதையே பாரமாகக் கொள்ளும் சந்நியாசி! அதனால் மேற்குக் கோபுர வாசலில் சோற்றுச் சட்டியும் நாயும் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான் ஒரு சம்சாரி! அவனிடம் போய்க் கேளுங்கள்' என்றார். இதைக் கேள்விப்பட்ட பத்திரகிரியார் தம் குருவின் கருத்தில் உள்ள குறிப்பை உணர்ந்து, 'ஆகா! சந்நியாசியான என்னை இந்தச் சோற்றுச் சட்டியும் நாய்க் குட்டியுமே சம்சாரியாக்கி உலக பந்தத்தில் ஆழ்த்துகின்றன?' என்று கொதித்தெழுந்து சோற்றுச் சட்டியை வீசி எறிந்தார். அந்தச் சட்டி நாயின் தலை மீது பட்டதால் நாயும் செத்து விழுந்தது. அதன் பிறகுதான் அவர் முற்றும் துறந்த முனிவரானாராம். இந்தக் கதையை நான் படித்ததும் 'ஆகா! ஒரு நாய்க் குட்டியின் மீது பாசம் வைத்ததால் அல்லவா எனக்கு ஆறாத் துயரம் உண்டாயிற்று? இனி எதன் மீதும் ஆழ்ந்த பிரியம் வைக்கக் கூடாது' என்று தீர்மானித்துக் கொண்டேன். பிறகு கீதையின் வியாக்கியானங்களைப் படித்து அதோடு வியாபார ரீதியான நவீன சித்தாந்தங்களை யெல்லாம் சேர்த்து என்னுள் ஒரு வித பற்றற்ற தன்மையை பரிபூரணமாக வளர்த்துக் கொண்டுவிட்டேன்!'' என்று ஜகந்நாதன் கூறிவிட்டு வழக்கம் போல் விஷமமாகச் சிரிக்க முயன்றார்.

''உங்களுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்புமே இல்லை என்று உங்கள் அண்ணி சொன்னார்கள். அது ஏன் என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது!'' என்றாள் உமா.

''அதை மட்டுமா என் அண்ணி உன்னிடம் சொன்னாள்? என் மனத்தை யாராவது ஒரு பெண் மாற்றிக் குடும்பமும் குடித்தனமுமாக என்னை வாழ வைக்க முயன்றால் எவ்வளவோ நன்றாய் இருக்குமென்று கூட உன்னிடம் சொல்லி யிருப்பாளே?''

''ஆமாம்!'' என்று பாபரப்புடன் சொன்ன உமா நாணத்தோடு தலை குனிந்து கொண்டாள்.

அவளுடைய நாணத்தின் நெளிவை ரசனையோடு பார்த்தபடி ஜகந்நாதன் ஒரு புன்முறுவல் பூத்து விட்டு, ''உமா! என் மனத்தை மாற்ற எத்தனையோ பெண்கள் எத்தனையோ விதமான வழிகளிலெல்லாம் இன்னும் முயன்று வருகிறார்கள்! அவர்களில் ஒருத்தியை யாவது என்னால் மனப் பூர்வமாகக் காதலிக்க முடியாது! ஆனால் என்னை உயிருக்குயிராய்க் காதலிக்கும் உள்ளம் படைத்த ஒரே ஒரு காதலி மட்டும் எனக்கு உண்டு!'' என்றார்.

உமா மீண்டும் பரபரப்படைந்து, 'அந்தக் காதலி யார்?' என்று கேட்க நினைத்தவள் சட்டென்று வாயை மூடிக் கொண்டு விட்டாள். (தொடரும்)

அண்ணனும் தம்பியும்

''அண்ணே!''

''என்ன தம்பி!''

''கூட்டுப் பண்ணை, கம்யூன்கள் எல்லாம் நடத்தின சீனா, கனடாவிடமும், ஆஸ்திரேலியாவிடமும் சாப்பாட்டுக்குக் கோதுமை வாங்குதாமே அண்ணே! உண்மையா?''

''ஆமாம், தம்பி!''

''நாற்பது வருஷங்கள் சோஷலிஸ ஆட்சி நடத்தி, ஸ்புட்னிக் விட்ட ரஷ்யா, தன் விரோதி நாடான அமெரிக்காவுக்குத் தன் தங்கத்தைக் கொடுத்துக் கோதுமை வாங்குதாம் சாப்பாட்டுக்கு, அண்ணே!''

''ஆமாம், தம்பி!

''அப்படியானால்! நம்ப நாட்டிலே அந்தக் கம்யூனிஸ முறையான கூட்டுப் பண்ணை, கூட்டுறவுப்பண்ணை முறைகளை நம்ம காங்கிரஸ் சர்க்கார் கைவிடுமா, அண்ணே!''


''விடமாட்டாங்க தம்பி!''

''பின்னே?''


''சீனா, ருஷ்யா போல் முழுக்கத் தோல்வி யடைவதற்கு முன்னதாகவே, எச்சரிக்கையாக அமெரிக்காவிலிருந்து கப்பல் கப்பலாகக் கோதுமை வாங்கி வருகிறோமே தெரியாதா?''

''அப்படியானால் காங்கிரஸ் சர்க்காருக்கு நல்ல தீர்க்க திருஷ்டி, முன்யோசனை எல்லாம் இருக்குது—இல்லே அண்ணே!''

''ஆமாம்! ஆமாம்! ரொம்ப ரொம்ப முன்யோசனை உள்ள வங்கதான்...!''



“எப்பொழுது பார்த்தாலும் சமையல் வேலைதானா ?”



இல்லை இல்லவே இல்லை !

நான் போர்ன்-விடா சாப்பிடுகிறேன்.
தினசரி இரண்டு கப் சாப்பிடுகிறேன்
போர்ன்-விடா அளிக்கும் சக்தியினால்
சமையல் வேலை அரை நொடியில்
முடிந்துவிடுகிறது.

BOURN-VITA

சக்திக்கும் வலிமைக்கும்



தயாரிப்பாளர்கள்:

Cadbury's



அறிவுக் கனலே, அருட் புனலே! 42

இன்னொரு நாள் பெரும் சோதனை வைத்தார் பரமஹம்ஸர்.

அமைதியின் முழுமை நிலவும் பஞ்சவடிக்கு நரேந்திரரை அழைத்துச் சென்றார் பரமஹம்ஸர்.

''நான் புரிந்துள்ள பல சாதனைகளின் விளைவாக என்னிடம் பல அமாநுஷ்ய மான சக்திகள் கூடியுள்ளன. அம்பிகையின் அநுமதியுடன் அவற்றையெல்லாம் உனக்கு அளித்து விடலாம் என எண்ணியிருக்கிறேன். அவளுக்காக நீதான் எவ்வளவோ காரியங்கள் செய்ய வேண்டியிருக்கும் என்று அவள் தெரிவித்திருக்கிறாள். எனவே, உனக்கு இந்த ஸித்திகள் தக்க சமயத்தில் பெரும் உதவி அளிக்கக் கூடும். என்ன சொல்கிறாய்?'' என்று நரேந்திரரைக் கேட்டார் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்.

நரேந்திரர் ஒரு க்ஷண காலம் சிந்தித்தார். பிறகு, ''ஐயனே, இந்த ஸித்திகள் நான் பரம்பொருளை உணர்வதற்கு உதவுமா?'' என்று கேட்டார்.

''உதவாது! ஆனால் பரம்பொருளை நீ உணர்ந்த பிறகு உலக உத்தாரணம் செய்யும்போது அவை உதவும்'' என்றார் குருமஹராஜ்.

அதாவது நரேந்திரர் ஸ்வாநுபூதி பெற்ற பின் வேதாந்தத்தைப் பிரசாரம் செய்ய ஸித்திகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதாகக் 'கோடி' காட்டினார் பரமஹம்ஸர்.

''அப்படியானால் நான் முதலில் கடவுளை உணரப் பாடுபடுகிறேன். அவரை உணருகிறேன். அதன் பின்புதான் எனக்கு எது வேண்டும், எது வேண்டாம் என்பதே தெரியக் கூடும். இப்போதே நான் ஸித்திகளைப் பெற்றால் அவற்றை ஏதேனும் சுயநல நோக்கத்துக்காகப் பயன்படுத்தி நாசமடைவேன்'' என்று கலக்கமின்றிக் கூறினார் நரேந்திர நாதர்.

சோதனையில் தேறியே விட்டார்!

ராமகிருஷ்ணர் மகிழ்ந்தார்!

அற்புதத்தின் மூலமே எதையும் சாதிக்கலாம் என்றால் அது மனித குலம் இயல்பாகத் தன்னைத் தானே திருத்திக்கொள்ள இயலும் என்ற நம்பிக்கையையே பொய்யாக்குவதாகும். இதனை ஆசாரியர்கள் ஒருபோதும் செய்தது கிடையாது. ஒருவரின் உள் புகுந்து அவர் தாமே தம்மைத் துலக்கிக்கொள்ளும் வகையில் ஞானப் பிரசாரம் செய்வதுதான் சிலாக்கியமானது. அபூர்வ சக்திகளைக் காட்டி ஒருவரை ஆகர்ஷிப்பதை மகான்கள் விரும்ப மாட்டார்கள். பிரகிருதி நியதி ஈசுவரனின் ஆக்ஞை. அதை மாற்றி அற்புதங்கள் நிகழ்த்துவதில் பெருமை இல்லை. எனினும் வேறு உபாயமில்லாத போது மக்களின் நன்மைக்காகவே பெரியோர்கள் எப்போதேனும் அதிசயத்தின் மூலம் நல்வழிப்படுத்துவதுமுண்டு.

தாமாகவே வந்தடைந்தவர்களை அன்பின் ஆட்சியில் ஈடுபடுத்துவதை விட வேற்று மனிதரை ஒற்றுமைப்படச் செய்வதுதானே பெருமை? பரமஹம்ஸர் நரேந்திரர் இருவருமே பரஸ்பரம் பரீட்சைகள் வைத்துக்கொண்டனர். இருவருமே வென்றனர். நரேந்திரர் ஒருவரே குருவின் அநுபவங்களைக் குறித்து ஐயப்பட்டு, அந்த ஐயங்களைத் தைரியமாக வெளியிடவும் செய்தவர். இந்த ஐயங்கள் நீங்கப் பெற்றதாலேயே அவர் மற்றவர்களை விட நன்றாகக் குருநாதரைத் தெரிந்து கொள்ள முடிந்தது. இதில் பரமஹம்ஸருக்குமேயன்றோ பெருமை கூடுகிறது? 'கூடாரை வெல்லும் சீர் கோவிந்தன்' என்றும் 'மாற்றாரை மாற்றழிக்க வல்லான்' என்றும் நாச்சியார் அருளிச் செய்தபடி, வேறு வழி சென்றவரைத் தம்மவராக்கிக்கொள்ளும் வெற்றியின் தனிப் பெருமை பரமஹம்ஸருக்கு உண்டு.

ஒவ்வொரு சிஷ்யரை ஒவ்வொரு விதத்தில் ராமகிருஷ்ணர் உருவாக்கினார் என்று முன்பே கண்டோம். ஒவ்வொரு பயிருக்கு ஒவ்வொரு விதமான பூமியும், உரமும், மழையும், வெய்யிலும் தேவையாக இருப்பது போல ஒவ்வோர் உள்ளமும் வளர

ரா. கணபதி

ஒவ்வொரு வழி உள்ளது என்று கண்டு அதன்படி சிஷ்யர்களைப் 'பருவமதறிந்து தம் அருளான குளிகை கொடு பரிசித்து வேதி செய்த'வர் பரமஹம்ஸர். இவர்களில் நரேந்திர நாதரை அத்வைதாநுபவத்துக்கே உரியவராகக் கருதியவர் பரமஹம்ஸர்.

ஆனபடியால் தொடக்க காலத்திலிருந்தே அவர் நரேனை அஷ்டாவக்ர ஸம்ஹிதை முதலிய அத்வைத கிரந்தங்களைப் படிக்கச் செய்தார். பிரம்ம சமாஜியான நரேந்திரருக்கு அத்வைதம் ஏற்கவேயில்லை. 'நான்தான் கடவுள்' என்று ஒருவன் **பேசுகிற** அல்லது எண்ணுகிற நிலையல்ல அத்வைதம்; தானே கடவுளாகி அதனை **அநுபவித்துக்** கொண்டு மட்டும் இருக்கும் மோன நிலை, எண்ண மடங்கிய நிலைதான் அத்வைதம் என்பதை அறியாததால் நரேந்திரர் அத்வைதத்தைப் பலபடியாகக் கேலி செய்வார்.

''நானும் பரம்பொருள், நீயும் பரம்பொருள் — காண்கிற பொருளெல்லாம் பரம்பொருள் என்று எழுதி வைத்தார்களே, அந்த ரிஷிகளுக்கெல்லாம் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும்'' என்று ஒரு நாள் எடுத்தெறிந்து பேசி விட்டார் நரேந்திரர். அப்போதும் பரமஹம்ஸர் கோபிக்க வில்லை. ''சரி; ரிஷிகள் சொன்னது உனக்குப் பிடிக்கவில்லையானால் ஒப்புக்கொள்ள வேண்டாம்! ஆனால் அவர்களை ஏன் நிந்திக்கிறாய்? சத்தியமான கடவுள் எது என்று நீ




நினைக்கிறாயோ அதைப் பிரார்த்தித்து வா. அது உனக்கு எப்படித் தோன்றினாலும் அதை அவ்வாறே நம்பி வா'' என்றார் அமைதியாக. ஆனால் உண்மையில் நரேன் அத்வைதம் தவிர வேறு மார்க்கத்தில் செல்ல அவர் விட்டாரா என்ன?

ஜீவாத்மா பரமாத்மா இரண்டும் ஒன்றே என்பதைப் பரமஹம்ஸர் ஒரு நாள் எப்படி யெப்படி எல்லாமோ விளக்கிப் பார்த்தார். நரேந்திரருக்கு அர்த்தமாகவில்லை. நரேந்திரர் அறையை விட்டு வெளியேறினார். வெளியே இருந்த பிரதாப சந்திர ஹஸ்ராவிடம் ''இதெப்படி சரியாக இருக்க முடியும்? இதோ இந்த ஜாடி இருக்கிறதே இது கடவுளாம், இந்தக் கோப்பை கடவுளாம், அப்புறம் நானும் நீங்களும் கூடக் கடவுள். இதைவிட அபத்தமாக ஏதேனும் உண்டோ?'' என்று கேட்டு விழுந்து விழுந்து சிரிக்கலானார்.

அத்வைத நிலை பற்றிப் பேசிக்கொண்டிருந்த பரமஹம்ஸரோ பேச்சில் வராத அந்த அநுபவத்தில் தாமே அமிழ்ந்து கொண்டிருந்தார். நரேந்திரருடைய சிரிப்பு அவருக்கு இக உலகப் பிரக்ஞையை உண்டு பண்ணிற்று. துணியைச் சுருட்டிக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு குழந்தை மாதிரி வெளியே வந்தார் குருதேவர்.

''என்னப்பா சொல்லிக் கொண்டிருக்கிறாய்?'' என்று மந்தஹாஸத்துடன் நரேந்திரரிடம் கேட்டபடி அவரைத் தொட்டார். தொட்டவாறே பரம்பொருளின் இயல்பையும் தொட்டு அதில் நினைவிழந்தார்.

தொடப்பட்டவர் என்ன ஆனார்? அதை அவரது வார்த்தைகளிலேயே கேட்போம்.

''அன்று குருதேவரின் மந்திர சக்தி வாய்ந்த ஸ்பரிசம் தட்சணமே என் மனதில் ஓர் அற்புதமான மாறுதலை உண்டாக்கிற்று. வாஸ்தவமாகவே இந்த விசுவம் எங்கிலும் கடவுளைத்தவிர எதுவும் இல்லை என்று கண்டேன். கண்டு திக்பிரமித்துப் போனேன்.

''அன்று முழுவதும் அந்த எண்ணம் மாறவில்லை. வீடு திரும்பினேன். அங்கும் எல்லாம் பிரம்மமாகவே தெரிந்தன. உணவு உட்கொள்ள அமர்ந்தேன். உணவு, உணவுத்தாலம், உணவு பரிமாறியவர், உணவை உட்கொள்ளும் நான் எல்லாம் அதுவன்றி வேறு இல்லை என்றே கண்டேன். ''ஏன், வெறுமனே உட்கார்ந்திருக்கிறாய்? சாப்பிட்டு முடி'' என்று என் அன்னை கூறிய வார்த்தைகள் என்னைத் தட்டி எழுப்பின. மீண்டும் சாப்பிடத் தொடங்கினேன்.

''என்றாலும்.....உண்ணும் போதும், படுக்கும் போதும் கல்லூரிக்குச் செல்லும் போதும் சதா, அதே அநுபவத்தில் இருந்தேன். ஏதோ ஒரு விதமான கிறக்க நிலையில் என்னை நானே கிடத்திக் கொண்டேன். தெருவில் நடக்கும் போது வண்டிகள் ஓடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். ஆனால் அவற்றுக்காகத் தெரு ஓரத்தில் ஒதுங்க வேண்டும் என்றே தோன்றவில்லை. அந்த வண்டிகளும் நானும் ஒரே பொருளால் ஆனவர்கள்தாமே என்றஉணர்ச்சி தான் இதற்குக் காரணம். என் அங்கங்கள் உணர்வு இழந்துவந்தன. உணவு ருசிக்கவில்லை. நான் உண்பதே வேறு யாரோ உண்பது போலத் தோன்றியது. சில சமயம் நான் சாப்பிடும் போதே தரையில் சாய்ந்தேன். சில நிமிடங்கள் கழித்தே எழுந்தமர்ந்து மீண்டும் உண்பேன். இதனால் சில நாட்களில் நான் மிகவும் அதிகமாகச் சாப்பிட்டிருப்பேன்; எனினும், இது எனக்கு ஒரு கெடுதலையும் உண்டாக்கவில்லை.

''என் அன்னைக்குக் கிலி ஏற்பட்டு விட்டது. எனக்கு ஏதோ நேர்ந்துவிட்டது என்றும் நான் அதிக காலம் உயிர் வாழ மாட்டேன் என்றும் அவள் எண்ணி விட்டாள்.

''இந்த நிலை சிறிதே மாறுபடலாயிற்று. இப்போது உலகமெல்லாம் ஒரு கனவு போலத் தோன்றலாயிற்று. கார்ன்வாலிஸ் சதுக்கத்தில் நடந்து கொண்டிருப்பேன். அங்கு போட்டிருக்கும் இரும்புக் கிராதிகள் உண்மைதானா அல்லது கனவா என்று காண்பதற்காக அவற்றில் என் தலையை மோதிக் கொள்வேன். இந்த நிலை சில நாட்களுக்குத் தொடர்ந்தது. மீண்டும் நான் சகஜ நிலையை அடைந்த போதுதான் இத்தனை நாட்களாக அத்வைதாநுபவத்தை ஒரு சிறிது நான் நுகர்ந்திருக்க வேண்டும் என்று கண்டேன். ஹிந்து மதப் பிரமாண நூல்களில் கூறியிருப்பது பொய்யல்ல என்று எனக்குப் பட்டது. அதன்பின் அத்வைத தத்துவத்தின் முடிவுகளையெல்லாம் என்னால் மறுக்க முடியவில்லை.''

ஸ்ரீருத்ரத்தில் உலகம் யாவும் பரமேசுவர ஸ்வரூபமாகக் காட்சியளிக்கும் அழகு கூறப்படுகிறதே, அது தான் நரேந்திரரின் அநுபவத்தைப்படிக்கும் போது நினைவு வருகிறது. முக்கியமாக, சாலையில் செல்லும் தேர்களையும், தேரோட்டுபவர்களையும் தேரில்


புதிய, நறுமணம் குன்றாத பாக்கெட்டுகளில் கிடைக்கிறது! —
மூடிஸ் டீ
நீங்கள் விரும்பி அனுபவிக்கும்
மிகுந்த
நறுமணம்...
Best
MUDIS
Blend
TEA
MUDIS
Superfine
TEA
உண்மையிலேயே கடைசித்துளிவரை
நல்ல ருசியுள்ளதா
யிருக்கிறது...
MUDIS
Rani
Superior
DUST TEA
ருசி, நிறம், சக்தி
இவற்றில்
இணையற்றது...
MUDIS
KIRAN
DUST
TEA
உங்கள் பணத்தை
மிச்சப்படுத்தும்
வகையில்,
கூடுதலான கோப்பைத் தேனீர் பெறுகிறீர்கள்...
மூடிஸ் டீ — நாற்பது வருஷங்களுக்கு மேலாக புகழ் வாய்ந்தது...

வீற்றிருப்பவர்களையும் ஈசுவரனாக அதில் வர்ணிப்பது நரேந்திரரின் பிரத்தியட்ச அநுபவமாகி யிருப்பது ஆச்சரிய மளிக்கிறது.

நரேந்திரருக்கு அத்வைதத்தில் நம்பிக்கையூட்டப் பரமஹம்ஸர் அற்புத சக்தியைத்தானே உபயோகித்திருக்கிறார் என்ற சங்கை சிலருக்கு ஏற்படலாம். இது அற்புத சக்தி அல்ல—அநுபூதி சக்தி. அறிவை அற்புதத்தால் வெல்லுவதுதான் சரியல்லவே ஒழிய, அநுபவத்தால் வெல்லுவதில் முரண் எதுவும் இல்லை. ஏனெனில், அநுபவம் அற்புதத்துக்கு விரோதமானதல்ல; மேம்பட்டதாகும். நரேந்திரரின் அறிவில் பதிவு செய்ய முடியாத தத்துவத்தை அவருடைய அநுபவத்தில் மெய்ப்பித்துக் காட்டி விட்டார் ராமகிருஷ்ண தேவர். சர்க்கரை இனிக்குமா இனிக்காதா என்று வாதம் செய்து நிர்ணயிக்க முடியாது என்பதால் வாதித்தவரின் வாயிலேயே பிடி சர்க்கரையைப் போட்டு உண்மையை உணர்த்தி விட்டார்.

அத்வைதத்தை வேறெப்படிப் புரிய வைக்க முடியும்?

'அதுவானால் அதுவாவர்; அதுவே சொல்லும்'.

சிஷ்யர்களின் முக்கியமான கடமைகளில் ஒன்று ஆசாரியனுக்குப் பணிவிடை புரிவதாகும். ஆனால் நரேந்திரர் தமக்கு இவ்விதப் பணிவிடைகள் புரியப் பரமஹம்ஸர் அநுமதித்தது கிடையாது. அவருக்கு ஆசனம் தட்டிப் போடுவது, படுக்கை விரிப்பது, விசிறுவது முதலிய சுசுருஷைகளைச் செய்ய நரேந்திரருக்கு அவர் இடமளித்ததே கிடையாது. இதனை நரேந்திரர் ஒரு நஷ்டமாகவே கருதினார். தாம் குருவுக்குப் பணிவிடை புரிய விழைந்து பிடிவாதம் பிடிப்பார். 'உங்களிடம் எனக்குள்ள அன்புக்காகவும், எனக்கு விநயம் ஏற்படுவதற்காகவும் நான் உங்களுக்கு ஏவல் புரிய அநுமதியுங்கள்' என்று பரமஹம்ஸரிடம் கேட்டுக் கொள்வார். பரமஹம்ஸரோ அசைந்து கொடுக்க மாட்டார். "உன் வழியே தனி, போ" என்று ஒரே போடாகப் போட்டு விடுவார்.

இதே போலத்தான் மற்றவர்களிடம் பல விதமான ஆசாரக் கட்டுப்பாடுகளை அநுஷ்டித்த பரமஹம்ஸர், அவர்கள் பல ஆசாரக் கட்டுப்பாடுகளை அநுஷ்டிக்க வேண்டும் என்று வற்புறுத்திய பரமஹம்ஸர், நரேந்திரர் விஷயத்தில் தாமும் கட்டுப்பாடுகளைப் பின்பற்ற வில்லை; அவருக்கும் கட்டுப்பாடுகள் விதிக்கவில்லை. உண்பது,



இரவு நேரம் - திருடன் போலீஸ்காரனிடம்: "தப்பு தண்டா ஒண்ணும் பண்ணலீங்க; சும்மா சினிமாவுக்குத் தான் போயிட்டு வரேனுங்க. ஆனால் டிக்கெட்டைமட்டும் தூக்கி எறிஞ்சிட்டேனுங்க. ஏன்னா, எப்படியிருந்தாலும் தீபாவளிக்கு மாமியார் வூட்டுக்குப் போயாகணுங்களே! என்னை அழைச்சிகிட்டுப் போங்க!"

உறங்குவது, பிரார்த்திப்பது, தியானிப்பது இவற்றிலெல்லாம் மற்றவர்களுக்கு இருந்த விதி நிஷேதங்கள் நரேந்திரருக்கு இல்லை. "நரேன் ஒரு நித்திய சித்தன்; நரேன் ஒரு தியான சித்தன். அவனுள் உறுமிக் கொண்டிருக்கும் அறிவுக்கனல் அவன் உண்பதில் உள்ள அசுத்தங்களையெல்லாம் எரித்து விடும். மாயையின் திரைகளை வெட்டி எரிந்து கொண்டிருக்கும் அவனைத் தன் ஆளுகைக்கு உட்படுத்த மகா மாயையால் முடியாது" என்றெல்லாம் அவர் கூறுவார்.

தட்சிணேசுவரத்துக்கு வருபவர்கள் சமர்ப்பிக்கும் பழங்களையும் பட்சணங்களையும் யாவரும் புசிக்கப் பரமஹம்ஸர் அநுமதிக்க மாட்டார். காணிக்கை செலுத்தியவர் நன்னடத்தை உள்ளவர், சுயநல நோக்கமின்றிக் காணிக்கை செலுத்தியிருக்கிறார் என்று தெரிந்தால் தான் அதை உட்கொள்வார். மற்றவர் உட்கொள்ளவும் அநுமதிப்பார். ஆனால் நரேந்திரர் மட்டும் யார் அளிக்கும் எந்தப் பொருளையும் உண்ண அவர் அநுமதி தந்திருந்தார். தமக்கே விதித்துக்கொண்டிருந்த கட்டுப்பாட்டைக் கூட நரேந்திரனுக்கு அவர் விதித்திருக்கவில்லை.

பரமஹம்ஸர் காணிக்கை செலுத்துபவர்களின் மனோ பாவத்தைத் தாமாகவே எப்படி அறிய முடியும் என நரேன் சந்தேகித்ததுண்டு. இவ் விஷயத்தில் அக்கறை செலுத்திக் கவனித்த பின்பு தான் நரேந்திரருக்குத் தம் குரு நாதர்

யாருடைய நிவேதனத்தை வேண்டாமென உள்ளுணர்ச்சியால் ஒதுக்கினரோ அவர்கள் உண்மையிலேயே நடத்தை கெட்டவர்கள் என்பது தெரிய வந்தது. 'எத்தகைய அதிசய மனிதர் இவர்! மற்றவர்களின் அந்தரங்கத்தை எவ்வளவு தெளிவாக இவர் படித்து விடுகிறார்' என்று குரு மஹராஜின் பெருமையை எண்ணி வியந்தார் நரேந்திரநாதர்.

நரேந்திரரின் தூய்மையை அறிந்திருந்ததால்தான்பரமஹம்ஸர் அவரைச் சீடருக்குரிய பணிகளினின்று விடுவித்திருந்தார் என்று ஸ்வாமிஜியின் சரிதத்தை எழுதி யிருப்பவர்கள் கருதுகிறார்கள். தூய்மையின் உறைவிடம் சிவன். அவன் வெண்ணிறம் படைத்திருப்பது இந்தத் தூய்மையைக் குறிப்பதற்கேயாம். ஸ்படிக லிங்கமாகவும் அவனே வழிபடுவது இது காரணமாகத்தான். சிவாம்சம் நரேந்திரரிடம் பூரித்துப் பொலிவதாகக் கருதினார் குருநாதர். ''நான் சக்தி; நீ சிவன்'' என்று நரேந்திரரிடமே ஒரு நாள் வெளிப்பட உரைத்துமிருக்கிறார். இவ்வாறு சிவமயமாகிய நரேந்திரர் குற்றேவல் புரிவது தகாது என்று பரமஹம்ஸர் கருதியிருக்கக் கூடும் என்று ஸ்ரீமத் விவேகாநந்தரின் சரிதத்தை எழுதியவர்கள் கூறுகிறார்கள்.

நரேந்திரரைக் கண்டித்து யாரேனும் ஏதேனும் கூறினால் அதனைச் சிவநிந்தை என்பார் ராமகிருஷ்ணர். ''நரேந்திரனை யாராலும் எடை போட முடியாது. அவனை முற்றிலும் அறிவது யாருக்குமே இயலாத காரியம்'' என்பார். நரேந்திரரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர்களுக்காகவும், அதனைப் படிப்பவர்களுக்காகவுமே அவர் இவ்வாறு கூறினாரோ என்று தோன்றுகிறது.

சந்தேகாஸ்பதமான நடத்தையுள்ள சிலருடன் நரேந்திரர் பழகுவதாக ஒரு பக்தர் பரமஹம்ஸரிடம் தெரிவித்தார். அவ்வளவுதான்! முனிவு அறியாத முனிவரும் சினம் கொண்டார். ''இது முழுப் பொய். நரேன் தீய வழியில் செல்ல முடியாது என்று சர்வேசுவரி சொல்லி யிருக்கிறாள். நீ இதுபோல இனியொருமுறை பேசினாயானால் உன் முகத்திலேயே விழிக்க மாட்டேன்'' என்றார்.

நரேந்திரரின் முன்னிலையிலேயே அவரைப் பாராட்டவும் ராமகிருஷ்ணர் தயங்கிய தில்லை. இவ்வாறு செய்வதால் பலவீன மனமுள்ளவர்கள் செருக்குறுவார்கள்; ஆனால் நரேந்திரரை அது தொடாது என்றே அவர் கருதினார். ஒரு நாள் பிரம்ம சமாஜத்தின் பெருந்தலைவர்களான கேசவ சந்திர சேனரும், விஜயகிருஷ்ண கோஸ்வாமியும் பரமஹம்ஸரைத் தரிசிக்க வந்திருந்தனர். அப்போது நரேந்திரநாதரும் அங்கிருந்தார். உன்னதமாக ஒரு நிலையிலிருந்த குருதேவர் அவ்விருவரையும் நோக்கினார்; நரேந்திரரையும் நோக்கினார். உடனே நரேந்திரரின் எதிர்காலப் பெரும் சாதனை அவரது அகக் கண்ணில் பளிச்சிட்டது. பிரம்ம சமாஜத் தலைவர்கள் சென்றபின் அவர் கூறினார்: ''நல்லது, கேசவர் புகழ் பெற்று விளங்குவதற்குக் காரணம் அவர் ஓர் அம்சம் குண நலன்களைப் பெற்றிருப்பது என்றால், நரேந்திரரிடம் அது போலப் பதினெட்டு அம்சங்கள் உள்ளன. கேசவரிடத்திலும், விஜயரிடத்திலும் ஞானப் பிரகாசம் ஒரு மெழுகுவர்த்தி அளவில் ஒளிர்வதாகக் கண்டேன்; நரேனிடமோ அது தகிக்கும் சூரியனாக ஒளி வீசுகிறது. அஞ்ஞானம், மாயை இவற்றின் கடைசிச் சாயை வரை பரவி அவற்றை அழிக்கிறது அந்த ஒளி.''

இவ்வாறு பரமஹம்ஸர் கூறியவுடன் நரேந்திரருக்குக் கர்வம் தலைக்கேற வில்லை. மாறாகக் கோபமே வந்தது. ''ஐயா, நீங்கள் ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? உங்களை மக்கள் பைத்தியம் என்று எண்ணிக் கொள்வார்கள். உலகப் புகழ் படைத்த கேசவர் எங்கே, ரிஷிகளுக்கு ஸத்ருசமான விஜயர் எங்கே, ஒரு முக்கியத்துவமும் இல்லாத மாணாக்கனாகிய நான் எங்கே? என்னை அவர்களோடு நீங்கள் எப்படி ஒப்பிடலாம்?'' என்று ராமகிருஷ்ணரைக் கடிந்து கொண்டார் நரேந்திரர்.

உடனே ராமகிருஷ்ண தேவர் கூறினார்: ''நரேன், என்னால் அப்படிச் சொல்லாமல் கட்டுப்படுத்திக் கொள்ள முடிய வில்லை. அவை என்னுடைய வார்த்தைகள் என்றா நீ எண்ணுகிறாய்? அன்னை காளி எனக்குச் சிலவற்றைக் காட்டி அருளுகிறாள். அதையே நான் திருப்பிக் கூறுகிறேன். அவள் சத்தியம் தவிர வேறு எதையும் எனக்குக் காட்டுவதில்லை.''

'அம்பிகை சொன்னாள்' என்று அவர் கூறுவதை நரேந்திரரால் ஏற்க முடிய வில்லை. உடனே அவர் சற்றும் கள்ள மில்லாமல், ''அம்பிகைதான் சொன்னாளோ, உங்கள் மனசின் கற்பனைதானோ? யார் கண்டது? நம்முடைய உணர்வுகளே நம்மை ஏமாற்றி விடுகின்றன; அதுவும் ஏதேனும் ஒரு வஸ்துவிடம் நமக்கு மனச் சார்பு இருந்தால் கேட்கவே வேண்டாம் இது. விஞ்ஞான பூர்வமாக நிரூபணமாகியிருக்கிறது'' என்றார்.

வாசகர்களே! பரமஹம்ஸரின் பல அநுபவங்களைப் படிக்கும் போது நமக்

ரும்கூட இப்படித் தோன்றி யிருக்கும். எனினும், நாம் அப்படி எண்ணுவதும் தவறோ என்று சற்றே அஞ்சியிருப்போம். தீரர் நரேந்திரரோ அப்படி யெல்லாம் அஞ்ச வில்லை. தமது ஐயத்தைப் பரமஹம்ஸரிடமே உடைத்துக் கேட்டிருக்கிறார் அவர். இப்படிக் கேட்டவரே பின்னர் அவருக்குத் தம் உடல், பொருள், ஆவி யாவற்றையும் நிவேதனம் செய்திருக்கிறார். பரமஹம்ஸரின் அநுபவ சத்தியத்துக்கு வேறு சான்று வேண்டுமா ?

நரேந்திரர் இவ்வாறு பல முறை கூறியதுண்டு. பரமஹம்ஸரின் மன நிலை உயர் நிலைகளில் சென்று கொண்டிருக்கும் போதுகளில் அவர் இந்தப் பேச்சை ஒரு பொருட்டாகவே எண்ண மாட்டார். மற்றச் சமயங்களில் அவருக்கு நிலை குலைந்து விடும். பச்சைக் குழந்தைபோல் பயப்படுவார். எந்த அம்பிகையைப் பற்றிய ஐயத்தை நரேந்திரர் கிளப்பி விட்டாரோ அதே அம்பிகையிடம்தான் குழந்தையாகச் செல்வார் குழம்பிய பரமஹம்ஸர். ஜகன்மாதா அந்தக் குழந்தைக்கு ஆறுதல் சொல்வாள்: ''அவன் சொல்வதற்காக நீ ஏன் விசாரப்படுகிறாய்? இன்னும் சில காலத்தில் நீ சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம் என்று அவனே ஒப்புக் கொள்வான்'' என்று, நம் தாய் நம்மிடம் பேசுவது போல, ராமகிருஷ்ணரிடம் பேசுவாள்.

நரேந்திரர் தம்முடைய கலக்கங்களையும் சரி, அவை தீருவதையும் சரி வெளியில் காட்டிக் கொள்ளாமல் உல்லாஸ புருஷர் போலவே கல்லூரி வாழ்க்கையை நடத்தினார்.

சிறு பிள்ளையைப் போல் குறும்புகளிலும், கலைஞனைப் போல் கானத்திலும், பண்டிதரைப் போல் அறிவாராய்ச்சியிலும், அந்தரங்கத்தில் வேதாந்தியாகவும் வளர்ந்து வந்தார் நரேந்திரர். 'சங்கல்பத்தின் சுதந்திரத்தால்தான் மனிதன்வளரமுடியும். ஆனால் இந்தச் சுதந்திரத்துக்கு ஆதாரமாக நன்னெறிகளில் நாட்டமேற்பட வேண்டும். அப்படி ஏற்பட்டால் நெறிகளுக்கு அடிமையாகி விட்டது போல் ஒருவன் எண்ண மாட்டான். அவற்றுக்குத் தான் யஜமானனாகி விட்டது போன்ற சுதந்திரத்துடன் ஆனந்தமாகவே தர்மத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பான்' என்று கண்டார் நரேந்திரர். நன்னெறியை விட்டு அவரது உள்ளம் ஒருபோதும் நீங்கவில்லை. என்றாலும் சுதந்திர ஆனந்தம் மட்டும் அவருக்குக் கிட்டவில்லை. ஏதோ ஒன்று தேவைப்பட்டது. இதைப் புரிந்துகொண்டு பரமஹம்ஸர் சொன்னார். ''தெய்வத் திரு உருவங்கள் பல உண்டு என்பதை நீ நம்பாது போனாலும் பரவாயில்லை. பிரபஞ்சத்தை இவ்வளவு ஒழுங்காக இயக்கிக்கொண்டிருக்கும் ஒரு பொருள் உண்டு என நீ எண்ணினால் போதும். அந்தப் பரம்பொருளிடம் இப்படிப் பிரார்த்தனை புரிவாயாக: 'கடவுளே, உன்னை நான் அறிந்தேனில்லை. உன்னுடைய உண்மையான இயல்பினை எனக்குக் காட்டக் கருணை கொள்வாய்!' இப்படி நீ அந்தரங்கசுத்தத்துடன் வேண்டினால் உன் வார்த்தையை மகா சக்தி கேட்கும்'' என்றார் பரமஹம்ஸர். இந்த உபதேசம்தான் நரேந்திரருக்குப் புத்துயிர் ஊட்டியது. தத்துவ ஆராய்ச்சிக்கு உட்பட்ட விஷயமல்ல கடவுள்; நம் பிரார்த்தனையால் மட்டுமே பெறக் கூடியவர் என்ற நம்பிக்கையைப் பெற்றுவிட்டார் நரேந்திரர்.

பரமஹம்ஸர் போதித்தவாறே, பிரார்த்திக்கவும் தியானிக்கவும் தொடங்கினார் நரேந்திரர். உருவற்றவராயும், ஆனால் குணங்கள் பொருந்தியவராகவும் கடவுளைப் பாவித்துப் பிரார்த்திப்பது பிரம்ம ஸமாஜத்தின் வழக்கம். முன்பு இவ்வாறே பிரார்த்தித்து வந்த நரேந்திரர் இப்போது கடவுளுக்கு எந்த விதமான லட்சணத்தையும் தானாக அளிக்கவில்லை. ''ஹே பகவன்! சத்தியத்தின் உறைவிடமான உனது உண்மையான லட்சணம் எதுவோ அதை எனக்கு நீயே காட்டியருள்வாயாக'' என்று தமது இதய அடிவாரத்திலிருந்து வேண்டிக் கொள்ளலானார். (தொடரும்)

''என்னா, இந்தப் புடவை எப்படி?''
''நன்னா இருக்கு!''
''மயில் கழுத்து வர்ணமும், ஊசிக் கோடும் பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று தோன்றவில்லையா?''
''உம், உம்!''
''இந்த பிளவுஸ் பட்டு?''
''ஆஹா!''
''அது சரி, நான் கேட்பதற்கெல்லாம் சிரத்தை இல்லாமல் பதில் சொல்கிறீர்களே, ஏன்?''
''ஒன்று மில்லை. நீ என்னிடம் எதையோ மறைக்கிறாயே என்று யோசிக்கிறேன்?''
''எதை?''
''பில்லைத்தான்!''



குரோம்பேட்டை ரயில் நிலையத்தை அவ்வப்போது ரயிலில் உட்கார்ந்தவாறு கடக்கும் வேளைகளில் எதிரே காட்சியளிக்கும் தொழில் நுணுக்கக் கல்லூரிக் கட்டிடங்கள் மனத்தில் எழுப்பிய கற்பனைகளுக்கும் அந்தக் கல்லூரி வட்டத்துக்குள் நுழைந்து சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பியபோது உள்ளத்தில் ஏற்பட்ட பிரமிப்புக்கு மிடையே ஏற்பட்ட வித்தியாசம் உடனடியாக ஒரு மேல்நாட்டு நகைச்சுவைத் துணுக்கை நினைவூட்டியது.

ஒரு செல்வந்தர் தம் வியாதியைக் குணப்படுத்திக் கொள்ள ஒரு பிரபல மருத்துவரை அணுகினார். வியாதியும் சீக்கிரமே விடை பெற்று விலகியது. செல்வந்தர் வியாதி விலகிய வேகத்தில் மருத்துவருக்கான கட்டணத்தைக் கொடுப்பவராகத் தெரியவில்லை. மருத்துவரின் பொறுமையோ கரைந்து கொண்டு வந்தது.

ஒருநாள் செல்வந்தர் கையில் ஒரு பையு[illegible] வந்து மருத்துவர் முன் அமர்ந்தார்.

சென்னை தொழில் நுணுக்கக் கல்லூரி



நூதனமான அமைப்புகொண்ட ஹாஸ்டல் கட்டிடமும் விமான விஞ்ஞானம் போதிக்கும் கூடமும்

பணத்தைப் பற்றிப் பேசவில்லை. கையிலிருந்த பையின் அருமை பெருமைகளை வருணித்தார். அவருடைய செல்வக் குமாரி தன் கையால் வெகு அக்கறையுடன் பின்னிய பையாம் அது. அந்தப் பையைப் பிரிய மிகவும் வருந்தப் படும் தோரணையில் மருத்துவருக்கு அன்பளிப்பாகக் கொடுக்க முன்வந்தார்.

மருத்துவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. செல்வந்தர் சிக்கன நிபுணராக மாறிப் பணம் கொடுக்காமல் ஏதோ சாதா பையைக் கொடுத்து விட்டு நழுவப் பார்க்கிறார் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றி விட்டது. முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு நேரடியாக விஷயத்துக்குக் குதித்தார்.


''சார்! எனக்கெதற்கு இந்தப் பையெல்லாம்? என்னுடைய பீஸான நூறு டாலரை மாத்திரம் கொடுத்தால் போதும்'' என்றார் கண்டிப்புத் தொனிக்க.

இப்போது செல்வந்தர் திடுக்கிட்டார். ''நூறு டாலர்தானா? இதோ தருகிறேன்'' என்று சொல்லி மருத்துவருக்குக் கொடுக்கவிருந்த பையைத் திறந்து அதனுள் வைத்திருந்த ஆயிரம் டாலர்களில் நூறை மாத்திரம் எடுத்துக் கொடுத்துவிட்டு மீதிப் பணத்தையும், பையையும் கையில் எடுத்துக் கொண்டு நடந்தார். சற்று அவசரப்பட்டுப் பேசித் தொள்ளாயிரம் டாலர் நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்ட மருத்துவருக்கு மயக்கம் தெளிய வெகு நேரமாயிற்றாம்.

செல்வந்தரின் சாதாரணப் பைக்குள் இருந்த பணத்தைப் பார்த்தபோது மருத்துவருக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய உணர்ச்சிதான் சென்னை தொழில் நுணுக்கக் கல்லூரிக்குள் நுழைந்து சுற்றிப் பார்த்தபோது ஏற்பட்டது.

சுதந்திரமடைந்த பாரதத்தின் எதிர்கால நல்வாழ்வும் சுபிட்சமும் நாட்டின் தொழில் வளர்ச்சியிலும் வெற்றியிலும்தான் அடங்கியிருக்கின்றன என்பதைத் தீர்க்கதரிசனமாகக் கண்ட சில அறிவாளிகளில் ஒருவர்தான் காலம் சென்ற தொழிலதிபர் ஜி. ராஜம். தொழில் கல்வியை வளர்த்து இளைஞர்களின் திறமையைப் பல வகையிலும் பயனுறச் செய்ய அவர் ஒரு திட்டம் வகுத்தபோது அவருடைய உற்ற நண்பர்கள் பலர் அவருக்கு உற்சாகமூட்ட முன்வந்தார்கள். அதன் விளைவாகத்தான் சென்னை தொழில் நுணுக்கக் கல்லூரி, சந்தடியற்ற நிம்மதியான குரோம்பேட்டைப் பகுதியில் தோன்றியது. சம்பிரதாயப்படி அதை 1949ம் ஆண்டு ஜூலை மாதம் பதினெட்டாம் தேதி காலஞ்சென்ற திரு பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள் திறந்து வைத்தார். அப்போது அவர் சென்னை முதல் அமைச்சராக இருந்த காலம்.

நாட்டின் தேவைக்கும் வளத்துக்கும் தேவையான உயர்தரப் பொறியியல் கல்வியை அளிப்பதும் பொறியியல் துறைகளில் ஆராய்ச்சிக்கான வசதிகளை அளிப்பதும் இந்தக் கல்லூரியின் இரண்டு பிரதான நோக்கங்கள்.



இந்தக் கல்லூரி தோன்ற வசதி செய்த பல நன்கொடையாளர்களும், வளர்ச்சிக்குத் தொடர்ந்து உதவிவரும் பல தரும சிந்தனையாளர்களும் சேர்ந்து ஒரு குழுவாக இந்தக் கல்லூரியை நிர்வகிக்கிறார்கள். நிர்வாகக் குழுவின் தலைவராகச் சென்னை - சர்வ கலா சாலை உப அத்தியட்சகர் டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் 1953ம் ஆண்டிலிருந்து பணியாற்றுகிறார். ஆனால் இந்தத் தொழில் நுணுக்கக் கல்லூரி சென்னை சர்வ கலாசாலையுடன் இணையாமல் தனி ஸ்தாபனமாகவே இயங்கி வருகிறது.

''சென்னை ராஜ்யத்திலும் மற்றும் சில ராஜ்யங்களிலும் இந்தக் கல்லூரி அளிக்கும் டிப்ளோமாவுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கத் தயங்கினாலும் உலகில் உள்ள பல நாடுகள் இந்தக் கல்லூரி மாணவர்களின் திறனைக் கண்டு வியந்து நல்ல வாய்ப்புக்கள் அளிக்கின்றன'' என்று கல்லூரி டைரக்டர் திரு கே. சீனிவாசன் பெருமையுடன் குறிப்பிட்டார்.

திரு கே. சீனிவாசன் நீண்ட நாட்கள் பங்களூரில் உள்ள 'இண்டியன் இன்ஸ்டிட்யூட் ஆப் ஸயன்ஸி'ல் ஆசிரியராகப் பணியாற்றி அனுபவம் பெற்றவர். கண்டிப்புக்காரரர் போல் தோற்றமளித்தாலும் கருணை நிறைந்த உள்ளம் படைத்தவர்தான். தம்முடைய மாணவர்களின் திறமையில் நிறைய நம்பிக்கை வைத்திருக்கிறார். அவர்களுடைய திறமைக்கு ஏற்ற வேலை வாய்ப்புகள் நிறைய உண்டு என்றும் சொல்கிறார்.



மூன்று ஆண்டு டிப்ளோமாப் படிப்புக்கான வகைக்கு இந்தக் கல்லூரியில் ஆண்டு தோறும் நூறு மாணவர்களைத்தான் அனுமதிக்கிறார்கள். அதிலும் மாணவர்களின் திறமையைக் கண்டுப் பார்த்துத்தான் அனுமதிக்கிறார்கள். பி. எஸ்ஸி. பட்டப் படிப்பில் பௌதிகத்தையும் கணிதத்தையும் கற்றுக் குறைந்த பட்சம் இரண்டாம் பிரிவில் தேறி விருப்பவர்களுக்குத்தான் இங்கு இடமுண்டு. இந்த வகையில் இது ஒரு 'போஸ்ட் கிராஜுவேட்' கல்லூரி. அதாவது ஆராய்ச்சித் துறைக் கல்லூரி என்றே குறிப்பிட்டு விடலாம். மற்றப் பொறியியல் கல்லூரிகளில் ஐந்து ஆண்டுகள் கற்று முடிக்கவேண்டியதை இங்கு மூன்றே ஆண்டுகளில் கற்றுக் கொண்டாக வேண்டியிருக்கிறதல்லவா?

இங்கு வரும் மாணவர்கள் நான்கு வெவ்வேறு துறைகளில் பயிற்சி பெறலாம். விமான சாஸ்திரம், மோட்டார் கார்க் கலை, மின்துறை ஆராய்ச்சி, யந்திர நுணுக்கம் ஆகியவைதான் அந்தத் துறைகள்.

யந்திர நுணுக்க சம்பந்தமான பாட போதனை கிழக்காசியப் பகுதியிலேயே இந்தக் கல்லூரியில்தான் அளிப்பதாகச் சொல்லப்படுகிறது. இதை மூன்று வருடம் படித்து டிப்ளோமா வாங்கும் மாணவனை உடனடியாக ஒரு முழு பொறியியல் கலைஞராகக் கருதித் தனியார் ஸ்தாபனங்கள் வேலை கொடுக்கின்றனவாம்.


மொத்தம் நூறு இடங்களில் பத்து இடங்களை மாத்திரம் விமான சாஸ்திரக் கலைக்காக ஒதுக்கி யிருக்கிறார்கள். அநேகமாக வட இந்தியாவிலிருந்து இந்தக் கல்லூரிக்கு வருபவர்கள் இந்தப் பிரிவை விரும்புகிறார்களாம். நேபாளத்திலிருந்து வந்து இங்கு தங்கிப் படிக்கும் ஜோஷி என்னும் மாணவரைச் சந்தித்தபோது அவர் பிற்காலம் தம் தாய்நாட்டு விமானப் போக்குவரத்தில் தாம் சேவை செய்ய ஆர்வமுடையவராக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொண்டார். மீதி மூன்று பிரிவுகளுக்கும் தலா முப்பது முப்பது இடங்கள்.

இந்த நூறு இடங்களுக்கும் சென்ற ஆண்டு வந்த விண்ணப்பங்கள் எழுநூற்றி இருபத்தி ஒன்பது.

ஒவ்வொரு பாடத்துக்கான தனித்தனிக் கட்டிடங்கள் அழகு பெறக் கம்பீரமாக

ஸி. ராஜம் அவர்கள் ஸ்தாபித்த இந்தக் கல்லூரியில் இயந்திரங்கள், மோட்டார் பற்றிய தொழில் நுணுக்கங்களும் கற்றுக்கொடுக்கிறார்கள்.





நிற்கின்றன. பரிசோதனைக் கருவிகளையும் தாராளமாகவே வாங்கிப் போட்டிருக்கிறார்கள். இந்த ஒரு கல்லூரியில்தான் இரவு வேளைகளிலும் மாணவர்கள் பரிசோதனை நடத்திப் பார்க்கப் பரிசோதனைசாலைகளில் வாய்ப்பு இருக்கிறது. ஒரு யந்திரசாலையின் வாசலில் நின்று உட்பக்கம் பார்த்தால் அதன் மறு கோடியிலிருக்கும் பிரம்மாண்டமான யந்திரங்கள் கொசுவாகத்தான் தோன்றுகின்றன. அத்தனை பெரிய யந்திரசாலை.

பொதுத் தொழிற்சாலையின் சூப்பரின்டெண்டாகப் பணியாற்றும் திரு அங்கர் அவர்களுக்குத் தம் மேற்பார்வையிலிருக்கும் தொழிற்சாலை போலவே விசாலமான இதயமும் உண்டு என்பதை அவர் 'நோ மென்ஷன் பிளீஸ்' என்று சொல்லும் விதத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பாரதத்தின் பல பகுதிகளிலிருந்தும் அண்டை நாடுகளிலிருந்தும் மாணவர்கள் இந்தக் கல்லூரியை நாடி வந்து ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிறார்கள். பிர்லா ஹாஸ்டல், நியூ ஹாஸ்டல்,—சீனியர் ஹாஸ்டல் என்ற மூன்று தனித் தனிக் கட்டிடங்களில் வரிசையாக முதல், இரண்டாம், மூன்றும் வருட மாணவர்கள் தங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மூன்று ஹாஸ்டல்களிலும் ஒரு மாணவனுக்கு ஓர் அறை வீதம் இருநூற்றி நாற்பது அறைகள் இருக்கின்றன. பெற்றோர்களுடன் தங்கியிருக்கும் மாணவர்கள் மாத்திரம் வெளியிலிருந்து அனுமதிக்கப்படுகிறார்கள். தினசரி கண்டிப்பாகக் காலை ஏழரையிலிருந்து பதினொன்றரை வரையிலும் பிற்பகல் ஒரு மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரையிலும் எட்டு மணி நேரம், வகுப்புக்களிலும் பரிசோதனை சாலைகளிலும் கழிக்க வேண்டியிருப்பதால் அவர்களுக்கு அநேகமாக ஹாஸ்டல் வாசம்தான் சௌகர்யமாக இருக்கிறது.

''மாதம் எழுபது ரூபாய் வரை ஆனாலும் எங்கள் மெஸ் சாப்பாடு ருசியாக இருக்கும். வகுப்பு அறைகளிலேயே காலை பத்து மணி சுமாருக்குக் காப்பி விநியோகிக்க ஏற்பாடாகியிருப்பதால் எங்கள் உற்சாகம் குறைவதற்கு இடமில்லை'' என்றார் ஒரு மாணவர்.

''மூன்று மாதங்களுக்கு ஐம்பது ரூபாய் வாடகை கொடுத்தாலும் எங்கள் அறைகள் ஒவ்வொன்றிலும் ஒரு பால்கனி உண்டு. காற்றுக்குப் பஞ்சமில்லை!'' என்றார் ஒரு பிர்லா ஹாஸ்டல் முதல் வருட மாணவர்.

''இந்தக் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை காலை டிபனுக்கான ஊத்தப்பம் ரொம்பப் பிரமாதம் சார்! தலா நாலைந்து சாப்பிட்டுவிட்டுப் பக்கத்துப் பொழுதுபோக்கு அறையில் பிரம்பு நாற்காலிகளில் அமர்ந்து சர்ச்சைகள் ஆரம்பித்தால் நேரம் போவது தெரியாமல் மெய் மறந்து உட்கார்ந்திருப்போம்'' என்றார் ஒரு சீனியர் மாணவர்.

உழைப்பை அதிக அளவில் அஸ்திவாரமாகக் கொண்டிருக்கும் இந்தக் கல்லூரியில் மாணவர்கள் உற்சாகம் நிறைந்தவர்களாக இருப்பது பாராட்டப்பட வேண்டிய அம்சம்தான். கடினமான இந்தப் பொறியியல் துறைகளைக் கண்டு அஞ்சாது ஆறு மாணவிகள்கூட மின்துறை ஆராய்ச்சிப் படிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். எகிப்து தேசத்திலிருந்து வந்திருக்கும் காரி யந்திர நுணுக்கக் கலையில் கவனத்தைத் திருப்பியிருக்கிறார். அந்தத் துறையில் அவர் நாட்டில் நல்ல எதிர்காலம் இருக்கிறதாம்.

மலேயா தேசத்தைச் சேர்ந்த தர்மராஜா மின்துறை ஆராய்ச்சி மாணவர். தாயகம் திரும்பியதும் ஒலிபரப்புத் துறையில் சேவை செய்ய ஆர்வம் உள்ளவராக இருக்கிறார்.

சென்னை ராஜ்யத்தில் சமீபத்தில்தான் காலட்சேபக் கலையைப் புனருத்தாரணம் பண்ணும் வகையில் தஞ்சையில் ஒரு கல்லூரி திறக்கும் முயற்சியில் சர்க்கார் ஈடுபட்டது. ஆனால் காலட்சேபக் கலையில் வெகு நாட்களாகவே உற்சாகம் காட்டி, காலட்சேபப் பரம்பரை ஒன்றையே இந்தச் சென்னைத் தொழில் நுணுக்கக் கல்லூரி தோற்றுவித்திருக்கிறது.

ஆண்டுதோறும் வருடக் கடைசியில் நடக்கும் ஆசிரியர்கள் மாணவர்கள் பரஸ்பரப் பிரிவு விருந்தில் மற்ற அநேக கல்லூரிகளில் நடப்பது போல் கிண்டல் பேச்சில் அக்கறை காட்டுவதில்லையாம். அதற்குப் பதிலாக ஒரு மாணவர் கதா காலட்சேபமே பண்ணுவாராம். பகவானும் நாரதப் பிரம்மமும் ககன மார்க்கமாக மதராஸ் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி பக்கமாக வருவது போலவும், உடனே அவர்கள் விமரிசகர்களாக மாறி விளாசித் தள்ளுவதாகவும் கற்பனை செய்து கொண்டு, நவீன சினிமா, கர்னாடக ட்யூன்களில் பாட்டுக்களை அமைத்துக் கேட்பவர்களுக்கு வயிற்று வலி ஏற்படும் அளவுக்குச் சிரிக்க வைப்பார்களாம். உதாரணமாகச் சாப்பாட்டுக் கூடத்தில் வழங்கும் ரசம் விமரிசனத்துக்கு ஆளாகிறது என்றால்,

'ரசத்துக்கு என்மேல் என்னவோ கோபம்
வேம்பாய்க் கசக்கிறதே'

என்று பகவான் நாரதரைப் பார்த்துக் கேட்கவும்,

'வேப்பம்பூ ரசம் வெல்லமாய் இனிக்குமோ
வேடிக்கைதான் ஸ்வாமி'

என்று நாரதர் பதில் சொல்வதாகவும் அமைப்பார்களாம்.

'ஏப்ரல் பூல்' விழாவும் அமர்க்களப்படுமாம். மாணவர்கள் எதையுமே நகைச்சுவை உணர்ச்சியுடன் எடுத்துக்கொள்பவர்களாகையால் குழப்பம் விளைவதில்லை.

மெக்கானிக்கல் பாடப் பிரிவில் ஒரு பேராசிரியர் இங்கு முன்பு இருந்தாராம். அவருடைய நடை கூட 'மெக்கானிக்க'லாக இருக்கும். திடீரென்று மாணவர்களுடைய பலவேறு பென்சில்களையெல்லாம், படம் போடுவதற்குத் தகுதியாக வைத்திருக்கிறார்களா என்று பார்க்கப் பரீட்சையில் இறங்கிவிடுவாராம். அத்தனை பென்சில்களுக்கும் மொத்தம் லட்சம் மார்க்குகள் என்று வைத்துக் கொண்டு தனித்தனியாகக் கூட்டி, சதவிகிதம் போட்டு அறிவிப்பாராம்!

காலஞ்சென்ற திரு வி. ராஜத்தின் கனவு நினைவாக மாறிவிட்டது என்று நிச்சயமாக இந்த எம். ஐ. டி. யைப் பார்த்தவர்கள் சொல்லுவார்கள்.



அருணாகிரி விலாஸ்
சீயக்காய்
பவுடர்
REGD
ARUNAGIRI VILAS SOAP NUT POWDER, KARAIKUDI



இதோ வந்துவிட்டது . . . முன்னைவிடச் சக்தியில் சிறந்த
neocid
POWDER
நியோஸிட்
பவுடர்
புதிய டப்பியில் கிடைக்கிறது
டாடா-பைஸன்
தயாரிப்பு
எல்லாவிதமான பூச்சிகளையும் அழிக்கிறது
பாரதம் பூராவுக்கும் ஏகபோக் விநியோகஸ்தர்கள், ராலீஸ் இந்தியா லிமிடெட்

ஈசன் விட்ட வழி

விந்தன்





நாளை பொழுது விடிந்தால் தீபாவளி. வழக்கத்துக்கு விரோதமாக வெறுங்கையுடன் வேலையிலிருந்து விடு திரும்பிய வெங்கடாசலத்தைச் சூழ்ந்து கொண்டு, ''அப்பா, எனக்குப் பட்டுப் பாவாடை!'' என்றது ஒரு குழந்தை; ''அப்பா, எனக்குப் பட்டுச் சட்டை!'' என்றது இன்னொரு குழந்தை. ''எனக்குப் பட்டுப் பாவாடையும் வேண்டாம், பட்டுச் சட்டையும் வேண்டாம்; நிறையப் பட்டாசுதான் வேண்டும்!'' என்றது மற்றொன்று; ''பட்டாசு வாங்கிக் கொண்டு வரும்போது பட்சணம் வாங்கிக் கொண்டு வர மறந்துவிடாதே, அப்பா!'' என்றது மற்றும் ஒன்று.

எல்லாவற்றுக்கும், ''ஆகட்டும், ஆகட்டும்'' என்று தலையை ஆட்டிவிட்டுக் கடந்த ஆறு மாத காலமாக நோய் வாய்ப்பட்டிருக்கும் தன் அப்பா ஆதிமூலனாரின் அறைக்குள் நுழைந்தான் அவன். ''இப்போதுதான் வருகிறாயா?'' என்றார் அவர், ஈனஸ்வரத்தில். ''ஆமாம், அப்பா! உடம்பு எப்படியிருக்கிறது?'' என்று கேட்டான் அவன்.

''என் உடம்புக்கு என்ன? அறுபதாண்டு விழாவைக் கொண்டாடிய அது, நூற்றாண்டு விழாவைக்கூடக் கொண்டாடும் போலிருக்கிறது! நீ போ, போய்க் காப்பி சாப்பிடு!''

''காப்பிக்கு இப்போது என்னப்பா, அவசரம்? டாக்டர் வந்தாரா, என்ன சொன்னார்?''

''வந்தார்; 'கூடிய சீக்கிரமே எல்லாம் சரியாய்ப் போய் விடும்' என்று சொன்னார்!''

'கூடிய சீக்கிரமே எல்லாம் சரியாய்ப் போய் விடும்' என்று சொன்னார்! — இரு பொருள் கொண்டது போல் தொனித்த இது, அவனை என்னவோ செய்வது போலிருந்தது; இதயத்தை அமுக்கிப் பிடித்துக் கொண்டு வெளியே வந்தான் — ஏழு மாதத்துக் குழந்தையிலிருந்து எம். ஏ. பட்டம் பெறுகிற வரையில் அவனைப் பல கோணத்தில் எடுக்கப்பட்ட படங்கள் அங்கே மாட்டப்பட்டிருந்தன. அவற்றுக்கு மேலே அவனைப் பெற்றெடுத்த ஆறாவது மாதத்திலேயே கண்ணை மூடி

விட்ட அவன் அன்னையின் படம் மாட்டப் பட்டிருந்தது — அன்றிருந்து. அதாவது தன் தாயார் கண்ணை மூடி விட்ட அந்த நாளி லிருந்து. தாரம் இழந்த தன் தகப்பனார்— இழந்த தாரத்துக்குப் பதிலாக எந்தக் கார ணத்தைக் கொண்டும் மறு தாரம் தேடிக் கொள்ளாத தன் தகப்பனார் — தன்னைக் காப் பாற்ற என்ன பாடுபட்டிருக்க வேண்டும், எத்தனை பேருடைய தயவை நாடி யிருக்க வேண்டும்? அதற்கெல்லாம் பிராயச்சித்த மாக இன்று வரை தான் அவருக்கு ஏதாவது செய்ததுண்டா, செய்வதற்குரிய சந்தர்ப்பத் தையாவது அவர் தனக்கு அளித்ததுண்டா? கடந்த ஆறு மாத காலமாகத் தன்னால் இய லாத நிலையில், 'என்னைக் கொஞ்சம் தூக்கி உட்கார வை, கழிவிடத்துக்கு அழைத்துக் கொண்டு போ, படுக்க வைத்து விடு!' என் பதைத் தவிர!

இந்தச் சந்தர்ப்பத்தைக் கூட அவர் தனக்கு அவ்வளவு எளிதிலா அளித்து விட்டார்? இல்லை; மருத்துவ மனைக்குப் போய்விடுவதாக வல்லவா சொன்னார்?

அப்படிப்பட்ட ஆத்மா 'இன்றோ, நாளையோ?' என்று இருக்கும்போது, இந்த வீட்டில் எப்படித் தீபாவளி கொண்டாடுவது? எனக்கு 'அது வேண்டும், இது வேண்டும்' என்று நச்சரிக்கும் குழந்தைகளை எப்படிச் சமாதானம் செய்வது?

இவ்வாறு அவன் எண்ணமிட்டுக் கொண் டிருந்தபோது, ஐந்தாவது குழந்தையின் பிரசவத்தைப் பார்த்துவிட்டுப் போவதற் காகத் தன் மகள் தங்கம் முழுகி மூன்று மாதங்கள் ஆவதற்கு முன்னமேயே வந்து விட்டிருந்த அவன் மாமியார் அபயாம்பாள் வந்து, "நான் சொல்கிறேன் என்று நீங்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது; நல்ல நாளும் அதுவுமாக நீங்கள் அந்த மனுஷரை இங்கே வைத்துக் கொண்டிருப்பது அவ்வளவு நல்லதில்லை. இதுவோ குழந்தை குட்டிகள் உள்ள வீடு; அக்கம்பக்கத்துக்கு அஞ்சி யாவது தீபாவளியை நாம் எப்படியாவது கொண்டாடியே தீர வேண்டும். பேசாமல் அவரைக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுங்கள்; ஈசன் விட்ட வழியாகட் டும்!" என்றாள், அந்த வயதிலும் மருமகனைப் பார்த்து வெட்கப்படுபவளைப் போல் முந் தானையை இழுத்துப் போர்த்திக்கொண்டு.

அதற்குள் கையில் காப்பியுடன் அங்கே வந்த தங்கம், "அதை ஏம்மா, நீ சொல் கிறாய்? அவருக்கு நல்லது சொல்வதும் தெரி யாது; கெட்டது சொல்வதும் தெரியாதே!" என்றாள் தனக்கே இயல்பான 'தனித் தன்மை'யுடன்!

"சொல்ல வேண்டாம் என்றுதான் இருந் தேன்; மனசு கேட்கவில்லை!" என்றாள் அவள் பெருமூச்சுடன்.

"வந்ததும் வராததுமாக இருக்கும்போதே அவர்பிள்ளை



விடம் சொல்கிறாரே, 'கூடிய சீக்கிரமே எல்லாம் சரியாய்ப் போய் விடும்' என்று டாக்டர் சொன்னதாக — அவர் அப்படியா சொன்னார்? 'இன்னும் இரண்டு நாட்களுக்கு மேல் தாங்காது; இஷ்டப்பட்டதையெல்லாம் சாப்பிடுங்கள்!' என்றுதானே சொன்னார்? — ஏண்டா, பாலு! சொல்லேண்டா, நீ கூடத்தானே கேட்டுக் கொண்டிருந்தாய்?'' என்று தன் மூத்த மகனைச் சாட்சிக்கு அழைத்தாள் தங்கம்.

'' ஏன், உன்னுடைய வார்த்தையில் உனக்கே நம்பிக்கையில்லையா?'' என்றான் வெங்கடாசலம், அவளிடமிருந்த காப்பியை வாங்கி மேஜையின்மேல் வைத்துவிட்டு.

''என்னுடைய வார்த்தையில் எனக்கென்னவோ நம்பிக்கை இருக்கத்தான் இருக்கிறது; உங்களுக்கு இருக்க வேண்டுமே என்பதற்காகத்தான் அவனை நான் சாட்சிக்குக் கூப்பிட்டேன்!'' என்று அவனை எரித்து விடுபவள்போல் பார்த்துக்கொண்டே திரும்பினாள் அவள்.

''நீ சொன்னது சரியாய்த்தான் போச்சு! அவருக்கு நல்லதும் தெரியவில்லை, கெட்டதும் தெரிய வில்லையே?'' என்று சொல்லிக் கொண்டே அவளைத் தொடர்ந்தாள் அபயாம்பாள்.

இவையனைத்தையும் படுக்கையில் இருந்தபடியே கேட்டுக் கொண்டிருந்த ஆதிமூலனார் சிரித்தார் — அவருடைய சிரிப்பிலே ஜீவன் இல்லை யென்றாலும், சிந்தனையிலே ஜீவன் இருந்தது.

பிறர் வெறுக்கும் வரை இருப்பதைவிட, விரும்பும்போதே இறந்து விடுவது எவ்வளவோ நல்லதுதான்! ஆனால், நான் அதற்குக் கொடுத்து வைக்கவில்லையே?

சம்பந்தியம்மாளுக்கு இன்று நான் இந்த நிலையில் இருப்பது 'சங்கட'மாக இருக்கிறது என்றால், தன் மகனுக்கோ அது 'தர்மசங்கட'மாக இருக்கிறது! இந்த ஒரு வித்தியாசத்தைத் தவிர வேறு என்ன வித்தியாசம் இருக்கிறது, இப்போதுள்ள சங்கடத்தில்?

மருமகளைப் பற்றியோ சொல்லவே வேண்டாம்; அவளுக்கு நான் எப்போதுமே வேண்டாதவன்! அவளுக்கு மட்டுமென்ன, இந்த உலகத்துக்கே இப்போது நான் வேண்டாதவன்தானே?

பேரப் பிள்ளைகளின் சந்தோஷத்தை அவர்கள் விரும்புவது போலவே நானும் விரும்பத்தான் விரும்புகிறேன். ஆனால்....

இவர்கள் சொல்வதுபோல் தன் மகன் தன்னை மருத்துவ மனையில் சேர்த்து விட்டால் மட்டும் என்ன நடந்துவிடப் போகிறது?

அங்கே நான் தீபாவளியும் அதுவுமாக வாயைப் பிளந்துவிட்டால், இங்கே இவர்களால் தீபாவளி கொண்டாடிவிட முடியுமா? அப்போதும் அக்கம்பக்கத்துக்கு அஞ்சியாவது இவர்கள் அதைக் கைவிடத்தானே வேண்டியிருக்கும்?

பார்க்கப் போனால் இந்த வருடத்தோடு முடிந்துவிடப் போவதில்லை இந்தத் துக்கம்; அடுத்த வருடமும் தொடரும் — இது சமூக நியதி: இந்த நியதி ஏன் தெரியவில்லை சம்பந்தியம்மாளுக்கு?

எது எப்படியிருந்தாலும் நான் இந்தச் சமயத்தில் இப்படிப் படுத்திருக்கக் கூடாது தான் — ஆனால் அதற்கு நானா பொறுப்பு? எல்லாம் வல்ல இறைவனின் சித்தம் அப்படியிருந்தால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்?

ஒன்று வேண்டுமானால் செய்யலாம்—அதாவது, இவர்களுடைய ஏச்சும் பேச்சும் காதில் விழாமல் இருப்பதற்காகத் தீபாவளிக்கு முன்னால் தன் உயிரைத் தானே வேண்டுமானால் மாய்த்துக் கொண்டு விடலாம் — கையில் வைர மோதிரம் அணிந்திருக்கும் தனக்கு அது ஒரு பெரிய காரியமும் இல்லை.....

இந்த எண்ணம் உதித்ததும் ஒளியிழந்த கண்களால் ஒளி மிக்க வைரமோதிரத்தைப் பார்த்தார் பெரியவர் — 'உன்னை நீ மாய்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக என்னை நீ ஏன் மாய்க்கப் பார்க்கிறாய்? நான் இருந்தால் உனக்குப் பின்னால் உன் மகனுக்கு உதவ மாட்டேனா?' என்று அது தன்னைப் பார்த்துக் கேட்பதுபோல் இருந்தது அவருக்கு—ஆம், எனக்குச் சில சமயம் உதவியது போல் நீ அவனுக்கும் உதவத்தான் வேண்டும்—மாட்டேன்; வாழ்வுக்குப் பயன்படுத்திக் கொண்ட உன்னைச் சாவுக்கும் பயன்படுத்திக் கொள்ள மாட்டேன் !

வேறு வழி?.....

விட்டத்தைப் பார்த்தார்; விட்டத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சல் கயிற்றையும் பார்த்தார் — இரண்டையும் பயன்படுத்தித் தன் வாழ்வை முடித்துக் கொள்வதென்பது அவ்வளவு இலேசா, என்ன? அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்து முடிப்பதற்குள் யாராவது எழுந்துவிட்டால்? வீட்டில் உள்ளவர்களோடு வீதியில் உள்ளவர்களும் சேர்ந்துவிடுவார்கள்; அதற்குப் பிறகு போலீஸ், விசாரணை என்றெல்லாம் ஏற்பட்டு, அதனால் தன் மகன் ஏன் அனாவசியமான தொல்லைகளுக்கு உள்ளாக வேண்டும்? —கூடாது; தன் மகன் தன்னால் எந்த விதமான தொல்லைக்கும் உள்ளாகக் கூடாது!

தொட்டதும் உயிர் சட்டென்று போய் விட ஏதாவது வழியிருந்தால்?—ஏன் இல்லை, மின்சாரத்தைத் தொட்டால் அப்படிப் போய் விடும் என்கிறார்களே?—ஆம், அதுவே வழி; அதுவே சரியான வழி!

இந்த முடிவுக்கு வந்ததும், 'பொழுது எப்போது சாயும், இரவு அதை எப்போது தழுவும்?' என்று காத்துக்கொண்டிருந்தார் அவர்!

''அடே பாலு, இங்கே வாடா! அடி வசந்தி, இங்கே வாடி!'' கடைக்குப் போய் விட்டு வந்த சம்பந்தியம்மாள் பெருங் குரலிட்டுத் தன் பேரக் குழந்தைகளைக் கூப்பிடுவது பெரியவரின் காதில் விழுந்தது — எதற்காகக் கூப்பிடுகிறாள் அவள், அவர்களை? — ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்.

அதற்குள், ''என்ன, பாட்டி? ஏன் கூப்பிட்டாய், எங்களை?'' என்று கேட்டுக் கொண்டே வந்த அவையனைத்தும் அவளைச் சூழ்ந்துகொண்டன. பை நிறைய வாங்கிக் கொண்டு வந்திருந்த பட்டாசுக் கட்டுகளை எடுத்து அவர்களுக்கு முன்னால் வைத்து,

சிறு வயதிலேயே புகட்டுங்கள்...
சிறந்த முறையில் புகட்டுங்கள்...

காலையில் முதல் வேலையாக ஒரு முறை
இறுதியாக இரவில் ஒரு முறை
வாய்கொப்பளிக்க

லிஸ்டரின்!

—வாழ்நாள் முழுதும்
அவர்களுக்குப் பாதுகாப்பு!



பழக்கம் படிவதற்கு வாகானது இளமைப் பருவம்! லிஸ்டரின் உபயோகிக்கும் ஆரோக்கிய நற் பழக்கத்தைப் புகட்டுவதற்கு இதைவிட வாய்ப்பான சமயமும் உண்டோ! அன்றாடம் அதிகாலை ஒரு தடவை, இரவு ஒரு தடவை லிஸ்டரின் கொண்டு வாய் கொப்பளித்தால் கிருமிகளினின்று நாள் முழுதும் காத்துக்கொள்ளலாம். பட்ட மாத்திரத்திலே கிருமிகளைக் கொன்று மூச்சிலே இனிமை தவழச் செய்வது லிஸ்டரின் ஆன்டிஸெப்டிக் (நச்சுமுறி மருந்து)..

திடமுடன் முன்யோசனையைக் கைக்கொள்ளுங்கள்! தினம் இருமுறை லிஸ்டரின் உபயோகிக்கும் ஆரோக்கிய நற் பழக்கத்தை இப்போதே துவக்குங்கள்!

வாய் நிறைந்த சுகாதாரத் தூய்மைக்கு வழி: லிஸ்டரின்; இன்றும் என்றும் உங்கள் துணை!



வார்னர்-லாம்பர்ட் பார்மஸூட்டிகல் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யூ.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது).


சின்னத்தை படியுங்கள்
MICO
LICENCE BOSCH
SPARK PLUG

''அந்தப் பாவிதான் இருந்த பாடும் இல்லாமல் செத்தபாடும் இல்லாமல் இழுத்துப் பறித்துக்கொண்டு கிடக்கிறானே! தீபாவளியும் அதுவுமாக அவன் உங்களை எப்படி விட்டு விட்டுப் போவானோ, என்னமோ என்றுதான் இன்றே நான் இந்தப் பட்டாசுகளை வாங்கிக் கொண்டு வந்தேன்; எடுத்துக் கொண்டு போய்க் கொளுத்துங்கள்!'' என்றாள் பாட்டி.

அவ்வளவுதான்!—அடுத்த நிமிஷம் 'புஸ்' என்று சீறிப் பொங்கி வழிந்தது பூவாணம்; 'விர்' என்று பறந்து சென்று வெடித்து விழுந்தது வாண வெடி; 'குப், குப்' என்று கொழுந்து விட்டு எரிந்தது மத்தாப்பு; 'கிரு கிரு' என்று சுழன்று சுழன்று வந்தது சங்குச் சக்கரம்; 'டம், டமார்!' என்று வெடித்தது யானை வெடி; 'பட், படார்!' என்று வெடித்தது ஊசி வெடி!—குழந்தைகளுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை; 'குதி குதி' என்று குதித்துக் கும்மாளம் போட்டன!

ஆயிற்று — பட்டாசும் ஆயிற்று; எல்லோரும் சாப்பிட்டும் ஆயிற்று — இனி தூங்க வேண்டியதுதான் பாக்கி; தன் வாழ்வைத் தானே முடித்துக்கொண்டு விடலாம்....

இப்படி அவர் எண்ணிக் கொண்டிருந்த போது, ''ஏன், அப்பா, நீங்கள் ஒன்றும் சாப்பிடவில்லையா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான் வெங்கடாசலம்.

''கொடு; கடைசியாக உன் கையால் ஏதாவது கொடு!'' என்று கேட்க வேண்டும் போல் தோன்றிற்று அவருக்கு; ஆனால் கேட்கவில்லை — அதற்குப் பதிலாக, ''எனக்கு ஒன்றும் வேண்டாம்; நீ போய்ப் படுத்துக் கொள்!'' என்று சொல்லிவிட்டார் — அவனும் அதற்கு மேல் அவரை வற்புறுத்த விரும்பாமல் போய்ப் படுத்துக் கொண்டு விட்டான்!

விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டு விட்டன; வீட்டை இருள் கவ்விற்று. 'ஙொய்' என்ற சுவர்க்கோழியின் சத்தத்தையும், 'கொர், கொர்' என்ற குறட்டைச் சத்தத்தையும் தவிர வேறு சத்தம் இல்லை.

அதுதான் சமயம் என்று பெரியவர் எழுந்தார்; 'மீட்டர் போர்'டை நோக்கித் தட்டுத் தடுமாறி நடந்தார்.

ஒரு சந்தேகம்; நின்றார்......

அழைப்பதற்கு முன்னால் சென்றால் ஆண்டவன் தன்னை ஏற்றுக் கொள்ள மாட்டாரோ?—அந்தக் கவலை தனக்கு ஏன்? எல்லாவற்றுக்கும் காரணமான அவன்தானே தான் இந்த முடிவுக்கு வருவதற்கும் காரணமாயிருந்திருக்க வேண்டும்?

தீர்ந்தது சந்தேகம்; மேலே நடந்தார்.....

'மீட்டர் போர்டு' கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் கைக்குத் தெரிந்தது — ஆம், தடவிப் பார்த்த கைக்குத்தான்!—அதற்கு மேல் யோசிக்கவில்லை அவர்; 'மெயின் ஸ்விட்ச்'சைத் திறந்து, 'ராமா!' என்று ராம நாமத்தை ஜபித்துக் கொண்டே 'டக்' கென்று கையை வைத்துவிட்டார்!

ஆனால் என்ன ஆச்சரியம்! எந்த விதமான 'ஷாக்'கும் அடிக்கவில்லை அவருக்கு — ஒரு வேளை 'ஆப்'பா யிருக்குமோ?

வராந்தா விளக்கைப் போட்டுப் பார்த்தார்; எரியவில்லை!

அட, கடவுளே! இதற்குத்தானா இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டேன், நான்?—ஏமாற்றத்துடன் திரும்பினார் பெரியவர்!


இருந்தாலும் முயற்சியைக் கைவிடக்கூடாது என்று தோன்றிற்று அவருக்கு — தம்முடைய அறையின் விளக்குக்குரிய 'ஸ்விட்ச்'சைப் போட்டுவிட்டுக் கட்டிலின் மேல் உட்கார்ந்தார்—அது எரிந்ததும் தம்முடைய முயற்சியைத் தொடரலாம் என்ற உத்தேசத்துடன்!

ஆனால் அவர் எதிர்பார்த்ததுபோல் அது எரியவில்லை; அதற்குப் பதிலாகத் தம் வாழ்வைத் தாம் முடித்துக் கொள்ளும்வரை எந்தப் பொழுது விடியக் கூடாது என்று அவர் நினைத்தாரோ, அந்தப் பொழுது விடிந்தது; தீபாவளியும் 'வந்தேன், வந்தேன்!' என்று வந்தது.

''அப்பா! சாஸ்திரத்துக்காக ஒரு துளி எண்ணெய் தொட்டுத் தலையில் வைத்துக் கொள்கிறீர்களா?'' என்று கேட்டுக்கொண்டே கையில் எண்ணெய் நிரம்பிய கிண்ணத்துடன் அவரை நோக்கி வந்தான் வெங்கடாசலம்.

அந்தச் சமயத்தில்......

''ஐயோ, அம்மா! நேற்றுக்கூட நன்றாயிருந்தாயே, நீ! இன்று எப்படி அம்மா போய் விட்டாய்?'' என்ற தங்கத்தின் அழுகுரல் அவன் காதில் விழுந்து, அவனுடைய நெஞ்சைப் பிளந்தது; கையில் இருந்த எண்ணெய்க் கிண்ணத்தை அப்படியே கீழே வைத்துவிட்டு ஓடிப் போய்ப் பார்த்தான் — அபயாம்பாள் இந்த உலகத்தில் இல்லை!



நிமிஷக் கதைகள்

மாம்பலம் ஸ்டேஷனில் எடை போடும் இயந்திரத்துக்கு அருகில் நின்று இரு நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவன் இயந்திரத்தில் பத்துப் பைசா போட்டுத் தன் எடை டிக்கட்டை எடுத்தான். எடையைப் பார்ப்பதற்கு முன் அதிலுள்ள சோதிடத்தில் அவன் நாட்டம் சென்றது.

அதைக் கண்ட ஒருவர் தம் நண்பரிடம் ''அதில் போட்டிருக்கும் சோதிடத்தில் உனக்கு நம்பிக்கை உண்டா?'' என்றுகேட்டார்.

''சோதிடமா இது? சுத்த ஹம்பக்!'' என்றார் மற்றவர்.

''எனக்கும் உன் அபிப்பிராயம்தான்! நாம் இரண்டு பேரும் ஒரு காரியம் செய்வோமா?''

''என்ன?''


''இரண்டு பேரும் சேர்ந்தாற்போல் ஒரே பத்துப் பைசா போட்டு எடை எடுத்துப் பார்ப்போம்! சோதிடம் யாராவது ஒருவருக்குத்தானே போட்டிருக்கும்? அப்பொழுது அதில் போட்டிருப்பது பொய் என்றுதானே ஆகும்?''

''கரெக்ட்!'' என்று கூறி இரண்டு பேரும் ஏக காலத்தில் ஏறி நின்றார்கள்.

''இருவரில் ஒருவர் நல்லவர். மற்றொருவர் மாறானவர். நம்பாதே!'' என்று சோதிடம் கூறியது.

நண்பர்கள் இருவரும் ஒருவரை மற்றவர் எந்த நோக்கங் கொண்டு பார்த்திருப்பார்களோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்!





பெரிய கம்பெனி ஒன்றில் நாற்பதாண்டுகளாக ஒருவர் அக்கவுண்டண்டாக வேலை பார்த்து வந்தார். தினமும் அலுவலகத்துக்கு வந்ததும் முதல் வேலையாகத் தமது மேஜையின் அடி டிராயரைத் திறந்து ஒரு கணம் ஏதோ பார்ப்பார். அப்புறம் அந்த டிராயரைச் சாத்திப் பூட்டி விடுவார்.

அந்த அலுவலகத்து நிர்வாகிகளுக்கும் ஆடிட்டர்களுக்கும், மற்றச் சிப்பந்திகளுக்கும் அவரது இந்தச் செய்கை விசித்திரமாக இருக்கும். ஆனால் என்னவென்று கேட்கச் சங்கடமாயிருக்கும். அக்கவுண்டண்ட் ஏதோ கடவுள் படத்தை வைத்து வேலை தொடங்குவதற்கு முன் பிரார்த்தித்துக் கொள்ளுகிறாராக்கும் என்று அவர்கள் எண்ணினர்.

திடீரென்று அந்த அக்கௌண்டண்டை ஒரு நாள் ஆண்டவன் தன்னிடம் அழைத்துக்கொண்டு விட்டான். எனவே, சில நாட்களுக்கெல்லாம் அந்த டிராயரைத் திறந்து பார்த்தனர். அதில் ஒரு காகிதக் குறிப்பு இருந்தது. அவர் அதுவரை தாம் கையாடிய பணத்துக்குப் பைசா விடாமல் கணக்கு வைத்திருந்தார். 'என்னே நேர்மை!' என்று புகழத்தானே வேண்டும் அவரை!

*

''ஏனப்பா? பிறரிடம் கை நீட்டிப் பிச்சை கேட்க உனக்கு வெட்கமாயில்லே?''

பிச்சைக்காரன்: வெட்கம் சோறு போடுமா, சாமி? ஒரு தரம் பிச்சை கேட்காமலே கையை நீட்டினதற்குக் கிடைத்த பலன் என்ன தெரியுமா? திருடன் என்கிற பட்டமும் இரண்டு வருடக் கடுங் காவலும் கிடைச்சுதுங்க!

அன்றுதான் அவன் அந்தச் செருப்புக் கடைக்குப் புதிதாக வேலைக்கு வந்திருந்தான். ஒரு கிராக்கி வரவே வெகு ஆர்வத்தோடு வியாபாரத்தைக் கவனித்தான். பதினெட்டு ரூபாய்ச் செருப்பைக் கொடுத்து விட்டுப் பதினாறு ரூபாயை வாங்கிக் கல்லாவில் போட்டான்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த கடை முதலாளிக்குக் கோபம் கோபமாக வந்தது. ''உன்னைப் போன்ற ஆட்களை வேலைக்கு வைத்துக் கொண்டால், வியாபாரம் உருப்பட்டாற் போல்தான்!'' என்றார்.

''ஏன், எசமான்! என்ன ஆயிற்று?'' என்றான் அந்த ஆள்.

''பதினெட்டு ரூபாய்ச் செருப்பைப் பதினாறு ரூபாய்க்குக் கட்டிக் கொடுத்து விட்டாயே!'' என்றார் முதலாளி.

''மீதி நாலு ரூபாய் சாயந்திரம் வந்து விடும்!''

''உனக்கு வாங்கினவரைத் தெரியுமா?''

''தெரியாதுங்க!''

''அப்ப எப்படித் தைரியமாய் ரூபாய் வரும்னு சொல்றே!''

''நீங்க பார்த்துக்கிட்டிருங்களேன், வருதா வரலையான்னு! அப்படி வரலேன்னா என் சம்பளத்திலே அந்த நாலு ரூபாயையும் பிடிச்சுக்குங்க!''

சாப்பாட்டு நேரத்துக்குக் கடை மூடுவதற்குள்ளாகவே பணம் வந்து விட்டது. முதலாளிக்கு ஒரே ஆச்சரியம்! உண்மையில் அந்த ஆள் செய்திருந்த தந்திரம் என்ன தெரியுமா? இரண்டு வலது கால் செருப்புக்களை ஜோடியாகக் கட்டிக் கொடுத்திருந்ததுதான்!



பத்தினிக்கோட்டம்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் இருபத்தேழு

விஷக் கனல்

சுட்டுமரத்தை விட்டுக் கீழே குதித்தான் கோவிந்தவர்மன். அவனுக்குப் பின்னால் இறங்கிய ஆபத்துதவி சம்புவராயன், ஆற்றோரமாகக் கட்டுமரத்தை இழுத்துப் போட்டுவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தவாறு அவனைப் பின் தொடர்ந்தான்.

வேகவதி ஆறு புதுப் புனலெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. முழுக்குத் துறைக்கு மேலண்டைப் புறமாக ஆற்றின் மறுகரையோரம் விரைந்து நடந்து கொண்டிருந்த கோவிந்த வர்மன், ''எங்கே அவரைக் காணோம்? அவர் குறிப்பிட்டுச் சொன்ன இடம் இது தானா, அல்லது இன்னும் மேலே போக வேண்டுமா?'' என்று மெல்ல முனகியவாறு தயங்கி நின்றான்.

''குறிப்பிட்ட இடத்துக்கே வந்து விட்டீர்கள், இளவரசே!''

சடாரென்று திரும்பிய அவன் ஒரு நாணற்புதரை நீவிக் கொண்டு கரை மேட்டுக்குத் தாவிச் சென்றான். அங்கே கருவேல மரமொன்றின் அடியில் கவலையும் சோர்வுமாக அமர்ந்திருந்தார் பழையாறைச் சோழர்.

மகிழ்ச்சியும் நிம்மதியுமாக அவரைப் பார்த்துக் கொண்டே மணல் சரிவில் போய்த் துவண்டு உட்கார்ந்தான் கோவிந்தவர்மன். பழையாறைச்சோழரின் கவனம் அவன் மீது பதியவில்லை; அவனுக்குப் பின்னால் நாணற் புதரை விலக்கிக் கொண்டு வந்த ஆபத்துதவி வீரனை ஆவலுடன் பார்த்து, ''சம்புவராயா! என் அன்பு மகள் இளங்கோப்பிச்சி இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து விட்டாயா?'' என்று அவசரமாகக் கேட்டார்.

''சோழ இளவரசியார் நன்னலத்தோடு இருக்கிறார், பிரபு!'' என்று உள்ளார்ந்த உற்சாகத்துடன் சொன்ன சம்புவராயன் சற்றுத் தயங்கி விட்டுத் தணிந்த குரலில் மேலும் கூறினான்: ''நாம் எதிர்பார்த்தபடியே அவர் இப்போது ஆந்திர இளவரசியுடன்தான் தங்கி யிருக்கிறார். தெய்வாதீனமாகச் சளுக்கிய இளவரசனிடமிருந்து தப்பிய அவ்விருவரும் பெருவளநல்லூரைவிட்டு இந்தத் திருப்பருத்திக்குன்றத்துச் சமண சங்கப் பள்ளிக்குச் சொந்தமான ஓர் இல்லத்தில் வந்து தங்கியிருக்கிறார்கள்.''

மகிழ்ச்சி நிலவிய பழையாறைச் சோழரின் முகத்தில் திடீரென்று வெறுப்பும் கோபமும் புகைந்தன. ''அந்தச் சதிகாரப் பெண்ணோடு இவள் ஏன் போய்த் தங்கி யிருக்கிறாளாம்?'' என்று அதட்டலாகக் கேட்டார் இவர்.

சம்புவராயன் திருதிரு வென்று விழித்துக் கொண்டு மௌனமாக நின்றான்.

''இளங்கோப்பிச்சியை நீ நேரில் சந்திக்க வில்லையா?''

''இல்லை, பிரபு! நம் இளவரசியாரின் சிவிகை தூக்கிகளில் ஒருவனை இரகசியமாகப் பார்த்து இவ்விவரங்களைக் கேட்டு அறிந்தேன். கடமையிலிருந்து தவறிய என் மீது இளவரசியார் மிகுந்த கோபத்துடன் இருக்கிறாராம். அதனால் அவரை நேரில் சென்று சந்திக்க எனக்குத் துணிவு வரவில்லை.....''


''ஓகோ! என் கட்டளையை மீறிப் பெருவளநல்லூருக்குப் போனதால் தான் அம்மாதிரி சங்கடங்கள் ஏற்பட்டன என்பதை அவள் மறந்து விட்டாளோ?'' என்று சினத்துடன் இரைந்து கேட்ட பழையாறைச் சோழர் ''ஹூம்! என் வயிற்றில் பிறந்த பெண்ணே எனக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவாள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!'' என்றார் கசந்த குரலில்.

தலைகுனிந்து உட்கார்ந்திருந்த கோவிந்த வர்மன் தன்னை மீறிய ஒரு துடிப்புடன் நிமிர்ந்து, ''வருத்தப்படாதீர்கள், ஐயா! என் இளங்கோப்பிச்சியின் நோக்கம் நமக்குப் பாதகமாக இராமல் சாதகமாகவும் இருக்கலாம். ஆந்திர இளவரசியின் எண்ணத்தை அறிந்து அவளைப் பல்லவமன்னரின் உறவிலிருந்து பிரித்து விரட்டி

யடிப்பதற்காக அவனோடு போய்த் தங்கியிருக்கலாம். பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விஷயம் இது'' என்று மெல்லச் சிரித்துச் சொன்னான்.

பழையாறைச் சோழர் இதை ஒப்புக்கொள்ள மறுப்பவர் போல் வேகமாகத் தலையசைத்தவாறு சிறு பொழுது பேசாதிருந்து விட்டுப் பிறகு சட்டென்று திரும்பி, ''அது சரி, இளவரசே! நேற்றுக் காலை இந்நேரத்துக்கு இங்கு வருவதாகச் சொல்லிச் சென்ற நீங்கள் இவ்வளவு தாமதமாக வந்திருக்கிறீர்களே, ஏன்?'' என்று கண்களை இடுக்கிக் கொண்டு கேட்டார்.

கோவிந்தவர்மனின் முகத்தில் திடீரென்று ஆத்திர உணர்ச்சி குமுறியது. ''ஆம், ஐயா! அதற்கு ஒரு முக்கிய காரணம் இருக்கிறது'' என்று அடித்தொண்டையில் கரகரத்த அவன் சுற்று முற்றும் பார்த்து விட்டுச் சற்றே அருகில் நெருங்கிக் குரோதக் குரலில் படபடத்தார்: ''சேதியக் கலைஞர் பரவாதி மல்லர் கூரம் கிராமத்தில் தமக்கென ஓர் இல்லத்தை அமைத்து வருகிறார் என்றும், அதற்குத் தேவையான நிலமும் பொருளும் பல்லவ மன்னரே முற்றூட்டாக அளித்திருக்கிறார் என்றும் ஏற்கனவே நாம் கேள்விப்பட்டோம் அல்லவா? அது எவ்வளவு தூரம் உண்மை என்பதை அறிவதற்காக நேற்று கூரத்துக்குப் போயிருந்தேன். அங்கு போன பிறகுதான், அந்தப் பேராசைக்கார மனிதர் தமக்குக் கிடைத்த முற்றூட்டு சாஸனத்தை எப்படியெல்லாம் துஷ்பிரயோகம் செய்திருக்கிறார் என்பது எனக்குப் புலனாகியது. ஒரு சேதியக் கலைஞனின் அந்தஸ்துக்கு ஏற்ற வகையில் அமைக்கப் பெறும் இல்லமாகவே அது தோன்றவில்லை; பேரரச ஒருவனுக்காக நிர்மாணிக்கப் பெறும் பெரிய மாளிகையோ என்றுதான் நினைக்க வேண்டியிருந்தது.''



''பாவம், அந்தப் பரவாதிமல்லரின் மேல் பல்லவ இளவரசருக்கு எப்போதுமே ஒரு கசப்பு இருந்து வருவது ஏன் என்றே எனக்குப் புரியவில்லை!'' என்று குறும்பாகக் கூறிச் சிரித்த பழையாறைச் சோழர் சட்டென்று முகத்தைச் சுளித்துக் கொண்டு, ''ஆமாம்; அப்படி என்ன அத்தனை பிரமாதமான மாளிகை அங்கே கட்டப்பட்டிருக்கிறதாம்?'' என்று அலட்சியமாக வினவினார்.

''அது பிரமாதமான மாளிகைதான் என்பதில் சந்தேகமில்லை, ஐயா! ஆனால் அதை நான் பார்க்கவில்லை....''

''கண்ணால் பார்க்காமல் எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறீர்கள், இளவரசே?''

''நூற்றுக்கணக்கான சிற்பிகள், கட்டடக் கலைஞர்கள்; ஆயிரக் கணக்கான கல் தச்சர்கள், சிற்றாட்கள்; மலை மலையாகக் கருங் கற்கள், ஓடுகள், சுண்ணக் கலவைகள்—இவ்வளவையும் சேர்த்துப் பார்த்த போது அப்படித்தான் என்னால் ஊகிக்க முடிந்தது. அது மட்டுமல்ல; அந்த மாளிகை கட்டும் செலவுக்காக இதுவரை பல்லவ அரசாங்கத்தின் பொக்கிஷம் பாதியளவு கரைந்துபோய் விட்டிருக்குமோ என்றும் கருதத் தோன்றியது.''

''நல்ல வேடிக்கை! கட்டடம் கட்டக் கருங் கற்கள் உபயோகமா? இது என்ன, பைத்தியக்காரத்தனம்?''

''எனக்கும் அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது, ஐயா!''

''நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அந்த இல்லத்துக்கான அஸ்திவாரமே இன்னும் அங்கு எழுப்பப்படவில்லை போல் இருக்கிறதே?''

''மாளிகை முடிவடையும் தறுவாயில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்.''

''இளவரசே, நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''ஆம், ஐயா! அந்த மாளிகை கட்டும் வேலை முக்கால் பங்கு முடிவடைந்து விட்டதாம்; ஆனால் நான் அதைப்பார்க்கவில்லை; பார்க்கவும் முடியவில்லை.''

பொறுமை யிழந்த பழையாறைச் சோழர் அவனைக் கூர்ந்து நோக்கினார்.

''உண்மைதான், ஐயா! அந்த மாளிகையின் தோற்றத்தையோ, அமைப்பையோ யாரும் அறிய முடியாதபடி பிரும்மாண்டமான கூரைப் பந்தலொன்று போடப் பெற்று உள்ளுக்குள்ளேயே இரகசியமாக வேலை நடந்து வருகிறதாம். மாளிகை கட்டி முடியுமுன் அதை எவரும் பார்க்கக் கூடாது என்பதற்காகவே அவ்வாறு மறைப்புக் கூரை போடப் பெற்றிருக்கிறதாம். அங்கு வேலை செய்கிறவர்களிடம் அம்மாளிகையைப் பற்றிய எந்த ஒரு சிறு விவரத்தையும் வெளியிடக் கூடாதென்ற உறுதி மொழி வாங்கப் பட்டிருக்கிறதாம். அதனால் அவர்களைத் தவிர அந்தக் கூரைக் கொட்டகைக்குள் வேறு யாரையுமே அனுமதிக்கப்படுவதில்லையாம்'' என்று சூர்க்கமான குரலில் கூறினான் கோவிந்தவர்மன்.

''என்ன இது விந்தை? ஏன் இந்த இரகசிய ஏற்பாடுகள்?''

''நானும் அதைத்தான் கேட்கிறேன், ஐயா! ஒரு சேதியக் கலைஞர் அரசாங்கத்தின் உதவி பெற்றுத் தம் சொந்தக் குடியிருப்புக்காகக் கட்டிக் கொள்ளும் இல்லத்தை இத்தனை இரகசியப்படுத்தி மறைத்து வைக்க வேண்டிய காரணம் என்ன?''

நெற்றி நரம்புகள் புடைத்துப் பின்னலிட ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவராய்ச் சில விநாடி மௌனமாயிருந்த பழையாறைச் சோழர் திடுமெனத் தலை நிமிர்ந்து, ''ஆமாம்; இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?, இளவரசே?'' என்று கரகரத்த குரலில் கேட்டார்.

''பல்லவ மன்னர் அளித்த முற்றூட்டு சாஸனத்தைக் கொண்டு நியாயத்துக்குப் புறம்பான வகையில் அரசாங்கப் பொக்கிஷத்திலிருந்து ஏராளமான பொன்னும் பொருளும் பெற்று அரண்மனை போல் கட்டி வரும் தம் இல்லத்தை அதன் ஆரம்ப நிலையிலேயே பொது மக்களும் அதிகாரிகளும் பார்க்க நேர்ந்தால் ஏதேனும் எதிர்ப்புக் கிளம்பித் தம் மோசடிச் செயல் வெளிப்பட்டுக் கட்டிட வேலையும் தடையாகி விடுமோ என்று அஞ்சித்தான் அந்தப் பரவாதி மல்லர் அப்படி மூடுமந்திரம் செய்து ரகசியமாகக் காரியத்தை நடத்திக் கொண்டு வருகிறார் என்று நினைக்கிறேன்!'' என்றான் கோவிந்த வர்மன் கோபக் குமுறலுடன்.

''ஓ.... நான் அதைக் கேட்கவில்லை, இளவரசே, அதைக் கேட்கவில்லை!'' என்று கூறிக் கடகடவெனச் சிரித்த பழையாறைச் சோழர் சட்டென்று எழுந்து நின்றார்.

''வேறு எதைப் பற்றிக் கேட்கிறீர்கள்?'' என்றவாறு கோவிந்த வர்மனும் எழுந்தான்.

''நமக்குக் கிடைத்திருக்கும் இந்த அரிய வாய்ப்பை எப்படிப் பயன்படுத்திக்கொள்ள நினைக்கிறீர்கள் என்று தான் கேட்டேன்!''

உங்கள் கேசம் உதிருகிறதா?



இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது. ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.

இளமையில் வழுக்கை

இக்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்ருக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினுல் நயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-2 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ், பீசாம் (இந்தியா) பிரை. லிட்., பீசாம் ஹவுஸ், மாஹிம், பம்பாய்—16.

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது



SP/1/P/7/63

''அரிய வாய்ப்பா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?''


''புரியும்படி சொல்கிறேன். கேளுங்கள் இளவரசே!'' என்று குரூர மான நகைப்புடன் சொன்ன பழையாறைச் சோழர் மேலும் கூறினார்: ''ஆந்திர இளவரசி உத்தமசீலியைப் பல்லவ மன்னர் பரமேசுவர மன்னர் மணந்து கொண்டு அவளைப் பட்டத்து ராணியாக்கக் கூடாது என்பதற்காகக் குடிமக்களிடம் நாம் இதுவரை எடுத்துக் கூறிவரும் விஷயம் ஒன்றே ஒன்றுதான். அதாவது, சமண சமயத்தைச் சார்ந்த ஒருத்தி பல்லவப் பேரரசியானால் சைவ சமயத்துக்கு ஆபத்து ஏற்படும் என்றும் அதனால் சளுக்கியர்கள் மீண்டும் பல்லவநாட்டை எளிதில் கைப்பற்றிக் கொள்வார்கள் என்றும் பிரசாரம் செய்து வருகிறோம். இந்தப் பிரசாரத்துக்கு ஓரளவு பலன் கிடைத்தும் வருகிறது. பரமேசுவர வர்மரின் திருமண முடிவை எதிர்ப்போருக்கும் ஆதரிப்போருக்குமிடையே சிறு சிறு கலகங்கள் மூண்டு வருகின்றன. விடுதலைப் போருக்கு முன் ஒரு தாய் வயிற்றுச் சகோதரர்களைப் போல் ஒற்றுமையாக இருந்து வந்த சமணர்களும், சைவர்களும் இப்போது இந்த விஷயத்தில் பிளவுபட்டுப் பிணங்கி நிற்கிறார்கள். பழைய வேற்றுமைகளும் வெறுப்புக்களும் மறுபடியும் மெல்ல மெல்லத் தலை தூக்குகின்றன. ஆனாலும் நாம் எதிர் பார்த்த அளவுக்கு அத்தனை பலமான எதிர்ப்பு இன்னும் உருவாகி விடவில்லை. அதனால் பல்லவ மன்னர் ஆந்திர இளவரசியை மணந்து கொள்ளலாம் என்ற நிலைமையும் அப்படியே இருந்து வருகிறது. இதற்குக் காரணம், இதுவரை நாம் ஒரே ஒரு விஷயத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு அதையே திருப்பித் திருப்பிப் பிரசாரம் செய்து வருவதுதான் என்று நினைக்கிறேன். 'சைவ சமயத்துக்கு ஆபத்து' என்ற அந்த ஒரே பூச்சாண்டியை —இனியும் தொடர்ந்து காட்டி வந்தால் நம் நோக்கம் நிறைவேறாது போய்விடலாம். எனவே, நம்முடைய பிரசாரத்துக்கு மூல பலமாக வேறு சில புதிய விஷயங்களையும் சேர்த்துக் கொண்டாக வேண்டும். அதற்குத் தோதாக இந்தக் கூரம் மாளிகையின் இரகசிய நிர்மாண விஷயம் இப்போது கிடைத்திருக்கிறது. இதை

விஞ்ஞான விநோதம்

காகித உடைகள்

மேல் நாடுகளில் காகிதங்களைக் கொண்டு செய்யப்பட்ட காலர்களும், கை மடிப்புக்களும், மூன்று தலைமுறைகளுக்கு முன்னர் மிகவும் பிரபலமாயிருந்தன. பின்னர் ஏகக்குட்டைகள், டவல்கள், ஐஸ்கிரீம் கப்கள் ஆகியவை காகிதங்களைக் கொண்டே தயாரிக்கப்பட்டன. இன்று முன்னேற்றமடைந்த நாடுகளில் வேலைக்குப் போதிய ஆட்கள் கிடைக்காத நிலையில் முக்கியமாக ஆஸ்பத்திரிகள், ஹோட்டல்கள் முதலியவைகளில் ஒரு தடவை உபயோகித்த பின் தூர எறிந்துவிடக் கூடிய காகிதப் பொருள்கள் - மேஜை விரிப்புகள், தலையணை உறைகள், போர்வைகள் போன்றவை மிகவும் அதிகமாக உபயோகிக்கப்படுகின்றன. துணி வெளுத்து வர ஆட்கள் தேவையில்லை; மிருதுவாக இருக்கின்றன. எளிதில் கிழிவதுமில்லை. டாக்டர்களும் ஆராய்ச்சியாளரும் அணியும் கோட்டுகள்கூடக் காகிதத்தினாலேயே தயாரிக்கப்படுகின்றன.

காகிதத்தினாலான நீச்சல் உடை சீக்கிரமே உபயோகத்துக்கு வந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆண்களுக்குக் காகிதச் சட்டைகள் மிகவும் சௌகரியமாக இருக்கும். இவைகளில் கசுக்கம் விழுவதில்லை. அசுத்தமாகி விட்டால் தூக்கி எறிந்துவிடலாம். ஒருவருக்கு வருடத்துக்குப் பத்துப் பதினைந்து காகிதச் சட்டைகள் இருந்தால் போதுமானது. காகித உடைகள் தயாரிக்கும் துறையில் மேற்கு ஜெர்மனி வேகமாக முன்னேறி வருகிறது.



ஓர் அரிய பிரசாரக் கருவியாக நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.''

வியப்பும் பிரமிப்புமாக அவரைப் பார்த்துக் கொண்டு நின்ற கோவிந்த வர்மன், ''சொல்லுங்கள் ஐயா! இந்த விஷயத்தை நமக்குச் சாதகமாக எப்படிப் பயன்படுத்த நீங்கள் நினைக்கிறீர்கள்?'' என்று மிகுந்த துடிப்புடன் வினவினான்.

மோவாயை வருடியவாறு சில கணம் மௌனமாயிருந்த பழையாறைச் சோழர் வன்மச் சிரிப்புடன் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்: ''கவனமாகக் கேளுங்கள், இளவரசே! சேதியக் கலைஞர் பரவாதி மல்லர் ஒரு சமணர். ஆதிமுதலே அவரது அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமாகியிருப்பவள் ஆந்திர இளவரசி உத்தமசீலி. இவ்விருவரும் இங்குள்ள திரமிள சமண சங்கத் தலைவர் சமந்தபத்திரரிடம் மிகுந்த பக்தியும் மதிப்பும் வைத்திருப்பவர்கள். இவர்களைத் தவிர இப்போது பல்லவ மன்னரின் முழு நம்பிக்கைக்கும் உரியவராயிருப்பவரான சந்திரலேகைச் சிற்றரசர் பெரும்பிடுகு முத்தரையரும் சமண சமயத்தைச் சார்ந்தவரே. அவருக்குப் பல வகையிலும் உதவியாயிருக்கும் ஆபத்துதவி வீரனை இளங்காரிக்குடையானும் ஒரு சமணன்தான்.. ஆக, இந்தச் சமணர்களெல்லாம் ஒன்று சேர்ந்து சைவரான பரமேசுவரவர்மரை ஒழித்துக் கட்டிவிட்டுப் பல்லவ நாட்டைக் கைப்பற்றிக் கொள்ளச் சதித் திட்டம் போடுகிறார்கள் என்றும், அவர்களுடைய அந்தச் சதி வேலைக்கு உதவுபடியாக இருக்கவே கூரம் கிராமத்தில் பரவாதி மல்லர் ஒரு மாளிகையை இரகசியமாக மூடி மறைத்துக் கட்டி வருகிறார் என்றும், இதற்கெல்லாம் தலைமை தாங்கி நிற்பவள் ஆந்திர இளவரசி உத்தமசீலிதான் என்றும், ஆகவே அவளைப் பரமேசுவரவர்மர் இருமணம் செய்து கொள்வதைப் பலமாக எதிர்க்கவேண்டும் என்றும் ஊர் ஊராகப் போய் நாம் தீவிரப் பிரசாரம் நடத்தவேண்டும். இந்தப் புதிய பிரசாரத்தினால் மக்களிடையே பீதியும் குழப்பமும் வெறுப்பும் கோபமும் எதிர்ப்பும் கண்டனமும் எளிதில் உருவாகிவிடும். பிறகு அவை பரமேசுவர வர்மரின் திருமண முடிவை மாற்றி, ஆந்திர இளவரசியை இந்நாட்டை விட்டே விரட்டியடிக்கும்படி செய்துவிடும்.''

தான் அறிந்து வந்து சொன்ன ஒரு சிறு விஷயத்தைக் கொண்டு இவ்வளவு சீக்கிரம் இத்தனை பயங்கரமானதொரு பிரசாரத் திட்டத்தை அவர் உருவாக்கி வெளியிட்டதைக் கேட்டு அப்படியே வெலவெலத்து விட்டான் கோவிந்த வர்மன்.

ஆனால் பழையாறைச் சோழரோ வெகு அலட்சியமாகத் தம் தோளைக் குலுக்கிக் கொண்டு நிமிர்ந்து, ''ஹூம்! நம்முடைய நோக்கம் நிறைவேற இந்தப் பிரசாரத் தந்திரங்களை மட்டுமே நான் நம்பிக் கொண்டிருப்பதாக நினைத்துவிடாதீர்கள் இளவரசே! அதற்கெல்லாம் மேலாக இன்னொரு திட்டமும் இருக்கிறது! அதுவே இறுதியாகக் கைக்கொள்ளப் போகிற பயங்கரத் திட்டம்!'' என்றார் ஆத்திரம் செறிமிய அடித் தொண்டையில்.

இந்தச் சமயம் அவர்கள் நின்றிருந்த கருவேல மரத்துக்குப் பின்னாலிருந்து ஏதோ 'சலசல'வென்ற சத்தம் கேட்டது. பிறகு ஆற்றில் 'தொபுகடீ'ரென்று குதிக்கும் ஒலியும் எழுந்தது.

திடுக்குற்றுத் திரும்பிய பழையாறைச் சோழரும் கோவிந்த வர்மனும் பரபரப்புடன் ஓடிப் போய், நாணல் புதரை நீவிக் கொண்டு ஆற்றுப் பக்கம் எட்டிப் பார்த்தனர்.

அவர்களுக்கு நேர் எதிரே ஆற்றின் நீர் மட்டத்தில் யாரோ பாய்ந்து குதித்ததன் அறிகுறியாக நுரைக் குமிழ்களும், வளையங்களும் மட்டுமே கொந்தளித்துச் சுழல்வது தெரிந்தது.

அத்தியாயம் இருபத்தெட்டு

'அதோ, வருகிறார்!'

உத்தமசீலியின் பொறுமையை இன்று எப்படியும் சோதித்துப் பார்த்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டாற்போல் நேரம் நத்தையாக ஊர்ந்து கொண்டிருந்தது.

அப்படியும் அவள் நொடி நொடியாக எண்ணி நான்கு நாழிகை நேரத்தைப் பொறுமையாகவே கழித்துவிட்டாள். அதற்கு மேல் பொறுமையைக் கடைப்பிடிப்பதுதான் அவளுக்குப் பெரும்பாடாகி விட்டது. காரணம், அவள் எதிர்பார்த்ததுபோல் சமண சங்கப் பள்ளியிலிருந்து பல்லவ மன்னன் பரமேசுவரவர்மன் அவளைப் பார்ப்பதற்காக இந்த இல்லத்துக்கு இன்னும் வரவில்லை! அத்துடன் விடி



காசு பத்திரம்



ரூபாய் அலட்சியம்

"கடுகு போன இடம் ஆராய்வார்
பூசனிக்காய் போன இடம் தெரியாது"

— இது பழமொழி

காசை மாத்திரம் பத்திரப்படுத்தி ரூபாயை அலட்சியம் செய்வது தவறல்ல. ஆனால் காசு, ரூபாய் இரண்டையும் பத்திரப்படுத்துவது — சேமிப்பது — இன்றைய சூழ்நிலையில் விவேகம் மட்டுமல்ல, முக்கியமும் கூட. உங்கள் சக்திக்கேற்ப சேமிக்க யோசனை கூறி வழிகாட்டுபவர்கள்



ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர்

தலைமை ஆபீஸ்: அவென்யூ ரோடு, பெங்களூர் - 9

கிளைகள்: முக்கிய நகரங்களில்

ஜெனரல் மானேஜர்: ஏ. கிருஷ்ணமூர்த்தி

சிந்தால்
வருஷங்கள்





அன்ன
நடை பயிலும்
பைங்கொடி

மாயக்கன்னியோவென மயக்கும் வசீகரம்! அன்ன நடை பயிலும் இப்பைங் கொடியின் அழகில் ஒரு ரகசியமிருக்கிறது. **ஜி-11 சேர்ந்த ஸிந்தால் சோப்பை அவள் வழக்க மாக உபயோகிக்கிருள்.** அது அழகுக்கு அழகூட்டுவது: துர்நாற்றத்தை அகற்றி மென்மையான சருமத்திற்கு, நறுமண மூட்டுவது.

உலகெங்கும் அழகிய பெண்மணிகளும், அவர்கள் விரும்பும் ஆண்களும் ஜி-11 சேர்ந்த சோப்புகளையும் அழகு சாதனங்களையுமே விரும்புகிருர்கள். ஜி-11 உபயோகப்படுத்துவதற்கு இந்தியாவில் கோத்ரெஜ் பிரத்தியேக உரிமை பெற்றுள்ளார்கள்.



வியர்வை நாற்றத்தைப் போக்கி, எழிலுடன் விளங்கச்செய்யும் சோப்

மிகுந்த வனப்பிற்கும், பூரணப் பாதுகாப் பிற்கும் இனிய மணங்கமழும் வியர்வை நாற்றத்தைப் போக்கி ஆறுதல் அளிக்கும் **ஜி-11** அடங்கியுள்ள கோத்ரெஜ் **சிந்தால்** டாய்லெட் பவுடர் உபயோகியுங்கள்.

கோத்ரெஜ் **ஹேர்டானிக்** கிலும் **ஜி-11** அடங்கியுள்ளது.

Godrej கோத்ரெஜ்

சோப்புகளில் முதன்மையான பெயர்

CT.3A.8/62 (8" x 5") TAM

யத்சாமப் போதில் வெளியே போன இளங்கோப்பிச்சியும் திரும்பி வரவில்லை!

'ஆமாம்; அவர்களுடைய வருகைக்காக இனி காத்திருக்க முடியாது. நானே அவர்களைத் தேடிப் போக வேண்டியதுதான்.' ஆந்திர இளவரசி திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தாள்.

அவசரமாகத் தன் ஆடைகளைத் திருத்திச் சரி செய்து கொண்டு வெளியே புறப்படத் தயாரான அவள் மனத்தில் சட்டென்று ஒரு கேள்வி எழுந்தது. முதலில் பல்லவ மன்னரைப் பார்க்கப் போவதா? அல்லது இளங்கோப்பிச்சியைத் தேடிச் செல்வதா?

இந்தக் கேள்விக்கு அவள் உடனே ஒரு முடிவைத் தேர்ந்தெடுத்துவிட்டாள்: 'பல்லவ மன்னரைப் பார்க்க முதலில் சமணப் பள்ளிக்குப் போவது; பிறகு இளங்கோப்பிச்சியைத் தேடி அழைத்துவர வேகவதி ஆற்றங்கரைக்குச் செல்வது!'

உற்சாகமாக ஒரு துள்ளுத் துள்ளி வெளியே விரைந்து செல்லக் காலெடுத்தவள் ஏதோ ஒன்றால் தடுக்கப்பட்டவள்போல் தடுமாறி நின்றாள்.

'சமணப் பள்ளிக்கு நான் எப்படிப் போவேன்? கடந்த சில வாரங்களாக அங்கு போவதை நிறுத்தி விட்டேனே!'

உத்தமசீலியின் உடல் குப்பென்று வியர்த்துக் கொட்டியது. முகமோ வெளுத்துச் சிறுத்தது. தன்னை மீறிய ஒரு நடுக்கத்துடன் பின்னால் நகர்ந்த அவள், சடாரென்று பாய்ந்து போய்க் கருநீல வண்ணமான மெல்லிய பட்டுத் துகில் ஒன்றை எடுத்துத் தன் பூமேனியை போர்த்துக் கொண்டு பளிங்குச் சட்டத்தின் அருகில் சென்று எட்டிப் பார்த்தாள். சாம்பிச் சிறுத்திருந்த அவளது முகம் மலர்ந்தது.

பரபரப்புடன் வெளியே வந்து முகப்பு வாயிலைக் கடந்து சமணப் பள்ளிக்குச் செல்லும் தோட்டத்துப் பாதையில் இறங்கி, இரண்டடி எடுத்து வைத்தவள் அதிர்ச்சியுற்று நின்று அவசரமாகத் தன் பார்வையை மேலே உயர்த்தினாள்.

எதிரே, மிகப் பெரிய பூஞ்சோலை ஒன்றின் நல் எளிமையும் எழிலுமாக அமைந்திருந்த சமண சங்கப் பள்ளியிலிருந்து அப்போதுதான் வெளியே வந்த பல்லவ மன்னன் பரமேசுவரவர்மன், சங்கத் தலைவர், சமந்தபத்திரரிடமும், மற்றத் துறவிகளிடமும் விடைபெற்றுத் தன் குதிரை மீதேறிப் புறப்பட ஆயத்தமானான்.

இந்தக் காட்சியைக் கண்ட உத்தமசீலியின் உடலும் உள்ளமும் குறுகுறுத்தன. 'அதோ, அவர் வருகிறார்! என்னைப் பார்க்கத்தான் வருகிறார்.'

குபுக்கென்று குமுறி எழுந்த நாணம் அவளைப் பின்னுக்குப் பிடித்து இழுத்தது. மான் குட்டி போல் சடாரென்று துள்ளித் திரும்பித் தன் இல்லத்தை நோக்கி ஓடிய அவள் முகப்பு வாயில்படி மீது ஏறி நின்று கொண்டு ஆவலுடன் நிமிர்ந்து நோக்கினாள்.

என்ன ஆச்சரியம்! பரமேசுவர வர்மனின் புரவி அந்த இல்லத்தைக் கடந்து வெகு தூரத்துக்கப்பால் போய்ப் புழுதிக் கூடாரத்தில் மறைந்தது.

உத்தமசீலியால் இந்த ஏமாற்றத்தைத் தாளவே முடியவில்லை. கண்கள் கலங்கி இருண்டன. கால்கள் தள்ளாடித் துவண்டன. உலகமே சுழல்வது போன்ற பிரமை. மயக்கமுற்ற நிலையில் தட்டுத் தடுமாறிக் கீழே சாயப்போன அவளை, மென்மையான இரு கரங்கள் தாங்கிப் பிடித்தன.

அவள் மெல்லக் கண் திறந்து பார்த்தாள். தெப்பமாக நனைந்த ஆடையணி மணிகளுடன் வெடவெடத்துக்கொண்டிருந்த சோழ இளவரசி இளங்கோப்பிச்சிதான் அவளை அப்படி அன்புடன் தாங்கிப் பிடித்துக்கொண்டு நின்றிருந்தாள்.

(தொடரும்)


பாலின் குணங்கள் அடங்கியது...
CFY-8-TAM
Cadbury's
MILK
CHOCOLATE
CADBURY'S MILK
காட்பரீஸ்
மில்க் சாக்கலேட்
மிட்டாய் மட்டுமல்ல... ஒரு உணவும் கூட!

தியாகியின் நேர்மை

திரு மகாவீர் தியாகி அவர்கள் ஜெய்ப்பூர் அ. இ. கா. க. கூட்டத்தில் பேசியுள்ள பகுதிகளைப் பத்திரிகைகளில் படிக்கும்போது சுதந்திரக் கட்சியின் கொள்கை விளக்கத்தைத்தான் படிக்கிறோமோ என ஐயுறுகிறோம். அவர் பேசுகையில், ''காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பீடம் மாகாண முதல் அமைச்சர்களின் விவகாரங்களின் ஒவ்வொரு கட்டத்திலும் தலையிட்டுக் குழப்பம் விளைவிக்கிறது'' என்று குற்றம் சாட்டினார். மேலும் பேசுகையில், பிரதமர் நேருஜி கடுமையான ஆட்சேபங்களை எழுப்பும் தம் தோழர்களை விரோதிகளாகப் பாவிக்கும் மனப்பான்மையைக் கைவிட வேண்டும் என்றும், கட்சி முறையில் சில குறைபாடுகள் இருந்தாலும், ஆட்சி நடத்தும் முறையில் உள்ள ஊழல்களினால்தான் கட்சிக்கு அவமதிப்பு உண்டாகிறது என்றும் கூறினார். ''மந்திரிகள் மக்களோடு சரிசமமாகப் பழக வேண்டுமே தவிர தாங்கள் ஏதோ பெரும் எஜமானர்கள் என்ற எண்ணத்தை விட்டொழிக்க வேண்டும்'' என்றார்.



திரு மகாவீர் தியாகி

இத்துடன், 30—10—63 அன்று சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் சுதந்திரக் கட்சி நடத்திய சர்தார் வல்லபாய் பட்டேல் ஞாபகார்த்த தினவிழாவில் தலைவர் இராஜாஜி பேசுகையில் கூறியதையும் சேர்த்து எண்ணத் தோன்றுகிறது. அவர் சொன்னார் :

''நான் உயிருடன் இருக்கும்போதே, சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்து, ஆட்சி அமைத்து, இப்போது உள்ள காங்கிரஸ் கட்சியைப்போல் மக்கள் உரிமைகளைப் பறித்துத் தன்னிடத்திலேயே அளவுக்கு மீறி இருத்திக் கொள்ளுமேயானால், நான் சொல்வேன்: 'சகோதரர்களே! உங்களுக்கு அதிகாரம் அதிகமாகி விட்டது. அதைக் குறைக்க வேண்டும்' என்று. பிறகு நானே எதிர்க் கட்சி ஒன்றை ஆரம்பிப்பேன் அல்லது ஊக்கமளிப்பேன்.''

சென்னை—7
7—10—63 புரசை ராஜகோபாலன்

முதல் மூவர்

''சிவன் முதலான எல்லா தேவர்களைக் காட்டிலும் சிறந்த பரம்பொருள் விஷ்ணுவே'' என்பது வைஷ்ணவ மதத்தின் அடிப்படைக் கொள்கை. ''விஷ்ணு முதலான எல்லா தேவர்களைக் காட்டிலும் சிறந்த பரம்பொருள் சிவனே'' என்பது சிவ மதத்தின் அடிப்படைக் கொள்கை. ''சிவன், விஷ்ணு முதலான எல்லா தேவர்களும், எல்லா ஆத்மாக்களுமே வெளித் தோற்றத்துக்கு வேறுபட்டாலும் ஒன்றான பரம்பொருள் என்பது அத்வைத மதத்தின் அடிப்படைக் கொள்கை. ''மாமலரான் வார்சடையான் என்று இவர்கட்கு எண்ணுந்தான் ஆமோ இமை'' (97) என்னும் பாசுரத்தில் பிரமனும் சிவனும் திருமாலைச் சிறிது சிந்திப்பதற்கும் வல்லவரல்லர் என்கிறார் பேயாழ்வார்.

இப்படியிருக்க, 3—11—63 இதழில் 'முதல் மூவர்' கட்டுரையில் ''தாழ்சடையும்'' என்னும் பாசுரத்தை விளக்கும்போது, ''திருமாலும், சிவபெருமானும் ஆகிய இரண்டு மூர்த்திகளும் ஒரு பெருமானே என்பதை அற்புத நிலையிலே நின்று மனம் உருகப் பாடுகிறார் பேயாழ்வார்'' என்று எழுதியிருப்பது எப்படிப் பொருந்தும்? ''இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து'' என்று ஆழ்வார் பாடுவதிலிருந்து திருமாலுடைய **ஒரு உருவத்தில்** சங்கரன் நாராயணன் ஆகிய இருவருடைய உருவங்களின் லக்ஷணங்களும் காணப்படுகின்றன என்றே விளங்குகிறது. இதிலிருந்து சங்கர நாராயணர்களின் ஸ்வரூபங்கள் ஒன்று என்று ஆகிவிடாது. அப்படிக் கொண்டால் மேலே எடுத்துக் காட்டப்பட்ட (97வது) பாசுரம் பொருந்தாமற் போய் விடும். பல விதமான உருவங்களுடைய நாராயணனுடைய ஸ்வரூபமே சிவன் முதலான எல்லா தேவர்களைக் காட்டிலும் உயர்ந்த பரம்பொருள் என்பதே பேயாழ்வார் முதலிய எல்லா ஆழ்வார்களுடைய முடிவாகும்.

10—11—63 இதழில் ''முதல் மூவர்'' கட்டுரையிலும் ஒரு பிழை காணப்படுகிறது. ''திருப்பாடகத்தில் திருமால் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார்; அதே காஞ்சியில் ஹஸ்திகிரியிலே இருந்த திருக் கோலத்தில் காட்சி தருகிறார்'' என்று எழுதியிருப்பது பிழை. திருப்பாடகத்தில் இருந்த திருக்கோலத்திலும் ஹஸ்திகிரியில் நின்ற கோலத்திலும் காட்சி தருகிறார் என்பதே இன்றும் காணக் கூடிய உண்மை. இங்கு இவ்வாழ்வார் ஹஸ்திகிரியைக் கருதவில்லை. திருஊரகத்தில் எம்பெருமான் நின்றதையும், திருப்பாடகத்தில் இருந்ததையுமே இவ்வாழ்வார் கருதினார் என்பதை இவருடைய சீடரான திருமழிசையாழ்வார், ''நின்றது எந்தை ஊரகத்து இருந்தது எந்தை பாடகத்து அன்று வெஃகணைக் கிடந்தது'' (64) என்று திருச்சந்த விருத்தத்தில் விவரித்துக் காட்டினார். மூன்றாம் திருவந்தாதியின் உரையில் அப்பிள்ளையும்



திருவூரகத்தில் நின்றதையே ஆழ்வார் கருதுவதாக உரையிட்டார்.

திருச்சி எஸ். கிருஷ்ணசுவாமி அய்யங்கார்
7-11-63 ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனம்

இந்துஸ்தான் எஃகு

சுதேசமித்திரன் 20-10-63 இதழில் என்ன செய்தி பகுதியில் வெளியான "அப்பாடா விற்றது" என்ற குறிப்பு சம்பந்தமாகக் கீழ்க்கண்ட விஷயங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

விசாகைத் துறைமுகத்தில் விற்பனையாகாமல் கிடக்கும் எஃகுச் சாமான்களை நாங்கள் வாங்கவுமில்லை; எங்கள் மூலமாக அவை ஏற்றுமதி செய்யப்படவும் இல்லை. நாங்கள் ஸுடான் ரயில்வேயுடன் 12,500 டன் தண்டவாளங்கள் ஏற்றுமதிக்குச் செய்து கொண்ட ஒப்பந்தம் முற்றிலும் வேறானது. இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதற்குப் பாராட்டுக்கள் முழுதும் எங்களைச் சேர்ந்ததல்ல. ஹிந்துஸ்தான் எஃகு ஸ்தாபனத்தின் தொழில்சாதனையுடன் அவர்களுடைய ஒத்துழைப்பும் இருந்திரா விட்டால் இந்த விற்பனை ஒப்பந்தம் ஏற்பட்டிருக்காது.

அயல் நாட்டினரின் தேவைக்கு ஏற்பத் தரமான எஃகு ரயில் தண்டவாளங்களைத் தயாரிக்கத் தொழில் நுட்பத் திறன் நிறைய வேண்டும். ஹிந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் ஸ்தாபனம் தரக் குறைவு ஏற்படாது ரயில் தண்டவாளங்களைத் தயாரித்தளித்துள்ளது. இதுபற்றி நாம் பெருமையே கொள்ள வேண்டும்.

உலக நாடுகள் பல, கடுமையாகப் போட்டியிடும்போது அதைச் சமாளித்து உலக சந்தையில் எஃகுத் தண்டவாளங்களை விற்பது சுலபமான காரியம் அல்ல. இத்துறையில் இப்போதுதான் முதன் முதலாக இந்தியா பிரவேசிக்கிறது என்பதையும் கருத்தில் வைக்க வேண்டும்.

சென்னை-6 வி. டி. ஸ்வாமி கம்பெனி
21-10-63 பிரைவேட் லிட்.

ஹாலிவுட் கதைகள்

'கிரேட்டா தி கிரேட்'

பிரபல அமெரிக்க ஆசிரியரான ஆர்தர் பிரிஸ்பேன் ஹாலிவுட்டுக்கு வந்தார். கிரேட்டா கார்போவைக் காண விரும்பினார். பிரிஸ்பேனை கார்போ நடிக்கும் ஸெட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். ஸ்வீடன்தேசத்து அழகியான இந்தக் கார்போ அவர் இருக்கும் போது செட்டுக்கு வர மறுத்து விட்டாள்.



கிரேட்டா கார்போ

"பிரிஸ்பேனின் தலையங்கங்களை நான் பார்த்திருக்கிறேன். அவரிடம் எனக்குப் பெரு மதிப்பு உண்டு. ஆனால் அவர் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது என்னால் நடிக்க முடியாது" என்று கூறி விட்டாள். அத்தனை சங்கோசமுள்ளவள் அவள். கார்போ உணர்ச்சி வசமான கட்டங்களில் நடிக்கும் போது டைரக்டர்கூட ஸெட்டில் இருக்கக்கூடாது என்று வற்புறுத்துவாளாம்! காமிராவை இயக்குபவரைத் தவிர வேறு யாரும் ஸெட்டில் இருக்கக் கூடாதாம்!

அழ வைக்கவும் அவருக்குத் தெரியும்!

சார்லிசாப்ளினின் படம் 'கோல்ட் ரஷ்'ஷின் முதல் காட்சி நடந்தது. அந்தக் காட்சிக்கு வந்த ஒவ்வொருவருக்கும் ஒரு கார்டு கொடுத்து, அதில் அவர்கள் படத்தைப் பற்றித் தங்கள் அபிப்பிராயங்களை எழுதும்படி கோரியிருந்தனர்.

சார்லிக்கு முன்னாலேயே அவர்களது மனத்தையறிந்து கொள்ளும் துடிப்பு. ஆகவே அவர் யாருமறியாமல் இருட்டில் மூன்று மெக்ஸிகர்கள் பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டார். பாறை போல் எத்தவிதமான உணர்ச்சியையும் பிரதிபலிக்காமல் மெக்ஸிகர்கள் உட்கார்ந்திருந்தனர். இதைக் கண்டு சார்லிக்கு ரொம்ப வருத்தம். ஒரு தடவையேனும் சினிமாவுக்கு வந்திருந்தவர்கள் பலக்கச் சிரித்துக் கரகோஷம் செய்ய வேண்டுமே? இல்லவே இல்லை.

கடைசியில் முக்கால் படமாகிக் கொண்டிருக்கும் போது சார்லி தொங்கிய முகத்துடன் வீடு திரும்பினார்.

ஆனால் சினிமாவுக்கு வந்திருந்தவர்கள், தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருந்த கார்டுகள் கிடைத்த போது சார்லி சாப்ளினுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அந்தப் படத்தைப் பற்றி அன்று வந்திருந்த மெக்ஸிகர்கள் 'ஓஹோ' என்று பாராட்டியிருந்தார்கள். மெக்ஸிகர்கள் மகிழ்ச்சியடையும் போது ஒரேயடியாக உணர்ச்சிவசப்பட மாட்டார்கள், மனத்துக்குள் சிரித்து மகிழ்வார்கள் என்பதை அப்போதுதான் புரிந்து கொண்டார் சார்லி சாப்ளின்.

ஃ சார்லி சாப்ளின் ஹாஸ்ய நடிப்பில்தான் சிறந்தவர் என்று நினைக்க வேண்டாம். டைரக்டராகப் பணி புரிகையில் நடிகர்களுக்குச் சோகக் கதைகளைக் கூறி அவர்கள் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகச் செய்து விடுவாராம்! "ரஸிகர்களை அவர் சிரிக்க வைத்தார்; எங்களை அழப் பண்ணினார்!" என்று அவரைப் பற்றிப் பெருமிதத்துடன் நடிகர் ஜாக்கி கூகன் கூறியபோதிலும், பின்னால் 'லைம் லைட்' என்ற படத்தில் திரைப்பட ரசிகர்களையும் உணர்ச்சி மிகுதியில் விம்மி அழ வைத்தவர்தானே சார்லி!

அமுல்

வெண்ணெய் எவ்விதத்தில் அலாதியானது?



5

பால் பாத்திரத்திலிருந்து பாக்கெட்டுக்குள் செல்ல அமுலுக்கு மட்டுமே 5 மணிநேரத்திற்குள் முடிகிறது. இந்நேரத்திற்குள், தினந்தோறும், காலையிலும், மாலையிலும், வெண்ணெய் தயாரித்து பாக்செய்து வெளி யனுப்புவதற்குத் தயாராவதற்கென புதுப்பால், அது சேகரிக்கப்படும் இடங்களிலிருந்து அதிவேகமாக அனுப்பப்படுகிறது.

அமுல் வெண்ணெய்

புதுமையுடனும், சுத்தமாகவும் சபோஷாக்குள்ளதாகவும் இருப்பதில் வியப்பில்லை.

கெய்ரா டிஸ்டிரிக்ட் கோ-ஆப்பிரேடிவ் மில்க் ப்ரொடியூஸர்ஸ் யூனியன் லிட்., ஆனந்த்.

CAKMP-3A TAM



பயங்கரமான குஸ்திச் சண்டையில் ஈடுபட்டிருக்கும் போதே ஜகதீஷ் அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டான். விநாடிப் போதுதான் அவன் நோக்கில் அவள் தென்பட்டாள்; அதற்குமேல் எதிராளியின் முஷ்டித் தாக்குதலைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் அவன் இருந்ததால் அவளைக் கவனிக்க முடியவில்லை. இருந்தாலும் அந்த ஒரு கணத்துக்குள் லாகவமாகக் கொடுக்கப்பட்ட ஓர் 'அண்டர்கட்' போல் அவள் உருவம் அவனிடத்தில் பதிந்து விட்டது.

இடைவேளையின் போது சற்று நேரம் அவளைப் பார்த்தான் ஜகதீஷ். அவள் அலங்கரித்துக் கொண்டிருந்த விதத்தைக் கண்டாலே அவள் பெரிய செல்வந்தர் வீட்டு மகள் என்பது தெரிந்தது. பக்கத்தில் வேண்டா வெறுப்பாக அமர்ந்திருப்பது போல் ஒருவர் கிருதா மீசை சகிதம் காட்சி தந்தார்.

அவன் தன்னையே வெறித்து நோக்குகிறான் என்பதை உணர்ந்ததும் அந்தப் பெண்ணின் முகத்தில் ஒரு புன்னகை அரும்பியது. அவள் வெட்கப்பட்டதாய்த் தெரியவில்லை. பணக்கார வீட்டுப் பெண்ணாயிற்றே நாலு பேரிடம் தாராளமாகப் பழகப் பயின்றிருப்பாள் என்று எண்ணிக் கொண்டான் ஜகதீஷ். பதிலுக்கு இலேசாகச் சிரித்தான். அவர்தான் தணிகாசலமாக இருக்க வேண்டும். தணிகாசலத்துக்கும் அவர் மகளுக்கும் முன் வரிசையில் அந்த இரண்டு ஸீட்களையும் ரிசர்வ் செய்வதாக நிர்வாகிகள் பேசிக் கொண்டார்கள். அவருடன் அவள் அந்நியோந்நியமாகப் பழகிக் கொண்டிருப்பதிலிருந்து அவள் அவர் மகள்தான் என்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி ஊகிக்க முடிந்தது.

சிரித்தவாறே உறைகளிடப்பட்ட கரங்களை ஒன்று சேர்த்துத் தலைக்கு மேல் உயர்த்திக் குலுக்கினான். அதைத் தனக்கு அளிக்கப்பட்ட பெரிய கௌரவமாக மதித்து அவளும் நாசூக்காக இடது கரத்தைத் தோள் மட்டத்துக்கு உயர்த்தி அசைத்தாள்.

மணியோசை கேட்டது. ஜகதீஷ் குத்துக்களைக் கொடுத்தான்; பெற்றுக் கொள்ளவும் செய்தான். கூட்டத்தினரின் ஆரவாரம் செவிகளைத் துளைத்தது. வெற்றிக்கு அடையாளமாக அவன் கையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார் ரெபரி. அவரிடமிருந்து விடுதலை பெற்று மேடையை விட்டு இறங்கி அவளை நோக்கி வந்தான் ஜகதீஷ்.

அவனுக்காகவே காத்திருப்பது போல்தான் அவளும் தயங்கி நின்று கொண்டிருந்தாள்.

பாமாவும் அவள் சித்தப்பா தணிகாசலமும் அவனுக்கு அறிமுகமானார்கள். பேச்சுவாக்கில்தான் அவள் அவரது சொந்த மகளில்லை என்றும், அவருடைய அண்ணன் பெண் என்பதும் விளங்கின.

''ஒரு நாள் வீட்டுப் பக்கம் வாருங்களேன்; உங்களைப் போன்ற விளையாட்டு மன்னர்களை எங்கள் இல்லத்தில் வரவேற்க எங்களுக்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!'' என்றார் தணிகாசலம்.

''ஆகட்டும்!'' என்று தலையசைத்தான் ஜகதீஷ். எல்லாம் இத்தனை கச்சிதமாக நடக்கும் என்று அவன் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்? சரளமாகப் பழகுகிற அந்தப் பெண்ணை வழிக்குக் கொணருவது தனக்குச் சிரமமில்லை. சித்தப்பாதான் அவளுக்குக் கார்டியனானதால் ரத்த பாசம், பெற்ற பாசம் என்றெல்லாம் பயப்பட வேண்டியதில்லை. அவர்களிடையே பிரமாதமான ஒட்டுதல் ஒன்றுமிராது. பாமாவை எப்படியாவது வசீகரித்துக் கலியாணம் செய்து கொண்டால் போதும். அப்புறம் ஆயுசு முழுதும் கவலை இல்லை. சனியன் பிடித்த இந்தக் குத்துச் சண்டைக்கெல்லாம் ஒரு முழுக்குப் போட்டு விட்டு நிம்மதியாகக் காலத்தை ஓட்டலாம். தன் வாழ்க்கையிலேயே முக்கியமான ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய அந்த நாளை வாழ்த்தினான் ஜகதீஷ்.

ஜகதீஷ் திட்டம் போட்டு அவர்களை அறிமுகப்படுத்திக் கொண்ட அந்தத் தினத்துக்குப் பின் அடிக்கடி அவர்கள் வீட்டுக்குப் போய்ப் பாமாவைச் சந்தித்து அளவளாவி வந்தான். எல்லாம் அவன் நினைத்தபடியே நடந்தன. பாமா அவனிடம் குழைந்து குழைந்து பேசினாள்; கேலி செய்து சிரித்தாள்: அவள் கார் ஓட்டி வர, அவனே டிக்கெட்டும் வாங்க அவன் தன்னை சினிமாவுக்கு அழைத்துப் போக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள்; மிஞ்சினாள், கெஞ்சினாள், கொஞ்சினாள், அழுதாள். சுருக்கமாகச் சொல்ல வேணுமானால் தான் அவன் மீது காதல் கொண்டு விட்டதாக வாய் விட்டுச் சொல்லாமலே அதை அவன் உணரச் செய்ய அரும் பாடுபட்டாள்.

வெண்ணெய் திரண்ட நேரத்தில் தாழி உடைந்த கதையாக இந்தத் தருணத்தில்



ஒரு நாள் ராம்பியாரி ஜகதீசைத் தேடி வந்தான். அவனைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்து நின்றான் ஜகதீஷ்.

''என்னடா, திகைக்கிறாய்? நான் என்ன பேயா பிசாசா?'' என்றான் ராம்பியாரி.

''இல்லே.... நீ எப்படி.... இங்கே.... எப்போ...?'' என்று வார்த்தைகள் ஒவ்வொன்றையும் கம்பியாக நீட்டினான் ஜகதீஷ்.

''நான் ரொம்ப நாட்களாகவே சென்னையில்தான் இருக்கிறேன்; சில வாரங்களுக்கு முன்னால்தான் நீ சென்னைக்கு வந்திருப்பதாயும், பாக்ஸிங் மாட்சுகள் நடக்கப் போவதாயும் பத்திரிகையில் பார்த்தேன்.''

''இதோ பார்! உனக்கு எனக்கும் இருந்த தொடர்பு நடுவே அறுந்து போய் விட்டது. மறுபடியும் அதை ஒட்ட வைக்க நான் விரும்பவில்லை. தயவுசெய்து மீண்டும் என் வாழ்க்கையில் குறுக்கிடாதே. போய்விடு!''

ராம்பியாரி சிரித்தான். அந்தச் சிரிப்பிலே கொடூரம் இருந்தது. ''நன்றாகச் சொன்னாய்! ரொம்பப் புத்திசாலித்தனமாகப் பேசுகிறாயே! எனக்கும் உன்னுடன் நட்புறவு கொண்டாட ஆசை இல்லே. ஆனால் நீ மட்டும் உன் கடையைக் கட்டிக் கொண்டு சென்னையிலிருந்து உடனே கிளம்பிப் போய்விட வேண்டும்.''

''ஏன்?''

''பாமாவை நீ மறந்து விட வேண்டும். அவளுக்கு ஒரு வரிகூட நீ கடிதாக எழுதக் கூடாது.''

ஜகதீஷ் ஆச்சரியத்துடன், ''எங்களை நீ கவனித்து வருகிறாயா?'' என்று கேட்டான்.


''ஆமாம், அன்று குஸ்திச் சண்டை முடிந்ததும் அவர்களிடம் பல்லே இளித்தாயே அன்றிலிருந்தே கவனித்து வருகிறேன். உன்னைப் போன்ற கட்டுமஸ்தான தேக அழகு உள்ளவனுடன் நான் போட்டி போட முடியுமா? அவள் உன்னைத்தான் விரும்பிக் கலியாணம் செய்து கொள்வாள். இப்போதெல்லாம் என்னை அவள் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லே.''



''அப்படியானால் நீயும் அவளைக் காதலிக்கிறாயா?'' என்று ஜகதீஷ் வினவினான்.

''ஏய்! ஏய்! என்ன, 'காதல் கீதல்' என்று பெரிய வார்த்தைகளைப் போடுகிறாய்? பாம்பின் காலைப் பாம்பு அறியும். நம் இருவருக்குமே ஒரே நோக்கம்தான். அது பணம்தான். ஆனால் இந்தக் காரியத்தில் வெற்றி அடையப் போவது நான். வாலைக் குழைத்துக் கொண்டு ஊரை விட்டு ஓடப் போவது நீ!''

''நான் பாமாவை உனக்கு விட்டுக் கொடுக்க மாட்டேனென்றால் நீ என்ன செய்வாய் என்பது எனக்குத் தெரியும். நான் ஐந்து வருஷங்கள் ஜெயிலில் இருந்துவிட்டு வந்தவன் என்பதை அவர்க



எதற்கும் துணிந்தவன்

குமரன்



களிடம் வெளியிட்டு விடுவாய்.''

''பேஷ்! பேஷ்! ரொம்பக் கெட்டிக்காரனாகி விட்டாயே! விஷயங்களைச் சட்டென்று புரிந்து கொள்கிறாய்'' என்ற ராம் பியாரி குரலைக் கடுமையாக்கிக் கொண்டான். ''ஜகதீஷ்! இறுதி எச்சரிக்கை! நான் பொல்லாதவன். என்னுடன் போட்டி போடாதே'' என்றான்.

ராம்பியாரி போன பிறகு ஜகதீஷ் சிந்தனையில் ஆழ்ந்தான்.

பள்ளிக்கூடத்தில் குத்துச் சண்டையைத் தவிர வேறு எதையுமே கற்றுக் கொண்டதில்லை ஜகதீஷ்.

'படி, படி' என்று நச்சரித்துக் கொண்டிருந்த அவன் தாயார் இறந்ததும் படிப்பையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு அவ்வப்போது குஸ்திச் சண்டை போட்டு வந்தான். வருவாய் ரொம்பச் சொற்பம்தான். அதோடு பள்ளிக் கூடப் பையன்களுடன் விளையாட்டாகக் குஸ்தி போடுவது வேறு: குஸ்திச் சண்டையையே தொழிலாகக் கொண்டவர்களைச் சமாளிப்பது வேறு எனக் கண்டான். குஸ்திச் சண்டை நிர்வாகிகளோ, 'உன் திறமையைக் காட்டு. நாங்களும் பண விஷயத்தில் எங்கள் தாராள மனப்பான்மையைக் காட்டுகிறோம்' என்றனர். தாளடையில் அவன் கோதாவில் இறங்குவதே சிரமமாயிற்று.

தோல்வி மனப்பான்மையுடன் மனம் புழுங்கிக் கொண்டிருந்த நிலையில்தான் அவனுக்கு ராம்பியாரி சிநேகமானான்.

அவன் மனமுடைந்து போயிருந்த சமயத்தில் அவனது உற்ற நண்பன் தான்தான் என்று பேசினான் ராம்பியாரி. ஹோட்டலுக்கு அழைத்துப் போய்ப் பசி தீர்த்து வைத்தான். துணியெல்லாம்கூட வாங்கிக் கொடுத்தான். பிறகு மெல்லத் தன் யோசனையைக் கூறினான்.

ஜகதீஷ் உடலில் பலம் மிக்கவன்தான். ஆனால் பலவீனமான மனம் படைத்தவன். ராம்பியாரி கூறியது போல அவன் தனக்குக் கோதாவில் இறங்க அனுமதி மறுத்த நிர்வாகியின் அறைக்குள் தன் முகத்தைத் துணியினால் மறைத்துக் கட்டிக் கொண்டு புகுந்தான். அப்போது அவர் அன்றைய வரும்படியை எண்ணிக் கொண்டிருந்தார். வேண்டுமென்று தான் அந்த நேரத்தைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள் ஜகதீஷும் ராம்பியாரியும். இரண்டு லெப்ட் ஹுக்குகளும் ஒரு நாக் அவுட்டும் கிடைத்தன நிர்வாகிக்கு. அவர் அப்படியே சுருண்டு விழுந்தார். ஜகதீஷ் மேஜை மீது இருந்த நோட்டுக்களைச் சுருட்டிக் கொண்டு கிளம்பினான்.

யாரோ திருடன் வந்து எல்லாவற்றையும் கொள்ளை அடித்துக் கொண்டு போய் விட்டான் என்றுதான் எல்லாரும் நினைத்திருப்பார்கள். ஆனால் ராம்பியாரி தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் தன் பங்குக்குக் கிடைத்த பணத்தைக் கண்டபடி வாரி இறைத்துச் செலவழிக்க ஆரம்பித்தான். இதனால் அவன் மீது சிலருக்குச் சந்தேகம் தட்டிக் கடைசியில் போலீஸார் அவனைப் பிடித்துக் கொண்டு போனார்கள். விசாரணையின்போது தனக்கு ஒன்றுமே தெரியாது என்றான் ராம் பியாரி. ''எல்லாம் ஜகதீஷ் கொடுத்த பணம்: அவன் இதேபோல் நிறைய நோட்டுக்களாய் வைத்திருக்கிறான். 'ஏது' என்று கேட்டால் 'கொள்ளை அடித்தேன், போடா!' என்று அலட்சியமாய்ப்பேசுகிறான். நண்பர்களுக்கெல்லாம் நோட்டுக்களாய் வாரி விடுகிறான்'' என்று உண்மையையும் பொய்யையும் கலந்து அடித்தான் ராம்பியாரி போலீஸாரிடம். அவர்கள் அவனை விட்டு விட்டு ஜகதீஷைப் பிடித்து ஐந்து வருஷங்கள் உள்ளே தள்ளி விட்டார்கள்.

இதெல்லாம் பழைய கதை. வடக்கே ஷோலாப்பூரில் ஆறேழு வருஷங்களுக்கு முன் நடந்தது. 'இப்போது என் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப் போகிறதென்று நினைக்கையில் இதென்ன சங்கடம்?' என்று ஜகதீஷ் யோசித்தான். 'முன்பு நெஞ்சுறுதி இல்லாமல் ராம் பியாரி சொன்னதைக் கேட்டதுபோல் இந்தத் தடவையும் செய்யக் கூடாது. எதிர்த்துப் போராட வேண்டும்? அதற்கு என்ன வழி?

'ஜெயிலுக்குப் போய் வந்ததைப் பாமாவிடம் சொல்லி விடுவேன் என்றுதானே ராம் பியாரி பயமுறுத்துகிறான். அதை நாமே பாமாவிடம் தெரிவித்து விட்டால்? ராம் பியாரி இங்கு வந்து விட்டுப் போன விவரங்கள் எதுவும் பாக்கி இல்லாமல் சொல்லி விட்டால்?

'அவள் காதல் உண்மையானதுதானென்று தான் சொல்லிப்பதாய்க் கூறினால்? 'புல்லானாலும் புருஷன், கல்லானாலும் கணவன் என்கிற தமிழ் நாட்டில் பிறந்தவள்தான் நான்' என்று பல தடவைகளில் சொல்லியிருக்கிறாளே பாமா! அதனால் என்னை வெறுக்க மாட்டாள். ராம்பியாரி ஏதும் உளறுவதற்கு முன் நாமே உண்மையை விண்டு கூறிவிடுவது நல்லது. பெண்களின் போக்கே விசித்திரமானதுதான். இதனை வெளியிட்டதும் அவளுக்கு என்னிடத்தில் உள்ள அன்பு இன்னும் அதிகமாகக் கூட ஆகலாம்! 'மனத்தால் உங்களை வரித்து விட்டேன். இனிமேல் உங்களைப் பற்றி என்ன அவதூறு என் காதில் விழுந்தாலும் பொருட்படுத்த மாட்டேன்' என்று கூறிக் கற்பு நிலை பிறழாமல் இருக்கப் பிரயாசைப்படுவாள்!'

இப்படியெல்லாம் சிந்தித்து முடிவு செய்து அதன்படி பாமாவைச் சந்தித்து நடந்ததைச் சொன்னான் ஜகதீஷ். அவன் நினைத்தபடியே ''என் காதல் என்றுமே மாறாது!'' என்றாள் பாமா. ''நல்ல தருணம் பார்த்து நான் சித்தப்பாவிடம் விஷயத்தைச் சொல்லி அவரையும் சரிக் கட்டி வைக்கிறேன்'' என்று உறுதி யளித்தாள்.

அன்றிரவு பாமா கூறுவதையெல்லாம் உன்னிப்பாகக் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தார் தணிகாசலம். அவள் சொன்னாள்: ''சித்தப்பா! ராம்பியாரி உங்களுடைய அந்தரங்க வாழ்க்கை பற்றிய இரண்டொரு விஷயங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டு அவற்றைவெளியிட்டுவிடுவதாய்ப் பயமுறுத்துகிறான். உங்களுடைய பணமும் சமூக அந்தஸ்

தும் பறி போகாமல் இருக்க வேண்டுமானால் என்னை அவனுக்குக் கலியாணம் செய்து தர வேண்டும் என்கிறான். அதன் மூலம் உங்களுடையதும் என்னுடையதுமான சொத்துக்களை அனுபவிக்கப் பார்க்கிறான். ராம்பியாரியைக் கொஞ்சம் பயமுறுத்தி வைக்க ஓர் ஆள் தேவை என்று நீங்கள் நினைத்து வந்தீர்கள்.

"அன்று பாக்ஸிங் மாட்சில் ஜெகதீஷ் என்னைப் பார்த்துக் கொஞ்சம் அசடு வழிவதைக் கண்டதும் நீங்கள் அவனையே உங்கள் காரியத்துக்குத் தேர்ந்தெடுத்தீர்கள். கட்டுமஸ்தான பேர்வழியாக இருக்கிறான், அவனை ஏவிவிட்டு யாருக்கும் தெரியாமல் இரண்டு தரம் ராம்பியாரிக்கு உதை கொடுக்கச் சொன்னால் அப்புறம் ராம்பியாரி நம்மிடம் வாலாட்ட மாட்டான் என்று கருதினீர்கள். ஜெகதீஷ் நாம் சொன்னபடியெல்லாம் கேட்க வேண்டும் என்பதற்காக அவனை என் கைக்குள் போட்டுக் கொள்ளச் சொன்னீர்கள். நானும் அவனை வழிக்குக் கொண்டு வந்திருக்கிறேன்."

"இதெல்லாம் எனக்குத் தெரிந்த விஷயங்கள்தானே!"

பாமா சிரித்துக் கொண்டே தொடர்ந்தாள்: "ஆனால் நீங்கள் ஒரு விஷயத்தில் ஏமாந்து விட்டீர்கள். ஜகதீஷுக்கும் ராம்பியாரிக்கும் ஏற்கனவே தொடர்பு இருப்பதை நீங்கள் எதிர்பார்த்தே இருக்க மாட்டீர்கள்!"

"என்ன?" என்று அதிசயத்துடன் கேட்ட தணிகாசலம், "மேலே சொல்லு!" என்று அவளிடமிருந்து எல்லா விவரங்களையும் கேட்டறிந்து கொண்டார்.

அவர் மூளை தீவிரமாக வேலை செய்தது.

இரு தினங்களுக்குப் பின் எண்ணூருக்குப் 'பிக்னிக்' கிளம்பினார்கள், பாமாவும் ஜகதீஷும். "நீங்களும் வாருங்களேன்" என்று தணிகாசலத்தை அழைத்தான் ஜகதீஷ் அரை மனதுடன். "சே! சே! குழந்தைகள் ஜாலியாகப் போய் வாருங்கள். நான் சாயந்திரம் வந்து சேர்ந்து கொள்கிறேன்" என்றார் தணிகாசலம்.

எண்ணூரின் கடற்கரை அருகே உல்லாசமாகப் பொழுது போயிற்று அவர்களுக்கு. திடீரென, "சித்தப்பாவிடம் நான் பேசிவிட்டேன்" என்றாள் பாமா. "என்ன சொன்னார்?" என்று மிகுந்த ஆவலுடன் கேட்டான் ஜகதீஷ்.

"ஒன்றுமில்லை; ஒரே ஒரு 'கண்டிஷன்' தான் போட்டார். அதாவது நீங்கள் கோழை இல்லை என்று காட்டிக் கொள்ள வேண்டுமாம். ராம்பியாரியை நேருக்கு நேராய்ச் சந்தித்து, 'உன்னிடம் எனக்கு என்ன பயம்? நான் பாமாவைத்தான் கலியாணம் செய்து கொள்வேன்; அவளும் நான் ஜெயிலுக்குப் போய் வந்தவன் என்று தெரிந்தும் என் கரம் பிடிக்கச் சம்மதித்திருக்கிறாள். எங்கள் காதல் தூய்மையானது. அதை யாராலும் கெடுக்க முடியாது' என்று சொல்ல வேண்டும்."

"பூ! இவ்வளவுதானே! இதோ இப்போதே போகிறேன்" என்று எழுந்தான் ஜகதீஷ்.

"என்னைத் தனியாக விட்டு விட்டா? அப்பா வந்த பிறகு போகக் கூடாதா? இந்த அழகான சூழ்நிலையில் நாம் தனித்திருக்கும்



தகப்பனார்: பாலு! ஏரோட்ரோம் பார்த்தாயா? இங்கேயிருந்து எல்லா விமானங்களும் கிளம்பிப் பல ஊர்களுக்குப் போகும்.

பாலு: ஏரோட்ரோமிலிருந்து வானத்தில் ஏறிப் போய் இறங்கோட்ரோமில் இறங்கி விடுமாக்கும்!

இந்தச் சந்தர்ப்பத்தை உதறித் தள்ளிவிட்டுப் போக உங்களுக்கு எப்படி மனம் வருகிறது?" என்று கேட்டு முகத்தைத் தூக்கிக் கொண்டாள் பாமா.

அவளைச் சமாதானப்படுத்துவது பேரின்பமாய் இருந்தது ஜகதீஷுக்கு. பேச்சு சுவாரசியத்தில் நேரம் போனதே தெரியவில்லை.

நாலு மணி சுமாருக்குத் தணிகாசலம் வந்தார். "அப்பா, இவர் நீங்கள் சொன்னபடி ராம் பியாரியிடம் பேசிவிட்டு வரப் புறப்பட்டார்; நான்தான் 'அவசரமில்லை' என்று நிறுத்தி வைத்தேன்" என்றாள் பாமா.

"அடாடா! எனக்கும் இப்போதுதான் ஞாபகம் வருகிறது. நாலரை மணி சுமாருக்கு வீட்டுக்கு வருகிறேன் என்றான் ராம்பியாரி. நான் மறந்து போய் எண்ணூருக்கு வந்துவிட்டேன். இப்போ ஒரே களைப்பாக இருக்கிறது" என்றார் தணிகாசலம்.


"அதனாலென்ன? அவனிடம் நீங்கள் பேச வேண்டிய முக்கிய விஷயம் ஒன்றுமில்லையே? நீங்கள் இங்கேயே கடற் காற்றை அனுபவித்தபடி ஓய்வெடுத்துக் கொண்டிருங்கள். நான் நேராக உங்கள் வீட்டுக்குப் போய் ராம்பியாரியைப் பார்த்து, இன்றைக்கு அவன் உங்களைச் சந்திக்க முடியாது என்று சொல்லி விடுகிறேன். அப்படியே எனக்கும் பாமாவுக்கும் கலியாணம் நடக்கப் போவது பற்றியும் சொல்லி விட்டு வருகிறேன்" என்றான் ஜகதீஷ்.

"ரொம்பப் பேஷாகப் போச்சு" என்று ஆமோதித்தார் தணிகாசலம்.

அவன் பாமாவின் காரை ஓட்டிச் சென்றதும், "வலையில் விழுந்து விட்டான் பயல்" என்றார் தணிகாசலம்.

"காரியம் முடிந்ததா?" என்றாள் பாமா பரபரப்புடன்.

"ஆகா! ராம்பியாரியிடமிருந்து நாம் விடுதலை அடைந்து விட்டோம். இனி மேல் என்னை அவன் 'பிளாக் மெயில்' செய்ய முடியாது!" என்றார் தணிகாசலம். தொடர்ந்து, "வேலைக்காரர்களுக்கு இன்று லீவு




''முதல் உதவி''



கொடுத்து விட்டேன். சொல்லி வைத்தபடி ராம்பியாரி பணம் வாங்கிப் போக மூன்று மணிக்கு வந்தான். நேற்று என் பிச்சுவாக் கத்தியை வைத்துக் கொண்டு ஜகதீஷ் விளையாடிக் கொண்டிருந்தானல்லவா? அதில் அவன் விரல்ரேகைகள் ஒன்றிரண்டேனும் பதிந்திருக்கும். நான் ராம்பியாரியைத் தீர்த்துக் கட்ட அதே பிச்சுவாவை உபயோகித்தபோது என் கைக்கு உறை அணிந்து கொண்டேன். வாசல் கதவைப் பூட்டாமல் வெறுமனே சாத்திக் கொண்டு கிளம்பி விட்டேன். இப்போது ஜகதீஷ் நம் வீடு சென்றடைய முக்கால் மணி நேரம் ஆகும். கதவைத் திறந்து கொண்டு உள்ளே போவான். நானும் இன்னும் சரியாக முக்கால் மணி நேரம் பொறுத்திருந்து விட்டுப் போலீசுக்குப் போன் செய்யப் போகிறேன். ஜகதீஷ் ரொம்ப ஆத்திரத்துடன் இங்கிருந்து நம் வீட்டுக்குப் போயிருப்பதாகச் சொல்வேன். அவனும் ராம்பியாரியும் என் மகளின் காதலைப் பெறப் போட்டியிலெதாகவும், அங்கே என்ன நேருமோ என்று தான் கவலைப்படுவதாகவும் தெரிவிப்பேன்.''

''ஜகதீஷ் இங்கிருந்து கிளம்பிய உடனே நீங்கள் போன் செய்வதற்கென்ன?'' என்று போலீஸ் பாணியில் பாமா கேட்டாள்.

''அவன் உள்ளூறப் பொறுமிக் கொண்டிருக்கும் விஷயம் எனக்கே இப்போதுதான் தெரிய வந்தது சார்! நான் பார்க்கையில் வெளித்தோற்றத்துக்கு அவன் சாதாரணமாகத்தான் தென்பட்டான். ஆனால் என் மகளிடம், 'ராம்பியாரியை பகவான் ராமனிடமே அனுப்பி வைக்கப் போகிறேன்' என்று கூறிச் சென்றிருக்கிறான். பாமா பயத்திலேயே ரொம்ப நேரம் வாயடைத்துப் போய் விட்டாள். பயம் தெளிந்து அவள் விவரம் சொன்னதும் நான் 'பப்ளிக் டெலிபோனை'த் தேடவும் அதில் போடப் பதினைந்து பைசாக்காக நோட்டுக்குச் சில்லறை மாற்றி வரவும் வேறு கொஞ்சம் தாமதமாகிவிட்டது!'' என்று ஓர் இன்ஸ்பெக்டருக்குப் பதிலளிப்பது போல் தணிகாசலமும் பேசினார்.



''ராம்பியாரி அந்நேரத்தில் உங்கள் வீட்டில் இருப்பதாக ஜகதீஷுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள் தற்சமயத்துக்கு இன்ஸ்பெக்டராக நடித்த பாமா.

'' 'நான்தான் அனுப்பி வைத்தேன்! இப்படியெல்லாம் விபரீதம் நிகழும் என்று கண்டேனா?' என்று ஒரு குரல் அழ வேண்டும். அப்புறம் ராம்பியாரி என்னைப் பார்க்க நாலரை மணிக்கு வருவதாய்ச் சொன்னதை மறந்தே விட்டேன் என்று சற்று முன்னால் ஜகதீஷிடம் கூறினேனே அதையும் அதற்கு ஜகதீஷ் கூறிய பதிலையும் அப்படியே போலீசாரிடம் ஒப்பிக்க வேண்டும்.''

''ஜகதீஷைப் போலீஸார் கையும் மெய்யுமாக நம் வீட்டிலேயே கைது செய்வார்கள். அப்படியே அவர்கள் வருவதற்கு முன் அவன் ஓடி விட்டாலும் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் அவனுக்கு எதிராகத்தான் இருக்கின்றன. போலீஸார் அவனை எப்படியும் கண்டு பிடித்துக் கைது செய்வார்கள்.''

''கரெக்ட்! முதலாவதாக அவன் குத்துச் சண்டை போடுகிறவனானதால் இப்படி முரட்டுத்தனமான காரியத்தில் ஈடுபட்டது வியப்பளிக்காது. அதோடு ஏற்கனவே ஒருத்தனை அடித்துப் போட்டு விட்டுப் பணம் திருடியதால் அவன் ஜெயிலுக்குப் போயிருப்பவன். அதைப் போலீஸார் தங்கள் 'பைல்'களிலிருந்து சுலபமாய்த் தெரிந்து கொண்டு விடுவார்கள். ஆகவே கொலை செய்யவும் துணிவான் என்றே தீர்மானிப்பார்கள். ஷோலாப்பூருக்கு எழுதிக் கேட்டுப் பழைய கேஸ் சம்பந்தமான எல்லா விவரங்களையும் சேகரிப்பார்கள். அப்புறம் காதலுக்காக மட்டுமின்றி முன்பு ஷோலாப்பூரில் போலீஸாரிடம் தன்னைக் காட்டிக் கொடுத்ததற்காக வஞ்சம் தீர்க்கும் முறையிலும் ஜகதீஷ் ராம்பியாரியைக் கொன்று விட்டான் எனக் கருதுவார்கள். நம் வீட்டில் ராம் பியாரியின் பிரேதத்தைக் கண்டு ஜகதீஷ் பயந்து ஓடினால் அவன் பேரில் சந்தேகம் மேலும் வலுப்படும்!''

''சித்தப்பா! நீங்கள் எதற்கும் துணிந்தவர்'' என்றாள் பாமா.

தணிகாசலம் சிரித்துக் கொண்டே, ''மெல்ல எழுந்து நடந்து போய் டெலிபோனைத் தேடுவோமா, போலீசுக்குப் போன் செய்ய?'' என்று கேட்டார்.

அரை மணி கழித்து, ''ஹலோ, எமர்ஜென்ஸி போலீஸா?'' என்று விசாரித்துத் தணிகாசலம் அவர்களுடன் பேசத் தொடங்கிய போது ஜகதீஷுக்குத் தாம் விரித்த வலையில் தாமே தம்மையறியாமல் சிக்கிக் கொள்வதை அவர் உணர்ந்திருக்கவில்லை.

ஏனெனில், ஜகதீஷ் உணர்ச்சிக் கொந்தளிப்புடன் வேகமாக ஓட்டிச் சென்றதனால் காருக்கு வழியில் விபத்து நேர்ந்து, சில நிமிஷங்களில் ஆம்புலன்ஸில் அவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போய் விட்டார்கள். மார்புக் கூட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கையில் அவன் தணிகாசலத்தின் வீட்டுப் பக்கம் எப்படிச் செல்ல முடியும்?

இரவு ஏழு மணி சுமாருக்கு மகளுடன் தம் வீட்டை அடைந்த போது அங்கே போலீஸார் தமக்காக விலங்குடன் காத்திருப்பதைக் கண்டு தணிகாசலம் பதறித் துடிக்கவில்லை. அவர்தான் எதற்கும் துணிந்தவராயிற்றே!

நோபின் நல்ல நோவு-நிவாரணகளிம்பு.
அதனை சரியாக உபயோகித்து சிறந்த பலன் அடையுங்கள்!

லட்சக்கணக்கானவர்கள் உபயோகித்து சிறந்த பலன் அடைந்துள்ளனர் நாள்பட்ட வலிகள், நோவுகள், சுளுக்கு, தலை வலி, வாயுப் பிடிப்பு—இவ்வாயு, மார்புச் சளி முதலியவற்றிலே!

- நோபின் ஒரு சுகமான சூட்டினால் நோவை சமனம் செய்கிறது— வேனலையும் அசுகத்தையும் தராது.
- நோபின் சருமத்திற்கு எரிச்சலையோ, கொப்புளங்களையோ அல்லது மருந்தின் வழக்கத்தையோ உண்டாக்காது.
- நோபினின் செய்முறை வைத்திய நிபுணர்களாலும் விஞ்ஞானிகளாலும் திட்டப்படுத்தினது. அது வீட்டு டியூபுகளில் எப்பொழுதும் நேர்த்தியாக இருக்கும்.




ஒரு டியூப் நோபினை எப்பொழுதும் அருகில் வைத்திருங்கள்

நோபின்

நோவு-நிவாரண களிம்பு

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட், கல்கத்தா-29.

தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1



வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

90 நாட்களில் தமிழ் மூலம் ஆங்கிலம் தானே இலக்கணமாகப் படிக்க, பேச, எழுத, சுலபமாகக் கற்க பெரிய புத்தகம். விலை தபால் செலவோடு ரூ. 6-25.

ஐசுவரியம் (குடிசைத் தொழில்)
சோப், இங்கி, பத்தி, ஸ்னோ போன்ற 206 புதுத் தொழில்கள் அடங்கியது விலை ரூ. 4-00. வி. பி. 0-85.

தமிழ் ஹிந்தி சுபோதினி
தமிழ் மூலம் சுலபமாக ஹிந்தி படிக்க பேச, எழுத, கற்க முடியும். விலை ரூ. 2-25. வி. பி. 0-85.

குடும்ப இலகு வைத்தியம்
பச்சிலை மூலிகைகள் கொண்டு ஆரோக்கியம், பலம் பெற வழிகாட்டும். விலை ரூ. 2-50. வி. பி. ரூ. 1-00.

மாட்டு வாகடம் (பசு வைத்தியம்)
கால்நடைகளின் நோய்களை போக்கும்: விலை ரூ. 2. வி. பி. 0-85.

வாணி புக் டிபோ (K)
8, மல்லயபெருமாள் தெரு, ரூம் நெ. 5
சென்னை - 1

எக்ஸிமா சொறி

உங்கள் சருமத்தில் சுமார் 5 கோடி மெல்லிய துவாரங்களும் மடிப்புகளும் உள்ளன. கிருமிகள் அவைகளில் மறைந்திருந்து, தாங்க முடியாத அரிப்பு, வெடிப்பு, மேலாகப் பரவும் படை, தோல் உரிதல், எரிச்சல், பருக்கள், படர் தாமரை காலில் அரிப்பு முதலிய உபாதைகளை உண்டு பண்ணுகின்றன. சாதாரண சிகிச்சைகள் தற்காலிகமான நிவாரணம் அளிக்கும். ஏனெனில், அதன் மூலம் உபாதைகளுக்கு மூலகாரணமான கிருமிகள் அழிவதில்லை. விஞ்ஞான முறையில் தயாரித்த இந்த மருந்து, நிக்ஸோடர்ம் (Nixoderm) துரிதமாக இந்தக் கிருமிகளைக் கொன்று விடுகிறது. மற்றும் உங்கள் சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் வசீகரமாகவும் இருக்கச் செய்கிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடர்ம் (Nixoderm) வாங்குங்கள். சரும உபாதைகளின் மூலகாரணமான கிருமிகளை நிக்ஸோடர்ம் நிச்சயமாக அழிக்குமென்ற பூர்ண நம்பிக்கையுடன் வாங்குங்கள்.

நாற்பத்தாறாவது அத்தியாயம்

மறுதினம் மாலையில் கல்லூரி அலுவலகத்தில் வைத்தே நிர்வாகக் குழுவின் அவசரக் கூட்டம் நடைபெற்றது. நிர்வாகக் குழுவினர் கல்லூரி நிர்வாகத்தின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுத்ததும் புதிய தலைவர் — ஆசிரியர்களை எல்லாம் சந்திக்க வேண்டும் என்றும் ஒவ்வொரு துறை ஆசிரியர்களும் புதிய தலைவருக்குத் தங்கள் பாராட்டுக்களைத் தெரிவிக்கவேண்டும் என்றும் சொல்லிக் கல்லூரி முதல்வர் அன்று மாலையில் வகுப்புக்கள் முடிந்த பின்பும் ஆசிரியர்களை வீட்டுக்குப் போக விடாமல் தடுத்து நிறுத்தி விட்டார். கல்லூரி நிர்வாகக் குழுவின் கூட்டம் மிகவும் சுருக்கமாக அரை மணி நேரத்தில் முடிந்து விட்டது. ஏற்கனவே பலமான வதந்தி இருந்தது போலவும், பலர் எதிர்பார்த்துப் பேசிக்கொண்டது போலவும் மஞ்சள்பட்டி ஜமீன்தாரே கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார். எதிர்பார்த்திருந்த உண்மைதான் அது! ஆனால் அதே உண்மை நிச்சயமாகவும் உறுதியாகவும் ஆகிவிட்டபோது சத்தியமூர்த்திக்குக் கவலையையும் க்சப்பையும் உண்டாக்கி விட்டது.

சம்பிரதாயப்படி ஆசிரியர்கள் புதிய தலைவருக்கு மாலை சூட்டித் தேநீர் விருந்தளிக்க வேண்டும். அடுத்த ஹாலில் தேநீர் விருந்துக்கும் கூட்டத்துக்கும் ஏற்பாடுகள் தயாராக இருந்தன.



மறைந்தவருக்கு இரங்கற் கூட்டம் நடந்து ஒரு வாரம் கூடக் கழியவில்லை! அதற்குள் புதிதாக வந்துவிட்ட தலைவருக்குப் பாராட்டுக் கூட்டமும் மாலையும் விருந்தும் தயாராகி விட்டன. அப்பப்பா! இந்த உலகத்துக்குத்தான் எத்தனை அவசரம்? வருத்தப்பட்டு இரங்குவதிலும் அவசரம்தான்! சந்தோஷப்பட்டுக் கொண்டாடுவதிலும் கூட அவசரம்தான்! வருத்தத்தையும் பரபரப்பாகக் கொண்டாடி முடித்து விடுகிறார்கள். சந்தோஷத்தையும் பரபரப்பாகக் கொண்டாடி முடித்துவிடுகிறார்கள்.

தேநீர் விருந்து முடிந்ததும் முதலில் பிரின்ஸிபால், ஜமீன்தார் கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவராக வந்ததைப் பாராட்டிப் பேசி, அவருக்கு மிகப் பெரிய மாலை சூட்டினார். அடுத்து இங்கிலீஷ் டிபார்ட்மெண்ட் சார்பில் மாலை சூட்டினார்கள். அடுத்து வார்டன் ஆகிய துணை முதல்வர் மாலை சூட்டினார். இதற்கும் அடுத்தபடியாகத் தமிழ்த் துறையின் சார்பில் காசிலிங்கனார் மாலை சூட்ட வேண்டும். காசிலிங்கனார் அன்று லீவு. கல்லூரிக்கே வரவில்லை. ''மிஸ்டர் சத்தியமூர்த்தி! பூ கம்...ஆன்...'' என்று சத்தியமூர்த்தியைக் கூப்பிட்டுவிட்டு, அவன் இருந்த பக்கமாகத் திரும்பினார் முதல்வர். அதற்கு இரண்டு நிமிஷங்களுக்கு முன்பு வரை அங்கே உட்கார்ந்திருந்த சத்தியமூர்த்தியை இப்போது திடீரென்று காணவில்லை. அவன் உட்கார்ந்திருந்த இடம் காலியாக இருந்தது. ''ஜஸ்ட் நௌ ஹி ஹாஸ் கான் அவுட்....ஸார்!'' என்று பக்கத்திலிருந்த பொருளாதார விரிவுரையாளர் எழுந்திருந்து முதல்வருக்குப் பதில் கூறினார். முதல்வரின் முகத்தில் ஈயாடவில்லை. ஜமீன்தாரோ அப்போதுதான் நிதானமாக மேஜை மேல் இருந்த ரோஜாப் பூ ஒன்றை எடுத்து அதன் இதழ்களை விரல்களிடையே கசக்கியபடி மெதுவாகப் புன்முறுவல் பூக்க முயன்று கொண்டிருந்தார். முகம்தான் புன்முறுவல் பூக்க முயன்று கொண்டிருந்ததே ஒழியக் கை விரல்கள் ரோஜாப் பூ மாலைகளின் பூவிதழ்களை அழுத்திக் கசக்கிக் கொண்டிருந்தன.

தேநீர் விருந்துக்குப் பின் நிகழ்ந்த பாராட்டுக் கூட்டத்திலே மாலை போட



வேண்டிய நேரத்தில் ஜமீன்தாரை வேண்டுமென்றே அவமானப் படுத்தியதுபோல் சத்தியமூர்த்தி வெளியே எழுந்திருந்து போய்விட்டது தெரிந்து கல்லூரி முதல்வரின் மனத்தில் பெருங் கோபம் மூண்டிருந்தது. ''இந்தத் தமிழ் டிபார்ட்மெண்ட் ஆட்களே இப்படித்தான்! இவர்களோடு எப்பவும் பெரிய தலைவலிதான்'' என்று மேடையில் பக்கத்தில் அமர்ந்திருந்த ஜமீன்தாருக்கும் கேட்கும் குரலில் முணுமுணுத்தார் முதல்வர். ஜமீன்தார் முகத்தில் புன்முறுவலோடு அமர்ந்திருந்தாலும் அவர் உள்ளம் சத்தியமூர்த்தியை நினைத்து எரிமலையாகக் குமுறிக் கொண்டிருந்தது. மதுரை—ஜெனரல் ஆஸ்பத்திரியில் 'சத்தியமூர்த்தியையும், குமரப்பனையும், முதன் முறையாகத் தான் சந்திக்க நேர்ந்த சம்பவம், மோகினி விஷயமாகச் சத்தியமூர்த்தியின் மேல் தனக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தி, இப்போது தன்னுடைய நிர்வாகத்தின் கீழ் வந்து விட்ட கல்லூரியில் தனக்கே மாலை போட விரும்பாதவனைப் போல் அவன் நடுக் கூட்டத்தில் எழுந்து வெளியே சென்றுவிட்ட அவமானம், எல்லாவற்றையும் சேர்த்து நினைத்து ஜமீன்தாரின் உள்ளம் கனன்று கொதித்தது. தேநீர் விருந்தும், பாராட்டுக் கூட்டமும் முடிந்து, ஜமீன்தார் வெளியேறிய போது அவருடைய கார் நின்றுகொண்டிருந்த இடம் வரை அவரோடு பக்கத்துக்கு ஒருவராக நடந்து சென்ற கல்லூரி முதல்வரும் துணை முதல்வரும் அவருடைய கோபத்துக்குத் தூபம் போட்டு வளர்த்துக் கொண்டு போனார்கள். ஜமீன்தார் காரில் ஏறிய பின்போ அதே காரியத்தை உடன் இருந்த கண்ணாயிரம் செய்யத் தொடங்கினார். ஜமீன்தாரின் கோபம் கணத்துக்குக் கணம் ஏறி உள் நெருப்பாய்க் கனலத் தொடங்கியது. படிப்பில்லாத மனிதனால் தன்னை இன்னொருவன் அவமானப்படுத்துகிறான் என்பதைப் பொறுத்துக் கொள்ள மட்டும் முடியவே முடியாது.

அதே சமயத்தில் கூட்டத்திலிருந்து பாதியிலேயே வெளியேறிச் சென்றிருந்த சத்தியமூர்த்தியோ ஏரிக்கரைப் பூங்காவில் தனிமையானதொரு மூலையில் உட்கார்ந்து, தான் செய்தது சரியா, சரியில்லையா? என்ற சிந்தனைக் குழப்பங்களில் மூழ்கியிருந்தான். அந்தப் பாவ வடிவத்தைத் தன் கைகளால் மாலை சூட்டிக் கௌரவிக்கும்படி நேர்ந்து விடாமல் தப்பித்து வந்து விட்டதற்காக அவனுடைய ஒரு மனம் அவனைப் பாராட்டியது. 'பொது வாழ்வில் கெட்டவர்களும், நல்லவர்களும் கலந்துதான் இருப்பார்கள். இன்னும் நன்றாகச் சொல்லப் போனால் சில சமயங்களில் கெட்டவர்கள்தான் அதிகம் இருப்பதாக ஒரு பிரமைகூட உண்டாகும். கெட்டவர்களை வெளிப்படையாகப் பகைத்துக் கொள்வதும், நல்லவர்களை வெளிப்படையாக ஆதரிப்பதும் கூடச் சில சமயங்களில் அப்படிச் செய்கிறவனுக்குத் தொல்லைகளை உண்டாக்கும். கெட்டவர்களை நல்லவர்கள் தொழ நேரிடும்போதும் போற்றிப் பணிந்து மாலை சூட்ட நேரிடும்போதும் கூட உலகியல் தெரிந்து அவற்றை முகம் சுளிக்காமல் செய்து தான் ஆக வேண்டியிருக்கிறது. ஜமீன்தாருக்கு மாலை சூட்ட நேர்ந்த சமயத்தில் கூடியிருந்த கூட்டத்தையும், சூழ்நிலையையும் உணர்ந்து விட்டுக் கொடுத்து முகம் கோணாமல் பட்டும் படாமலும் மாலையைச் சூட்டிவிட்டு வந்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் நீ வெறுத்து வெளியேறி வந்த பிடிவாதம் — யதார்த்த வாழ்வில் உன்னைப் பல விதங்களில் தொல்லைக்குள்ளாக்கப் போகிறது என்று இன்னொரு மனம் அவனைப் பயமுறுத்திப் பார்த்தது. அகிம்சை என்ற பேரிலோ, சாந்தம் என்ற பேரிலோ தீமையை அங்கீகரிக்கவோ, மன்னிக்கவோ பொறுத்துக் கொள்ளவோ செய்வதை அவனால் ஒரு சிறிதும் ஒப்புக் கொள்ள முடிவதில்லை. எருமை மாட்டின் முதுகில் மழை பெய்தாற்போல் தீமைகளையும் கொடுமைகளையும் உணரவோ எதிர்க்கவோ, தெம்பும் தைரியமும் இல்லாமல் பட்டும் படாமலும் வாழ்கிற பரவலான பெரும்பான்மை நாகரிகத்தைக் கடுமையாக வெறுக்கும் மனப்பான்மை அவனுள் உருவாகியிருந்தது. கடிவாளமிட்டுக் கண்கள் மறைக்கப் பெற்ற குதிரை ஓடுவதுபோல் ரூபாய் நோட்டுக்களால் கண்களை மறைத்துக் கொண்டு நல்லது கெட்டதைக் கவனிக்காமல் ஆசைச் சுமைகளைச் சுமந்து இழுத்து ஓடும் சராசரி மனிதர்களிலே தானும் ஒருவனாக இருந்துவிட அவனால் முடியாது. இந்த நூற்றாண்டில் வாழ்க்கையின் சித்தாந்தமே தனி. நிறைந்த படிப்பையும், பண்பையும் வைத்துக் கொண்டு பலர் திண்டாடும் போது சிறிதளவு சமயோசித புத்தியையும், சூழ்ச்சியையும் வைத்துக் கொண்டே சிலர் நன்றாக வாழ்ந்து விடுகிற காலம் இது! இந்தக் காலத்திலேயே சமயோசித புத்தி இல்லாமல் கூட்டத்தில் ஒருவரை விட்டுக்கொடுத்து

வெளிப்படையாகப் பகைத்துக் கொண்டு வெளியேறியிருக்கிற உன்னைப் போன்றவர்கள் பலசாலிகளின் விரோதிகளாகிறீர்களே?' என்று தன்னைப் பயமுறுத்தும் போலி மனப் பிராந்தியை எள்ளி நகையாடினான் அவன். நினைத்து நினைத்து வெறுத்தது கடைசியில் நிகழ்ச்சியாகவே நடந்து விட்டது. ஜமீன்தாரே கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவர் என ஒருமனமாகத் தேர்ந்தெடுத்து விருந்து வைத்து மாலை சூட்டி அந்த வைபவத்தைக் கொண்டாடியும் விட்டார்கள். அந்தக் கசப்பான உண்மையைத் தேநீர் விருந்து வைத்து நிரூபித்தாகிவிட்டது.

நன்றாக இருட்டியபின்பும் எழுந்திருந்து போகத் தோன்றாமல் ஏதேதோ சிந்தித்தபடி ஏரிக் கரையிலேயே உட்கார்ந்திருந்தான் சத்தியமூர்த்தி. மழை வந்துவிட்டது என்பதைப் புரியவைக்கிறாற்போல் இரண்டொரு தூற்றல் மேலே விழுந்த பின்புதான் அவன் அங்கிருந்து புறப்பட்டான். ஜமீன்தார் மல்லிகைப்பந்தல் கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவராகி விட்டார் என்ற செய்தி அதற்குள் ஊர் முழுவதும் பரவியிருந்தது. மழையில் நனைந்து விடாமல் இருப்பதற்காக அவசரமாக அறையை நோக்கி நடக்கத் தொடங்கியிருந்த சத்தியமூர்த்தியை நடு வழியில் அவனைப் போலவே அவசரமாக எதிரே வந்து கொண்டிருந்த சில மாணவர்கள் சந்தித்தார்கள். அந்த அவசரத்திலும் கூடத் துக்கம் விசாரிப்பது போல் அவர்கள் அவனிடம் விசாரித்த சேதி 'ஜமீன்தார் கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவராகி விட்டாராமே' என்பதுதான். சத்தியமூர்த்தியின் மனப்பான்மையை நன்கு புரிந்து கொண்ட மாணவர்களாகையால் இந்தப் புதிய நிர்வாகத் தலைமையினால் அவனும் மனம் வருந்தியிருப்பான் என்று எதிர்பார்த்தே விசாரிப்பது போலிருந்தன அந்த மாணவர்களின் சொற்கள். மல்லிகைப்பந்தல் கல்லூரியின் மாணவர்களிடம் உண்டாகியிருந்த புத்துணர்ச்சிக்கும் சுறுசுறுப்புக்கும் இலட்சியக் கட்டுப்பாடுகளுக்கும் சத்தியமூர்த்தி நெருங்கிய காரணமாகவும் தலைவனாகவும் இருந்ததனால், பெரும்பாலான மாணவர்கள் அவனை ஒரு நம்பிக்கையாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். புதிய தலைவர் பற்றிய விசாரிப்பை மாணவர்களும் வருத்தத்தோடு விசாரித்துப் போன பின் லேக் அவென்யூவுக்குப் போய் அறையை அடைகிறவரை அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு போனான் அவன். மழையினால் கடையைச் சீக்கிரமே பூட்டிக்கொண்டு வந்திருந்த குமரப்பனும் தேநீர் விருந்து முடிந்து கல்லூரியிலிருந்து நேரே திரும்பியிருந்த தாவர இயல் விரிவுரையாளர் சுந்தரேசனும் கூட அப்போது தங்களுக்குள் இதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள் என்பது உள்ளே நுழைந்த சிறிது நேரத்துக்குள்ளாகவே சத்தியமூர்த்திக்குத் தெரிந்தது. சத்தியமூர்த்தியைப் பார்த்ததும் பேச்சை நிறுத்திவிட்டு, ''என்னப்பா? துரதிர்ஷ்டம் தேநீர் விருந்தோடு ஆரம்பமாகியிருப்பதாகக் கேள்விப்பட்டேனே. நிஜம் தானா?'' என்று கேட்டான் குமரப்பன். 'ஆமாம்' என்று சுருக்கமாகப் பதில் வந்தது சத்தியமூர்த்தியிடமிருந்து.

''என்ன சார் இது? திடீரென்று இருந்தாற் போலிருந்து அப்படி எழுந்து போய்விட்டீர்கள்? பிரின்ஸிபாலுக்கு உங்கள் மேல் சொல்ல முடியாத

பொன் விலங்கு

கெட்டவர்களை வெளிப்படையாகப் பகைத்துக் கொள்வதும், நல்லவர்களை வெளிப்படையாக ஆதரிப்பதும் கூடச் சில சமயங்களில் அப்படிச் செய்கிறவனுக்குத் தொல்லைகளை உண்டாக்கும்.

கோபம். கடைசியில் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக் கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவர் என்ற முறையில் ஜமீன்தார் பேசினார்'' என்று சுந்தரேசன் விவரிக்கத் தொடங்கினார்.

''என்ன பேசினார் அவர்?'' என்று வெறுப்புடனும், சற்றே அதைத் தெரிந்து கொள்ளும் ஆவலுடனும் வினவினான் சத்தியமூர்த்தி. சுந்தரேசன் சிரித்துக் கொண்டே இந்தக் கேள்விக்குப் பதில் சொன்னார்:

''ஜமீன்தாரோ இல்லையோ? ஆள் சரியான முரட்டுப் பேர்வழி போலிருக்கிறது. ஆட்கள் கைகட்டி வாய் பொத்திப் பயத்தோடு விலகி நிற்கிற மாதிரி பேசும் பாஷைகள் கூடப் பக்கத்தில் நெருங்க அஞ்சுகின்றன. ஆங்கிலம் அருகில் வருவதற்கே பயப்படுகிறது. தமிழ் கொஞ்சம் பக்கத்தில் வருகிறது. ஆனால் மனிதர் அதைச் சித்திரவதை செய்து விடுகிறார். ''நீங்கல் என்னைப் பாராட்டிக் கௌரவித்தீர்கள். பூபதி


உயிரோடிருக்கும் போதே இந்தக் காலேஜ் பொறுப்பை நான்தான் ஏற்றுக்கொல்லணுமின்னு ரொம்ப ரொம்பச் சொல்லிக் கொண்டிருந்தான். நான்தான் வேண்டாமின்னு சொல்லி மறுத்து வந்தேன். இப்போது இந்தப் பொறுப்பு என் தலையிலே விழுந்திருச்சு. உங்கலில் சில ஆசிரியர்கல் பணிவும் மரியாதையும் தெரியாதவர்கலாக இருக்கிறீர்கல். திருந்திக் கொல்லாவிட்டால் நல்லதில்லை. உங்கலுக்கு என் நன்றி. வாழ்த்துக்கல்'' என்று சுந்தரேசன் வெறுப்புக் கலந்த உற்சாகத்தோடு அதை 'இமிடேட்' செய்தான்.

''முதற் கூட்டத்தில் நாலைந்து நிமிஷம் பேசுவதற்குள்ளேயே இப்படி ஆசிரியர்கள் தலையில் நிறையக் கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டார் என்று சொல்லுங்கள்'' என்று குமரப்பன் சுந்தரேசனிடம் குத்தலாகக் கேட்டான். சுந்தரேசன் இதைக் கேட்டுப் பெரிதாகச் சிரித்தார்.

''பெரிய மனித லட்சணங்களில் இதுவும் ஒன்று குமரப்பன்! ஒரு பெரிய மனிதன் என்றால் குறைந்தபட்சம் தாய் மொழியில் நாலு வாக்கியம் தப்பாகவாவது பேசத் தெரிந்திருக்க வேண்டும். அல்லது தாய்மொழியில் ஒன்றுமே பேசவோ எழுதவோ தெரியாதிருக்க வேண்டும். அது இன்னும் உத்தமம். மஞ்சள்பட்டி ஜமீன்தாரோ ரொம்ப ரொம்பப் பெரிய மனிதர். அதனால் தான் தாய்மொழியும் அவருக்கு நன்றாகத் தெரியாது. ஆங்கிலமும் தெரியாது'' என்று சத்தியமூர்த்தி குறுக்கிட்டுப் பேசினான். அவனுடைய இந்தப் பொய்ப் புகழ்ச்சியில் வெறுப்பும் அலட்சியமும் தொனித்தன. அப்போது குமரப்பன் வேறொரு குறிப்பை நினைவூட்டினான்:

''அதிருக்கட்டும் சத்தியம்! ஜமீன்தார்வாளுடைய சொற்பொழிவில் இன்னொரு குறிப்பும் இருக்கிறது. பணிவையும், மரியாதையையும் பற்றி அவர் ஞாபகப்படுத்திப் பேசியிருக்கிறாரே; – அது உனக்காகத்தான். நீ பாதிக் கூட்டத்தில் அலட்சியமாக எழுந்து சென்றுவிட்டதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் அவர் அப்படிப் பேசியிருக்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது.''

''தோன்றுவதாவது ஒன்றாவது? சத்தியமூர்த்திக்காகத்தான் ஜமீன்தார் அப்படிப் பேசியிருக்கிறார் என்று கூட்டம் முடிந்து வெளியேறியபோது ஒவ்வொரு ஆசி'யரும் தங்களுக்குள் சொல்லிக் கொண்டு வந்தார்களே?'' என்றார் சுந்தரேசன். ''நீங்களும் உங்கள் வெறுப்பை அவ்வளவு வெளிப்படையாக அங்கே காண்பித்திருக்க வேண்டாமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். கூட்டங்களில் நமக்கு வேண்டாதவர்களைப் புகழ நேர்டுவதும் நம்மால் வெறுக்கப்படுகிறவர்களுக்கு நம் கைகளாலேயே மாலை சூட்ட நேரிடுவதும், இன்றையப் பொது வாழ்வில் தவிர்க்க முடியாத காரியங்கள். நூற்றுக்குத் தொண்ணூறு பாராட்டுக் கூட்டங்கள் அப்படித்தான் நடைபெறுகின்றன. 'இரகசியமான பகைமையும், பகிரங்கமான உறவும் தான் இன்றைய வாழ்வில் சாமர்த்தியமாக வாழ்வதற்குக் கருவிகள்' என்று இராசதந்திரிகள் மட்டுமல்லாமல் சாதாரணப் பொதுமக்களும் கூடப் புரிந்துகொண்டிருக்கிற காலத்தில் நீங்கள் மட்டும் அதைப் புரிந்து கொள்ளத் தவறியிருப்பது வருந்தத் தக்கது'' என்று சுந்தரேசனே மனப் பூர்வமான அனுதாபத்தோடு மேலும் கூறினார். சத்தியமூர்த்தி இதைக் கேட்டு மறுமொழி ஒன்றும் கூறவில்லை. நண்பர்களுக்குள் இந்த விவாதம் அன்று மாலை இவ்வளவில் முடிந்து விட்டது. மூவரும் சேர்ந்து இரவு



உடல் வளைவுகளுக்கேற்றப்போல் அமுக்கப்பட்ட ஆசனமும், முதுகுச்சாய்மானமும் மகிழ்ச்சியூட்டும் வசதியை அளிக்கக்கூடிய உருதியான எஃகு குழாயினுல் செய்யப்பட்ட உலோகப் பாகங்களெல்லாம் வாட்டி செய்க்கும் முறையில் எனமல் பூசப்பட்டுத் துருப்பிடிக்காமல் செய்யப்பட்ட நாற்காலியை வாங்குங்கள்.

சிறந்த தரத்தில் அடுக்கடுக்காக

- ஒவ்வொரு உலோகப் பகுதியும் 'பான்டரைஸ்' செய்யப்பட்டது. துருப்பிடிக்காமல் வாட்டி எனமல் பூசப்பட்டது.
- ஆசனம் மற்றும் முதுகுச் சாய்மானத்தின் அமைப்பு அதிக வசதியை அளிக்கிறது.
- ஈரத் துணியைக்கொண்டே துடைத்து எளிதில் சுத்தமாகவைத்துக்கொள்ளலாம்.
- மடக்குவதற்கு விசேஷ அமைப்பு.
- வழுக்கிவிடாத, தரையைக் கீறாத, ரப்பர் அடிகள் கொண்டது.
- பல்வேறு வர்ணங்களில் கிடைக்கக் கூடியது.

CROMELITE
MANUFACTURING

ஆயிரம் காலம்
ஆள்வதற்கு



தயாரிப்போர்:
க்ரோம் லைட் (இந்தியா) பிரைவேட் லிட்.
பி-30 இந்தியா எக்ஸ்சேன்ஜ் ப்ளேஸ், கல்கத்தா-1

உணவுக்குப் போய்விட்டு வந்தார்கள். தூங்குவதற்கு முன் அவர்கள் பேசிக் கொண்டிருந்த விஷயம் அன்றைய காலைத் தினசரிப் பத்திரிகைகளில் 'நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இறந்து போய்விட்டாரா, இல்லையா?' என்பதைப் பற்றி விசாரணைக் குழுவினர் கூறியிருந்த சில கருத்துக்களைப் பற்றிய தாயிருந்தது. சத்தியமூர்த்திக்கும் குமரப்பனுக்கும் 'சுபாஷ் போஸ்' என்றால் உயிர். ''பிரதேசங்களை இழப்பதும் தோற்பதும் கூட ஒரு தேசத்துக்குப் பெரிய நஷ்டம் இல்லை. சுபாஷ் போஸைப் போல் உணர்ச்சி மிக்க ஒரு தலைவனை இழப்பதுதான் பெரிய நஷ்டம்'' என்று குமரப்பன் போஸைப் பற்றிப் பேசும் போதெல்லாம் வாய்க்கு வாய் கூறுவான். எதற்கும் அலட்சியமாகச் சிரித்து விடத் தெரிந்த அந்தத் துணிவு மிக்க 'கார்ட்டூனிஸ்ட்' போஸைப் பற்றிப் பேசும்போது மட்டும் நெகிழ்ந்து கண் கலங்கி விடுவான்.

''இராணுவ ஞானமும் தேசத்துக்காகக் கொதிக்கிற பரந்த தன்மானமும் உள்ள ஒரு பெரிய தலைவன் எந்தச் சமயத்தில் இந்தத் தேசத்துக்குத் தேவையோ அந்தச் சமயத்தில் இல்லாமற் போய்விட்டது நம்முடைய துரதிர்ஷ்டம்'' என்று சத்தியமூர்த்தியும், குமரப்பனும் தங்களுக்குள் அடிக்கடி போஸைப் பற்றிப் பெருமையாகக் கூறிக்கொள்வார்கள். 'ஃபாதர் ஆஃப் இந்தியன் ரெவல்யூஷன்' (இந்தியப் புரட்சியின் தந்தை) என்று போஸைப் பற்றி ஓர் அறிஞர் கூறியிருப்பதைச் சத்தியமூர்த்தி தன் சொற்பொழிவுகளில் மாணவர்களுக்கு எடுத்துக் கூறுவதும் உண்டு. அன்றிரவு பேசிக் கொண்டிருந்தபோது சுந்தரேசன் மட்டும் இந்தக் கருத்தை ஒப்புக்கொள்ளத் தயங்கினாற்போலச் சிறிது மாறுபட்டார். ''மேடைகளில் பேசுவதையும், கட்டிடங்களைத் திறந்து வைப்பதையும் தவிர வேறு விதமான செயல் துணிவில்லாத பதவி மோகமுடையவர்களையே இன்று எங்கும் பரவலாகக் காண்கிறோம். போஸைப் போல் ஒரு பிறவி வீரர் நம்மிடையே இப்போது இருப்பாரானால் புதுமைகள் நிகழக் காணலாம்'' என்று சத்தியமூர்த்தி சுந்தரேசனுக்கு அழுத்திச் சொன்னான். சுந்தரேசன் வேறு ஏதோ காரணங்களைச் சொல்லி இதை மறுத்துப் பேச முயன்றார். இதே விஷயத்தைப் பற்றியே மேலும் விவாதித்துக் கொண்டிருந்து விட்டு நண்பர்கள் அன்றிரவு உறங்கி விட்டார்கள்.

மறு நாள் காலை சத்தியமூர்த்தி கல்லூரியில் நுழைந்ததும், மைதானத்திலும் — அலுவலகத்திலும் — ப்ரேயர் கூட்டத்திலும் — ஆசிரியர்கள் அறையிலும் — அங்கங்கே அவனைச் சந்தித்த ஆசிரியர்கள் எல்லோரும் அவனருகே பூகம்பத்தையோ, எரிமலையையோ அவனோடு சேர்த்துப் பார்ப்பது போல் பயத்தோடு பார்த்தார்கள். 'முதல் நாள் தேநீர் விருந்தின்போது அவன் ஜமீன்தாருக்கு மாலை சூட்ட வேண்டிய வேளையில் எழுந்து வெளியே சென்ற பெருங் குற்றத்துக்காக பிரின்ஸிபால் அவனை என்ன செய்யப் போகிறார்?' என்று அறிந்து கொள்ளவும், காணவும் அத்தனை ஆசிரியர்களும் ஆவலாயிருப்பதாகத் தெரிந்தது. ஆனால் சத்தியமூர்த்தியோ வழக்கத்தை விட அதிகமாக நிமிர்ந்து நடக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டவனைப் போல் கல்லூரி எல்லையில் நிமிர்ந்து நடந்து கொண்டிருந்தான். அன்று முதல் பாட வேளை நேரத்திலேயே அவனுக்கு முக்கியமான வகுப்பு இருந்தது. சத்தியமூர்த்தியை முதல்வர் கூப்பிடுவதாகப் பாதி வகுப்பில் கல்லூரி ஊழியன் வந்து கூப்பிட்டான். ''இப்போது வருவதற்கில்லை. வகுப்பை முடித்துவிட்டு வருகிறேனென்று சொல். மறுபடியும் நடு வகுப்பில் உள்ளே நுழைந்து என்னைக் கூப்பிடாதே!'' என்று பதில் சொல்லி அந்த ஊழியனைத் திருப்பி அனுப்பிய பின் ஒன்றுமே நிகழாதது போல் பழைய புன்முறுவலோடு மாணவர்கள் பக்கமாகத் திரும்பி வகுப்பைத் தொடர்ந்தான் சத்தியமூர்த்தி. மறுபடியும் வேண்டுமென்றே யாரோ தூண்டிவிட்டுச் சொல்லியனுப்பியது போல் அதே ஊழியன் பத்து நிமிஷங் கழித்து வகுப்பிற்குள்ளே வந்து ''சார் பிரின்ஸிபால் உடனே கூப்பிடறாங்க'' என்று தொந்தரவு செய்தான். மாணவர்களுக்கு அப்போது அந்த ஊழியனை அறைந்து விடலாம்போல் எரிச்சலாக இருந்தது. 'ஹிஸ்டரி ஆஃப் லாங்வேஜ் அண்ட் லிட்டரேசர்' (மொழி இலக்கிய வரலாறு) வகுப்பை அன்றுதான் நடத்தத் தொடங்கியிருந்தான் சத்தியமூர்த்தி. மொழி இலக்கிய வரலாற்றைப் பற்றி அவன் அழகுறத் தொடங்கியிருந்த சொற்பொழிவு பாதியில் நிற்கும்படி இரண்டு முறை குறுக்கிட்டுப் பிரின்ஸிபால் கூப்பிடுவதாக அந்த ஊழியன் தொல்லைப்படுத்தியதை வகுப்பில் யாராலும் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சத்தியமூர்த்திக்குப் பொறுமை பறி போய் விட்டது. (தொடரும்)


பருத்தி
ஆடைகளில்
சிறந்தவை தேவையா?
இந்த
அடையாளத்தைப்
பார்த்து
வாங்குங்கள்.
சுருக்கம் அற்ற
பருத்தி ஃப்ராக்குகள்
கண்ணுக்கினிய
புடவைகள் தவிர
புதுமைக் கருக்கு
நீடித்திருக்க
இவை சிறந்தவை.
வாங்குங்கள் . . .
ராஜேஷ்
டெக்ஸ்டைல்ஸ்
ஒவ்வொரு தடவையும்!
ராஜேஷ்
டெக்ஸ்டைல்
மில்ஸ் லிட்.,
பெர்குஸன் ரோட் பம்பாய்-13.



கருநிலவு

ஆர். சூடாமணி

"எங்களுடன் வந்து இருந்து விடேன், ரகு. இப்படித் தனியாய், உடம்புக்கு வந்தால் கூடக் கவனிக்க ஆள் இல்லாமல் கிடக்க நீ என்ன அநாதையா? நாங்கள் இல்லையா உனக்கு?"

சாய்வு நாற்காலியில் முனகியவாறு படுத்திருந்த ரகு விலகிய பார்வையைத் திருப்பினான். எதிரே கவலையே வடிவாக அண்ணன். அவன் அன்பைச் சந்தேகிக்க முடியுமா?

ரகுவின் கண்கள் பாஸ்கரனைத் தாண்டிச் சரிந்து அருகில் நிலைத்தன. வழக்கமான புன்னகையோடு அருணா நின்றிருந்தாள்.

"அண்ணா இவ்வளவு சொல்கிறார். எங்களுடன்தான் வாருங்களேன் ரகு!" என்றாள்.

நெகிழ்ச்சி, குரோதம், தாபம் எல்லாம் ஒருசேரத் துடிக்க பார்வையில் ரகு அவளைப் பார்த்தான். இதயம் வேகமாக ஓடியது. அவள் முகத்தினின்று அவன் பார்வை அகலவில்லை. அந்த எழில் முகத்தை அடைத்துக் கொண்டு நீண்டு கருத்து விரிந்து— அவை கண்கள்தானா? வெள்ளிக்குழம்பாக ரேகை பாய்ந்து ஓடிய ஒளி வெள்ளத்தினிடை மிதக்கும் இரண்டு இருட் சுடர்கள். இரண்டு தேங்கிய முத்துத் துளியில் அசைவுதோறும் வைரமொளி மின்னும் கீற்றொளி போல் அவை பொறியை உதிர்க்கும்போது அதன் தீக்கசிவில் அவன் இதயம் துடிக்கத் துடிக்க ஒட்டிக் கொண்டது. முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"வருகிறாயா ரகு?"

"இல்லை பாஸ்கர்."

"இதோ பார்...."

"எனக்கு இங்கேதான் சௌகரியம். நீ இன்னும் எத்தனை காலம்தான் கேட்டுக் கொண்டிருக்கப் போகிறாய்? 'இல்லை' என்ற முடிவான பதிலை நான் எப்போதோ சொல்லியாகிவிட்டது."

"உடம்பு சரியில்லாமல் படுத்துக்கொள்ளும்போது...."

"மனிதன் என்றால் உடம்புக்கு வராமலேயா இருக்கும்? தலைவலி அதிகமாய்ப் போகவே ஏதோ இலேசாக ஜுரம் அடிப்பது போல் இருக்கிறது. அவ்வளவுதான். இதற்கு இந்தப் பாடுபடுத்தினால்....!"

"இப்படி நிஷ்டூரமாய்ப் பேசாதீர்கள்."

மீண்டும் அருணாவின் குரல். இரக்கத்துடன் மென்மை குழைந்து காதில் இறங்கிய அமுத ஒலியிலே அவன் உடலெங்கும் விஷம் பரவியது. கரை காணாத ஆத்திரத்தோடு ஒரு நிமிஷம் பாஸ்கரனைப் பார்த்தான்.

"ரகு! நீ ஏண்டா என்னிடம் இத்தனை கோபமாயிருக்கிறாய்?"

பாஸ்கரனின் குரல் கெஞ்சுவது போல் இருந்தது. ரகு உணர்ச்சி தாளாமல் தத்தளித்தான். தன்னை ஒரு நல்ல சகோதரனாக இருக்கவிடாத அண்ணன் மேல் சீற்றம் எழுவதில் வியப்பென்ன? அவன் எத்தகைய வேதனையில் இருக்கிறான் என்று பாஸ்கரனுக்கு என்ன தெரியும்? தன் வீட்டுக்கு அழைக்கிறான் ஏதும் புரியாமல். நிஷ்களங்கமாய் அழைப்பு விடுக்கிறான். அதன் தூய்மையிலே ரகுவின் உணர்ச்சிகளுக்கு ஒரு தடை. கூசி ஒதுங்கிக் கொள்ளச் செய்த ஓர் அவசரம், அவசியம். அண்ணன் வீட்டில் அவன் சென்று எப்படி வாழ முடியும்? ஒவ்வொரு நாளும் அன்றாடப் பழக்கத்தின் நெருக்கத்தில் மனப் போராட்டத்தில் வலிமையைத் தோற்று, நெகிழ்ச்சியின் சமீபத்தில் தினம் தினம் வாழத் துணியும் அளவுக்கு அவனிடம் விரக்தியோ சுய நம்பிக்கையோ இல்லையே.... மீண்டும் பார்வை அண்ணனைத் தாண்டி அவளை எட்டியது. அந்தக் கண்கள். அப்பப்பா என்ன கருமை! தண்மையும் போதையும் சேர்ந்து உருக்கொண்ட பொருளாக மலராய்ச் சிந்தி மயக்கத்தைத் தரும் கருநிலவு.

"ரகு! நான் சொல்வதைக் கேளுங்கள்.."

"நீ சும்மாயிரு அருணா!" அவன் கோபமாய் இரைந்தான். "என் அண்ணனும் நானும் பேசுகிற விஷயத்தில் நீ குறுக்கிட வேண்டாம்."

அருணா மௌனமானாள். பாஸ்கரன் விசனத்தோடு யோசனையில் ஆழ்ந்தான். ஊருக்குள்ளேயே அண்ணன் குடித்தனம் வைத்திருக்கும்போது இந்த ரகு ஏன் அவர்களுடன் சென்று வசிக்காமல் தனியாய் விடுதி எடுத்துக் கொண்டிருக்க வேண்டும்? தன்னிடம் முன்பெல்லாம் அன்பும் மரி

யானதையும் கொண்டிருந்த தம்பிதானே இவன். தனக்குத் திருமணமான பிறகு தான் இவன் இப்படி மாறிவிட்டான். ஏன்? அருணாவை இவனுக்குப் பிடிக்கவில்லையா? அவளுடன் பேசும்போது குரலில் எப்போதும் ஆத்திரம். அருணா என்றுதான் அவளை அழைப்பான், யாருக்கோ சவால் விடுகிற மாதிரி. அவளை 'மல்லி' என்று அழைக்கக் கண்டிப்பாய் மறுத்துவிட்டான்.

''இதுதான் உன் முடிவா ரகு?''

''ஆமாம். இப்போது இரண்டு பேரும் என்னைத் தொந்தரவு செய்யாமல் கிளம்பிப் போகிறீர்களா?''

ஆவேசமாய் அவன் இரைந்தான். தலைகுனிந்தவாறு அவர்கள் சென்றுவிட்டார்கள்.

புத்தகங்களிடையே அறிவை மலரவிட்டு மெய்மறந்திருந்த நாட்களில் அந்தச் சுலோகம் நெஞ்சில் வேர் கொண்டதெல்லாம் நிழலில் ஆடியது.

கவி ஊமையாய் இருந்தவர். மூக கவி என்றே புகழ் பெற்றவர். பிறகு காஞ்சியில் காமாட்சி தேவியின் அருட்பார்வை வீசவும் அடிபட்டிருந்த உணர்ச்சிப் பெருக்கினின்று தெறித்து, 'மூக பஞ்சசதி' என்னும் ஐந்நூறு சுலோகங்களாகப் பக்திப் பிரவாக மெடுத்தது. எல்லாம் காமாட்சிக்குத் துதிகள்.

அவன் படித்துக் கொண்டே சென்றான் அன்னையின் கண் வர்ணனை. அதில்தான் எத்தனை பாவனைகள், கற்பனைகள், வண்டு, குவளை, இரவு, யமுனை, மேகம், சிங்கம், ஆடைமுகில், அங்குசம், மாமருந்து, காலை மலர், கற்பக மரம் — இப்படி யெல்லாம் பெருகிப் பொழிந்த அந்த உவமைப் பூங்காவிலே கருத்தை நீட்டி ரகு சட்டென்று பற்றிக் கொண்ட தன் மலர் ''ஸ்யாமா சந்திரிகா''. தன்னுருவும் இன்னொளியும் பாட்டுவதால் அந்தக் கடாட்சம் சூழலிலும் வீசும் ஒரு கரிய நிலவாக இலங்குகிறதாம்.

சுவைக்கச் சுவைக்கச் சிந்தையில் தேனூறும் அந்தக் கற்பனையில் அவன் பித்தனாகி விட்டான்.

மனத்தில் ஊறிவிட்ட அந்த அழகுப் பார்வை முழுதும் பரவிவிட்டது. கருநிலவு....

திடீரென்று ஒரு நாள் அந்தக் கருநிலவு அவன் கண் முன்னே நின்றது. உள்ளம் புல்லரிக்க அவன் அதிர்ந்து விட்டான்.

என்ன கண்கள்! இப்படியும் ஒரு கருமை உண்டா? அந்தக் கருமை மயக்கமூட்டியது. ஆனால் அது இருளல்ல. அதன் அசைவில் முத்துக்கள் சரமாடின. மின்னல்கள் புன்னகை செய்தன. என்ன விந்தை! உலகின் ஒளிப் பிரவாகமெல்லாம் ஒரு சுடர் வீச்சாக அந்தக் கருமையுள் புகுந்துவிட்டது. அதன் ஆழமும் விரிப்பும் நாற்புறமும் சூழ்ந்துகொள்ள அவன் அடிமையானான்.

காவிய வர்ணனைக்கேற்ப ஒரு நிஜ அழகு.

பிறகு அடிக்கடி அக் காட்சி கிட்டியது. தெருவிலோ, பஸ் ஸ்டாண்டிலோ பூங்காவிலோ, கடற்கரையிலோ அவன் முனைந்து அக் காட்சியைத் தேடிக் கொண்டான். ஊன்றிய கவனத்தினால் அப் பெண்ணின் பழக்க வழக்கங்கள்; போகுமிடங்கள், அவனுக்குத் தெரிந்து போயின. காத்திருந்து நின்று தொலைவிலிருந்தே அவள் அறியாமல் பார்த்து ஆனந்திப்பான். இத்தகைய ஓர் அழகுப் பிம்பம் இருக்க முடியுமா? உலகத்தின் சிகரத்தில் ஒரு புது விளக்கை ஏற்றி வைத்தது போல் ஒரு திடீரென்ற தோற்-



நம். அவள் நிழல் கூட அவன் பார்வைக்கு ஒளியூட்டியது. அருகில் உள்ளவர்கள் அழைக்கும் குரல்களிலிருந்து மெள்ள மெள்ள அவள் பெயரையும் தெரிந்து கொண்டான். பிறகு இன்பத்தின் பெயரே அருணா ஆயிற்று.

பெரியவர்களிடம் தன் ஆவலை வெளியிட அவன் விரும்பிய கட்டத்திலே —

''நல்ல இடம். அழகான பெண். கௌரவமான குடும்பம். இதை எப்படியாவது முடித்து விட வேண்டும். ஜாதகம் கூடப் பார்க்க வேண்டாம். பையன் பெண்ணைப் பார்த்துச் சரியென்று சொல்லி விட்டால் போதும்.''

இவ்வாறெல்லாம் குடும்பத்துப் பெரியவர்கள் பேசிக் கொண்டபோது உள்ளத்தில் மூண்ட சூறாவளியை நினைத்துப் பார்க்கவும் முடியவில்லையே! என்ன அநியாயம்! வாய்ப்புக் கை நழுவிப் போவது, பிறப்பின் ஒரு சிறு, தற்செயலான மாறுதலின் காரணமாக!— இரண்டு வருஷங்கள் பிந்திப் பிறக்காமல் அவன் பாஸ்கரனுக்கு முந்திப் பிறந்திருந்தால்! முதல் பிள்ளை என்ற முதல் உரிமை அவனுக்கு அல்லவா கிட்டியிருக்கும்!

அவன் துடித்து அமர்ந்தான். வீட்டில் குதூகலம் குதித்து வந்தது. மங்கள இசை ஒலித்தது. மாவிலைகள் ஊஞ்சலாடின. கரு நிலவு அண்ணனின் உலகின்மீது குளுமையாய் ஒளி வீசி எழுந்தது.

அவன் 'மன்னி' என்று அழைக்கக் கண்டிப்பாய் மறுத்து விட்டான்.

காலம்.....நாட்கள்.....மாதங்கள்......
எல்லாம் சிதறிய கண்ணாடித் துண்டங்கள். உருவின் அழிவு. இரும்புச் சேர்த்து ஒன்றுக்க முடியாத ஓர் இழப்பு. ஆனால் சிந்தை அதிலிருந்து மீளத் தெரியாமல் தயங்கியது. நினைக்காமல் இல்லை, பார்க்கக்கூடாது என்று விதித்ததையே தேடிக் கண்கள் அலைந்தன. உணர்ச்சியில் இல்லாத கட்டுப்பாட்டைச் செயலில் பாதுகாத்துக் கொண்டான்; கூடிய வரை அண்ணனின் வீட்டுக்குப் போவதே இல்லை. ஆயினும் ஏதோ பிடி நழுவுவது போன்ற தவிப்பு — தனக்குள்ளேயே கனவு கலை வளர்த்துக் கொண்ட போதை அது.

கண்ணை மூடினால் அவள்தான் நின்றாள். வேதனையுடன் ஆத்திரமும் சேர்ந்தது. அவன் முந்திப் பிறந்திருந்தால்? அந்தக் கைப்பை நெஞ்சிலிருந்து அகற்ற முடியவில்லை. நாளுக்கு நாள் உள்ளம் அமைதியை இழந்தது; உடல் ஓலமிட்டது.

சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்தான். யோசனைகளின் முடிவற்ற சுழலில் தலை நோவு அதிகரித்திருந்தது. வெளியில் கொஞ்ச நேரம் சுற்றி விட்டு வந்தால் இதமாய் இருக்கும் போல் இருந்தது. சைக்கிளில் ஏறிக் கிளம்பினான்.

அந்த நாள் எப்படி முடியுமென்று யார் நினைத்தார்கள்?

அடியற்ற இருட்டிலிருந்து மெல்ல மெல்ல உணர்வு பிரிந்து வெளி வருவது போல் அவன் மூர்ச்சை தெளிந்தது. சைக்கிள் எங்கே? ஏதோ ஒரு பெரும் கனம் தன்னை மோதித் தள்ளிய உணர்வு யாரோ வெகு தொலைவிலிருந்து உயிர்ப்பது போல் நெஞ்சைத் தீண்டியது. கண்ணைத் திறக்க முயன்றான்; முடியவில்லை. இமை



ஒருவர்: போன தீபாவளி அன்று என் மனைவியின் கண்ணில் - தூசிப் பட்டே பதினைந்து ரூபாய் செலவாகி விட்டது!



மற்றவர்: பரவாயில்லையே! நீ அதிர்ஷ்டக்காரன்தான்! என் மனைவியின் கண்களில் இந்தத் தீபாவளிக்கு முதல்நாள் ஒரு புடவை படப் போய், முந்நூறு ரூபாய்க்குப் பிடித்தது சனியன்!

றென்று நிலில் கொளியது. 'ஐயோ!' என்று கதறியவாறு கண்கள் மீது கனத்த ஏதோ ஒன்றைப் பற்றி இழுக்க ஆரம்பித்தன.

''ரகு! அப்படியெல்லாம் செய்யாதேடா!''

பாஸ்கரனின் குரலா? எங்கே இருக்கிறான் அவன்? தன்னையறியாமல் உள்ளம் இன்னொரு காட்சிக்கு மோப்பம் பிடித்தது தவறு என்ற தடையினூடே கருக்கென்று தைக்கும் ஒரு கூரிய ஆவல்.

''அமைதியாயிருங்கள் ரகு!'' ஆமாம், அவள் குரல்தான். அந்த உருவம் எங்கே? கரு நிலவின் காந்தியைக் காண முடியாமல் அவன் முன் எல்லாம் இருட்டாயிருக்கிறதே?

சிறிது சிறிதாய்ப் பாஸ்கரன் விஷயத்தை விளக்கினான். ரகுவின் நெஞ்சில் உண்மைகள் பதிந்தன. தெருவில் ஒரு பஸ்ஸும் கட்டை வண்டியும் நெருங்கிய வேகத்தில் இடையில் போன சைக்கிளின் அலங்கோலம் — மூர்ச்சை — ஆஸ்பத்திரி — வைத்தியர் — அண்ணனின் பதற்றம் — கண்களில் அடிபட்டு விட்டதால் கண்ணுக்குத் தேவையாகி விட்ட இரண்டு மாத சிகிச்சை — அவற்றுக்குப் பின் கேட்டது என்ன? காதில் சரியாக விழுந்ததா?

''வேண்டாம், வேண்டாம். கூடாது. நான் ஒப்புக் கொள்ள மாட்டேன், எனக்கு ஒன்றும் இல்லை!'' என்று அவன் அலறினான்.

''உளறாதே. இரண்டு மாதம் நீ நர்ஸிங் ஹோமில் இருக்க வேண்டும். அநாதை மாதிரி விட்டு விடுவோமா? பகலில் அருணா துணையிருப்பாள். இரவில்...?''

''ஐயோ, அவள் வேண்டாம்....''

''பாவம், அவள் மேல் உனக்கு என்ன வெறுப்பு? உனக்கு உடம்பு மறுபடியும் நன்றாக வேண்டும் என்று அவள் எத்தனை கவலைப்படுகிறாள் தெரியுமா? அவள் வந்து பார்த்துக் கொண்டால்தான் நிம்மதி.''

''பாஸ்கர், இதோ பார்......''

''இந்தத் தடவை உன் பேச்சை நாங்கள் கேட்கப் போவதில்லை ரகு. இப்போது உன் நிலை உண்மையில் கவலைக்கிடமாகி விட்டது.''

''நான் தினமும் வந்து பகல் நேரம் முழுவதும் இருந்து அவரைப் பார்த்துக் கொள்கிறேன், நீங்கள் கவலைப்படாதீர்கள்'' என்றாள் அருணா தன் கணவனிடம்.

''ஐயோ, வேண்டாம், வேண்டாம், நான் சொல்வதைக் கேளுங்கள்.''.

''அலட்டிக் கொள்ளாமல் பேசாமல் இரு. ரகு. உடல் நிலை தெரியுமல்லவா? நான் தீர்மானம் செய்தாகி விட்டது. நீ அநாவசியமாய் இரையாதே. உடம்பு நலிந்து விடும்.''

செயலிழந்து அவன் கைகள் ஆவேசமாய்ப் படுக்கை விரிப்பைப் பற்றி இழுத்தன. தலை இங்குமங்கும் புரண்டது. உதடுகள் இறுகின. அவன் வேதனை யாருக்கும் புரியவில்லையே! அருணா அவனருகில் வேண்டாம். அவனுக்குத் தாங்கத் திடம் இல்லை...கூடவே ஓர் உவகை. அவள் அவனோடு இருக்கப் போகிறாள். உடன் இருந்து பழகுவாள். அந்தச் சோதனை வேண்டாம்.... அருணா.... ஐயோ, அண்ணன் மனைவியை அந்தக் கண் கொண்டு பார்த்திருந்ததனால்தானோ பார்த்த கண்கள் பழுதாகி விட்டன? இது தண்டனையா? கட்டுப் போட்டிருந்த கண்களுக்கு ஒருகால் இனி பார்வையே திரும்பா விட்டால்? தண்டனை.... அருணா.... கூடாது....

மீண்டும் சுழற்சியில் நாட்கள் நசித்தன. இரண்டு மாத காலம் அணு அணுவாய் நீண்டு கொண்டிருந்த பயத் தோற்றம், பரபரப்பு, கனவின் ஊர்ச்சி, உணர்வின் உள்ளுயிராய் ஆழத்துள் கோத்துச் சென்ற சஞ்சலம். அவள் அருகில் இருக்கிறாள் என்ற அநுபவம் காற்றுப் போல் காட்சியற்ற உணர்வாக இதயத்துள் அழுந்தியது. கண்களுக்கு முறையாகச் சிகிச்சை நடைபெற்றது. கட்டுக்களுக்குப் பின் பார்வை மறைந்து கிடந்தது. அவளைக் கண்ணால் காண முடியவில்லை. ஆனால் எங்கும் அவளே நிறைந்திருந்தாள்.

வறண்ட உதடுகளுக்குப் பின்னே துடிக்கும் நெஞ்சை மறைத்து அவன் படுத்திருப்பான். அருகில் அவள் அவனுக்குப் புத்தகம் படித்துக் கொண்டிருப்பாள். குரலில் என்ன இதம்! என்ன பரிவு! ''கதை பிடித்திருக்கிறதா ரகு? இன்னொன்று படிக்கட்டுமா?''

''ஒன்றும் வேண்டாம்.''

ஒரு நாள் புரண்டு புரண்டு படுத்தான். தலைக்குப் போதிய உயரம் கிட்டவில்லை.

''தலையணை கீழே விழுந்திருக்கிறது ரகு. இதோ எடுத்துத் தருகிறேன்.''

ஒரு நிமிஷம் நிசப்தம். பிறகு —

''கொஞ்சம் தலையை உயர்த்துகிறீர்களா?'' என்று கேட்டாள்.

உயர்ந்த தலைக்குக் கீழே மெத்தென்ற பஞ்சின் அணைப்பு. தலையைத் தாழ்த்துமுன் ஊன்றிய முழங் கையில் பிடிப்பு வழுக்கி விட்டது. தடுமாறியவனை அவள் சட்டென்று பிடித்துக் கொண்டு மெள்ளச் சரியாகப் படுக்க வைத்தாள். அவனுக்கு உடலில் அனல் வெள்ளம் சுழலிட்டது. ஆயினும், பரிவுடன் சுற்றித் தாங்கிக் கொண்ட மென் கரங்களில் தடுமாற்றம் இல்லை. கரை காணாத கருணையும் கவலையும் தீட்டிய மென்மையின் அமைதி அவற்றில். அதையும் அவனால் உணர முடிந்தது.


ஆரோக்கியத்தை வளருங்கள்



ஆண்டு முழுவதும்
ஆரோக்கியத்துடனிருக்க,


குடும்பத்தினர் அனைவரும் அருந்துவது

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் | சிவப்பு லேபில்



வெறும் மருந்துமட்டுமல்ல, நம்பிக்கைக்குப் பாத்திரமான டானிக்குமாகும்!

- வருடம் முழுவதும் முதியோர், சிறுவர் யாவரும் சுவைத்துப் பருகுவதற்கு உகந்த இனிய டானிக் வாட்டர்பரீஸ்.
- ரத்தத்தைச் செழிக்கச் செய்து, நரம்புகளுக்கு வலுவூட்டுகிறது.
- பசியின்மைக் கோளாறுகளையும், உணவுக் குறைகளையும் சரிசெய்கிறது வாட்டர்பரீஸ். பிணியாறும் பருவத்திற்குப் பிரத்தியேகமாக உகந்தானது.
- பொது பலவீனம், ஊட்டக் குறைவு, சோர்வு, உணவிலே உலோகப் பொருள் குறைபாடு, மிதமிஞ்சிய உடல், உள்ளத் தளர்ச்சிகள் யாவினுக்கும் உகந்ததெனச் சிபாரிசு செய்யப்படுகிறது வாட்டர்பரீஸ்.



வார்னர்-லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏவில் இணைக்கப்பெற்றது)

WCRY-10-TAM

> இங்கே, இந்த நாட்டில் மட்டுமே, மனித உள்ளமானது மனிதர்களை மட்டுமல்ல, பறவைகளையும் மிருகங்களையும், செடி கொடிகளையும் தன்னுடன் சேர்த்து அரவணைக்கும் அளவுக்கு விரிவடைந்தது. மிக உயர்ந்த கடவுளர் முதல் சிறு தூசு வரை மிக உயர்ந்தோரும், மிகத் தாழ்ந்தோரும் இவர்கள் எல்லோருமே மிக விரிவாக அகன்று, நீண்டு, ஓங்கி வளர்ந்த மனித உள்ளங்களில் இடம் பெற்றுள்ளனர். —சுவாமி விவேகானந்தர்

''ரகு, உங்களுக்குச் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன்.''

''ஒன்றும் வேண்டாம். தூக்கிப் போ.''

''என்ன கொண்டு வந்திருக்கிறேன், சொல்லுங்கள், பார்க்கலாம்?''

''விஷம். அதைக் கொடுத்து விடேன்.''

''குழந்தை போல் முரண்டினால் என்ன செய்வது? உங்களுக்குப் பிடிக்குமே என்று விதம் விதமாய்ப் பழங்கள் வாங்கி 'ஸாலட்' செய்திருக்கிறேன் இன்று. இந்தாருங்கள்.'' தட்டு அருகில் வந்தது போலும். சாம்பாரின் மணம் எழுந்தது. அவன் கையை அவள் மெல்ல எடுத்துத் தட்டில் பிசைந்து வைத்திருந்த சாதத்தின் மேல் இட்டாள். துடிக்கும் மரக் கட்டையாய் அவள் விரல்களுள் அவன் கை கிடந்தது. ''சாப்பிடுங்கள்.''

விடுதியின் பணிப் பெண்ணை விட அதிகப் பரிவு அவள் செயல்களில் பொலியும்.

இளைப்பு.... மயக்கம்..... கடைசியில் ஒரு நாள் கண்கள் முன் மங்கலான வடிவங்கள்.

''மெள்ள, கொஞ்சம் கொஞ்சமாகத் திறவுங்கள் ஸார்.'' — வைத்தியரின் குரல்.

''ரகு, ஜாக்கிரதை.'' உடன் பிறப்பு மட்டுமே அறியும் கவலை தோய்ந்த அன்பு.

கண்களைத் திறந்தான். முதலில் கூசியது. இரண்டு மாதங்களுக்குப் பின் விழிப்பு. அந்த விழிப்பின் அருமையைப் பழைய இருட்டின் நிலைவிரல் ஆவலுடன் பற்றிக் கொண்டான். சிறிது நேரம் கண்கள் மேல் இன்னும் கட்டு இருப்பதைப் போல் சதை மேல் ஓர் அழுத்தம். பிறகு திடீரென்று ஆறுதல் வந்து தாக்கியது. அப்பாடா, கடைசியில் விடுதலை! இனி இங்கு இருக்க வேண்டாம். தொலைவில் வெகு தொலைவில் — எங்காவது கண் காணாமல் போய் விட வேண்டும்.

''ரகு! ரகு!''

''பாஸ்கர்!'' அண்ணனின் ஆர்வப் பிடிக்குள் அவன் கைகள் அமிழ்ந்தன. அமுக்கிய வேகத்தில் நசுங்கி விடும் போலவே இருந்தது. அத்தனை தாபம், எதிரில் இருந்தவனுக்கு. ''ரகு...ரகு...இந்த நாளுக்காக எவ்வளவு காத்திருந்தேனடா! எங்கே உன் பார்வையே போய் விடுமோ என்று...'' கண்களில் நீர் முட்டியது. பார்த்துக் கொண்டிருந்த ரகுவுக்கு நெஞ்சை அடைத்தது.

''வருத்தப்படாதே, பாஸ்கர்! சரியாகி விட்டது. கவலைப்படாதே......''

இணைப்புக் கணம் இருவரிடையே மெல்லத் தயங்கியது. பிறகு தப்பி ஓட விழையும் தாபம் அவனுக்கு. இதயம் பரபரத்தது. பின்னால் நின்ற வடிவத்தைப் பார்க்கத் துடிப்பு. கூடவே 'வேண்டாம்' என்ற தற்காப்பு ஒதுக்கம். உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு புரட்சி வேகத்தோடு தலையைச் சட்டென்று உயர்த்தி அவள் நின்ற திக்கில் முழுப் பார்வையைத் திருப்பினான்.

கரு நிலவு குளுமையாய் வீசிக் கொண்டிருந்தது. ரகுவின் பார்வை அசைய வில்லை. இமைக்க மறந்த விழிகளுக்குள் இன்று எழுந்து நின்ற காட்சிதான் என்ன? அவள்தான் அது. ஆயினும்....! அந்தக் கருமை இருளாக இல்லை. இருளிலிருந்து இது என்ன, இன்னொரு விழிப்பா? அதே அழகுப் பிம்பம். அவன் உள்ளத்தை அலைய வைத்த வடிவழகு. ஆனால் இப்போது அதைப் பார்க்கும் போது தோற்றம் மட்டுமாக இல்லை. இரண்டு மாதங்களாகப் பரிந்து செய்த சேவை. செயல்களின் இதம். பேச்சின் மென்மை. ஆம், ஸ்பரிசத்தின் கனிவு. பழைய கவர்ச்சிக் காலத்தில் இத்தன்மைகளை அவன் உணர்ந்திருக்க வில்லை. கண்ணால் மட்டுமே முன்பு பார்த்திருந்த வடிவம், கண் மூடியிருந்த போது அனுபவித்து உணர்ந்த இந்த உள் குணங்களின் நினைவையும் சேர்த்துக்கொண்டு உடலோடு உள்ளமும் சேர்ந்த பெண்மையின் முழுக் காட்சியாய் இப்போது அவன் முன் நின்றது. அப்படிக் கனிந்த காட்சியில் ஒரு புதிய முதிர்ச்சி, ஆழம். துன்புறுத்தியதாக அவன் எண்ணியிருந்த நெருக்கமும் அன்பும் மேல் சலனங்களைத் தாண்டி அவனது உள்ளுயிரின் எத்தகைய ஆழத்தை எட்டியிருக்கின்றன என்பதைத் திடீரென்று உணர்ந்தபோது ஒளியைத் தாங்க முடியாமல் அவன் கூசினான். வெறும் அழகு என்று அவன் பார்த்து வந்த போது நெஞ்சு மயக்கத்தில் சிக்குண்டு இருந்தது. ஆனால் பெண்மை என்பது புற அழகு மட்டும்தானா? பரிவும் பாசமும் இதமளிக்கும் கருணை மொழியும் இன்னும் எண்ணற்ற அகப் பண்புகளும் சேர்ந்த ஆராதனைக்குரிய பொருளல்லவா அது? இப்போது கையெடுத்துக் கும்பிட வேண்டும்போல் இருந்தது.

''ரகு, கண் நன்றாய்த் தெரிகிறதோ?'' என்று விசாரித்தாள் அருணா.

''ம்.''

குரலின் இனிமை, அதுவும் அந்தக் கருணையின் ஓர் அம்சம். தன்னை நோக்கிய அவள் கண்களை அவன் நிமிர்ந்து நேராகப் பார்த்தான். கடல் போல் விரிந்த கருமை.

கரு நிலவு — அது மூவுலகுக்கும் அன்னையாகியவளின் முகத்தில் துலங்கும் காந்தியல்லவா!

''இங்கேயிருந்து டிஸ்சார்ஜ் ஆனதும் நேரே வீட்டுக்குப் போகலாம், என்ன ரகு?'' என்றான் பாஸ்கரன் கவலையோடு.

''வீட்டுக்கு என்று உங்கள் அண்ணா குறிப்பிடுவது நம் வீட்டுக்கு'' என்று சிரித்தாள் அருணா.


அவனும் சிரித்தான்.

''புரிகிறது மன்னி!''


Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

மக்ளீன்ஸ்

உபயோகித்து
அந்த அதிகமான வெண்மையைப்
பாருங்கள்!



இவ்விதம் சோதியுங்கள்



1. உங்கள் நாக்கினால் பற்களைத் தடவுங்கள். அவற்றின் மேலுள்ள பாசியை உணர்கிறீர்களா?
2. இப்போது, மக்ளீன்ஸ் பற்பசைகொண்டு பற்களைத் தேயுங்கள். அது பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கிக் காப்பதுடன் உங்களுக்குப் புதுமையான உணர்ச்சியை அளிப்பதை உணர்வீர்கள்.
3. அந்த அதிகமான சுத்தத்தை உணருங்கள்... அந்த அதிகமான வெண்மையைப் பாருங்கள்.



மக்ளீன்ஸ் பழுப்பு நிறமடைந்த
பற்களை வெண்மையாக்குகிறது!

MTP/LP/3/63 TMA

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon